

# திருக்கோயில்

மார்ச் - ஏப்ரல் 1984 விலை ரூ. 4-00





சென்னை, பூங்கா நகரிலுள்ள அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயிலில், சுமார் ரூபா 20 இலட்சம் மதிப்பில் செய்யப்படும் தங்க ரதத்திற்கான தூய மெல்லிய தங்கத் தகடுகளைக் கொண்டு மெருகேற்றும் பணியை, அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், மேற்படி கோயில் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைத்தல். தங்க மெருகேற்றப் பெற்ற தகடுகளை அமைச்சர் அவர்கள் பார்வையிடுதல். (17.5.84)



சென்னை, வடபழனி அருள்மிகு வடபழனியாண்டவர் திருக்கோயிலின் தங்க ரதத்தை, அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் வெள்ளோட்டத்திற்குத் துவக்கி வைத்தல். மீன்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு கே. கலைமணி அவர்களும் உடனுள்ளார். (15-4-84).

முகப்பு

அருள்மிகு ஊர்த்துவ தாண்டவர் (நடராசர்), சிவகாமி அம்மை, திருவாலங்காடு

# திருக்கோயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 26 | திருவள்ளுவர் ஆண்டு 2015, ருத்ரோத்காரி ஆண்டு - மாசி மார்ச், ஏப்ரல் 1984 விலை ரூ. 4-00 | மணி : 3, 4

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

***திருக்கோயில்*** திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாளுக்கு நாள் உயர்ந்துவரும் தாள்விலை, அச்சகக் கட்டணம், அஞ்சல்தலைக் கட்டணம் காரணமாக, 1983 ஜனவரி முதல் ''திருக்கோயில்'' திங்கள் இதழின் ஆண்டுச்சந்தா உள்நாட்டிற்கு ரூ.15 லிருந்து ரூ.24 ஆகவும், இலங்கை மலேசியா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.25 -லிருந்து ரூ.36 -ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆதலின், திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா 1983 ஜனவரி மாதம் முதல், பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகின்றது:**

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. | 24.00 |
| வெளிநாடு | ரூ. | 36.00 |

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

அனைத்துலகச் சைவசித்தாந்த முதற் கருத்தரங்கம்
—ஆசிரியர்

சைவசித்தாந்தம்
—திரு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ். (அறநிலைய ஆணையர்)

சைவசித்தாந்தத் தத்துவம்
—மேதகு பா. இராமச்சந்திரன், எம்.ஏ. (கேரள ஆளுநர்)

இந்து மதமும், வழிபாடும்
—திரு வி. கலியாணசுந்தரனார்

ஆகமங்கள் எத்தனை?
—திரு மு. அருணாசலம்

கல்வெட்டுகளில் மாணிக்கவாசகர் பற்றிய செய்திகள்
—திரு என். சேதுராமன், பி.எஸ்ஸி., டி.எம்.ஐ.டி.

திருமால் திருவுருவங்கள்
—திரு. என். எஸ். தாத்தாசாரியார்

சங்க நூல்களில் இராமாயணக் குறிப்புகள்
— திரு ந. ரா. முருகவேள்

ஆழ்வார்கள் வரலாறு
—ஆசிரியர்

திருவடி வணக்கம்
—டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம்

திருமூலர் திருமந்திரம்
—கவியோகி சுத்தானந்த பாரதியார்

சைவசித்தாந்தத்தின் சிறப்பியல்புகள்
—ந. ரா. முருகவேள்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# அனைத்துலகச் சைவசித்தாந்த முதற் கருத்தரங்கம்

## 1. தருமபுர ஆதீனம்

நம் தமிழ்நாட்டின்கண் உள்ள சைவப் பெருந் திருமடங்கள் என்னும் ஆதீனங்கள், 18 என்பர். அவைகளுள் ஒன்றாகப் பழமையும் பெருமையும் மிக்குத் திகழ்வது, தருமபுர ஆதீனம். அது சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்பு, திருவாரூர்க் கமலை ஞானப்பிரகாசர் திருவருள்பெற்ற குருஞானசம்பந்தர் என்னும் குருமுதல்வரால், மயிலாடுதுறைக்கு அருகில் நிறுவப்பெற்றது. அதனை, 25 குருமகா சந்நிதானங்கள் அருளாட்சி புரிந்து, சிறப்புற வளர்த்துப் போந்தருளினர். அதன்கண் இப்போது 26ஆவது குருமகா சந்நிதானமாக அமர்ந்து, தமிழும் சைவமும், பலதிறச் சிறந்த அறச்செயல்களும் தழைத்தினிது ஓங்க, அருளாட்சி புரிந்து வருபவர், திருவார்திரு சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் ஆவர்.

தருமையாதீனத்தின் அருளாட்சியிலேயே சீர்காழி, வைத்தசுவரன்கோயில், திருக்கடவூர், திருப்பனந்தாள், திருநள்ளாறு, திருவையாறு முதலிய 27 திருக்கோயில்கள், சிறந்த முறையிற் பரிபாலிக்கப்பெற்று விளங்கி வருகின்றன. திருச்செந்தூர் முருகனன் திருவருள்பெற்ற குமரகுருபர சுவாமிகள், கந்தபுராணச் சுருக்கம் பாடிய சம்பந்த சரணாலயர், அரிய பல நூல்கள் இயற்றிய வெள்ளியம்பலவாணத் தம்பிரான், வேளூர்க் கலம்பகம் இயற்றிய படிக்காசுத் தம்பிரான் முதலிய அருளாளர்கள் பலர், இவ்வாதீனத்தின் சீடர்களாக விளங்கிய ஞானத் தவ முனிவர்களே எனின், இவ்வாதீனத்தின் அருமை பெருமைகளை யாவரும் இனிதறியலாம்.

## 2. கருத்தரங்கம்:

இயல்பாகவும், பொதுவாகவும் எப்போதுமே தெய்விகச் சூழலில், அருளமைதியில் நிலவி வருகின்ற தருமபுர ஆதீனம், அண்மையில், மே மாதம் 11-12-13 தேதிகளில், சிறந்த இனிய விழாக்கோலம் கொண்டு விளங்கியது. எங்கு நோக்கினும் எழிலார்ந்த காவணங்களும், வரவேற்பு வளையங்களும், தோரணங்களும் பிறவும் அணி செய்தன. மக்களிடையில் அளவற்ற களிப்பும் பரபரப்பும் மகிழ்ச்சியும் ஆர்வமும் பொங்கிப் பெருகின.

தருமையாதீனத்தில் அவ்வப்போது அடிக்கடி தெய்விக விழாக்களும், குருபூசை விழாக்களும், கலைநிகழ்ச்சி விழாக்களும் இடையறாது ஆண்டு முழுவதுமே நடைபெற்றுக் கொண்டிருக்கும். அவ்வாறு நடைபெறுவது தொன்றுதொட்டு வருப் வழக்கமே யாயினும், அவைகளையெல்லாம் விட, மிகமிகச் சிறப்பான நிலையில், மேற்குறித்த மூன்று நாட்களிலும், தருமையாதீன வளாகமும் சூழலும், புதியதோர் இன்ப அன்பு — ஆர்வ வெள்ளத்தின் பெருக்கத்தில் திளைத்து மகிழ்ந்திருந்தன.

ஏராளமான அன்பர்களும் அறிஞர்களும் பக்தர்களும் பெருந்திரளாகக் கூடிக் குலவி மகிழ்ந்தனர்; ''சிரிப்பார், களிப்பார், தேனிப்பார், திரண்டு திரண்டு உன் திருவார்த்தை விரிப்பார், கேட்பார், மெச்சுவார்'' என்று மணிவாசகர் பாடியதை மெய்ப்பித்தனர். கோடைக்கால வெப்பம் தெரியாதபடி ஈசன் இணையடி நிழலைப் போல, எங்கும் குளிர்ச்சியும் மகிழ்ச்சியும் நிலவின. எல்லார் உள்ளத்திலும் குதூகலம் பொங்கித் ததும்பிக்குழைந்து பொலிந்து திகழ்ந்தது. அதற்குக் காரணம், வரலாற்றுச் சிறப்புமிக்க முறையில், அனைத்துலகச் சைவசித்தாந்தக் கருத்தரங்கம், தருமையில் முதன் முதலாகப் பெருஞ் சிறப்பு ஓங்க நிகழ்ந்ததே யாகும்.

## 3. சைவசித்தாந்தம்:

சிவபிரானை முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம், சைவம் எனப்படும். அச்சைவத்தின் சித்தாந்தம் அல்லது கொள்கையே, பொதுவாகச் சைவ சித்தாந்தம் என வழங்கப்படும். எனினும் சைவம் என்பதும், சைவசித்தாந்தம் என்பதும், தனித்தனிப் பொருட் குறிப்புடையன ஆகும். சைவம் என்பது இமயம் முதல் குமரி வரையில் இந்திய நாடு முழுவதிலும் பரவியுள்ளது. ஆயினும்,

காசுமீரச் சைவம் என்றும், கன்னடநாட்டு வீரசைவம் என்றும், பெயர்கள் வழங்கக் காண்கின்றோம். அதுபோல, நம் தமிழ்நாட்டுக்கே தனிச் சிறப்பாக உரிய சைவக் கொள்கையே, சைவசித்தாந்தம் என வழங்கி வருகின்றது.

வசுகுப்தர், கல்லடர், சோமானந்தர், அபிநவகுப்தர் முதலிய சான்றோர்களால், காசுமீர நாட்டில் பரப்பப் பெற்றது, காசுமீரச் சைவம். பசவேசுவரர், சென்னபசவேசுவரர், சித்தராமையர், அல்லமாப்பிரபு முதலிய அருளாளர்களால் வளர்க்கப் பெற்றது, கன்னடநாட்டு வீரசைவம். அங்ஙனமே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் என்னும் சமயாசிரியர்கள் நால்வராலும், மெய்கண்டார், அருள்நந்திசிவம், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் என்னும் சந்தான ஆசிரியர்களாலும், அவர்தம் வழிவந்த மற்றும் பற்பல அருட்பெருஞ் சான்றோர்களாலும், பரப்பி வளர்க்கப் பெற்றதே ''சைவசித்தாந்தம்'' எனப்படும்.

''சைவ சித்தாந்தமானது, புறச்சமயத்தவர்களுக்கு இருளாய், அகச்சமயத்தவர்க்கு ஒளியாய் விளங்கும்; அளவை நெறிக்கு அளவையாகத் திகழும்; இறைவனையும் உயிர்களையும, பொன்னும் பணியும் போல் அபேதம், இருளும் ஒளியும்போல் பேதம், சொற்பொருள் போல் பேதாபேதம் என்று கூறும் பிற சமயங்கள் போலாமல், இறைவன் உயிர்களுடன் உடலும் உயிரும்போல ஒன்றாகவும், கண்ணும் சூரியனும்போல் வேறாகவும், கண்ணொளியும் உயிரறிவும் போல் உடனாகவும் இயைந்து நிற்றலை இனிது உணர்த்தும்; வேதாந்த நூல்களின் •பிழிவாகவும் தெளிவாகவும் திகழும்''.

## 4. ஆய்வு மையம்

இத்தகைய சைவ சித்தாந்தத்தைப் பிறசமய தத்துவ இயல்புகளுடன் ஒப்புநோக்கி ஆய்வு செய்து, உலகெங்கும் அதனைப் பரவச் செய்தல் வேண்டும் என்ற பெருநோக்கத்தில், தருமையாதீனத்தின் 26ஆவது குருமகாசந்நிதானம் திருவார்திரு சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், ''சைவசித்தாந்த மேல் நிலை ஆய்வு மையம்'' என்னும் நிறுவனம் ஒன்றைத், தருமையாதீனத்தில் ரூபா 20 இலட்சம் மூலதனத்தில் தொடங்குவதற்குத் திருவுள்ளம் பற்றியருளினார்கள்.

## 5. பாரதிதாசன் பல்கலைக் கழகம் :

இவ் ஆய்வுமையத் தொடக்கத்திற்கு முன்னோடியாகவே, தருமையாதீனம், திருச்சிராப்பள்ளிப் பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைந்து, 1984 மே மாதம் 11-12-13வெள்ளி சனி ஞாயிறு ஆகிய மூன்று நாட்களிலும் இக் கருத்தரங்கத்தினை, (First International Seminar on Saiva Siddhantham) நன்கினிது நடத்தியது. அயல் நாடுகளிலிருந்தும், தமிழகத்தின் பல நகரங்களிலிருந்தும், பல்கலைக் கழகங்களிலிருந்தும், சைவசித்தாந்தப் பேரறிஞர்கள் பலர், இக்கருத்தரங்கிற்கு வருகை தந்து சிறப்பித்தனர். 100-க்கு மேற்பட்ட அறிஞர்கள், ஆங்கிலத்திலும் தமிழிலுமாக ஆய்வுக் கட்டுரைகள் அனுப்பியிருந்ததுடன், அவர்களிற் பெரும்பாலோர் கருத்தரங்கிற்கு நேரிலும் வந்து கலந்து கொண்டு, விரிவுரைகள் நிகழ்த்தினர். 500-க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள், உரிய கட்டணம் ரூ. 30 செலுத்தி, இவ்விழாவிற்கு வருகைதந்து நிகழ்ச்சிகளைக் கண்டு களித்துப் பயனடைந்தனர். இவர்களுக்கெல்லாம் விழா நாட்களில், ஒவ்வொரு வேளையும், 'உண்டி நாலுவிதத்தினில், ஆறு சுவைத் திறத்தினில்' என்று சேக்கிழார் பாடியது போன்று சிறப்பான விருந்துணவுகள் வழங்கப் பெற்றன. 'சோறு மணக்கும் மடங்கள் எலாம்; தூய்மை மணக்கும் இடங்கள் எலாம்' என்று மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடியது, எத்துணை உண்மை என்பது புலனாயிற்று.

## 6. வருகை தந்த பெருமக்கள் :

இக்கருத்தரங்கிற்கு, முன்னாள் இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் மேதகு பி. டி. ஜாட்டி, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு. ஆர். செங்கோட்டுவேலன், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன், கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம், அறநிலைய ஆணையர் திரு கு. ஆளுடையபிள்ளை, மத்திய அரசின் முன்னாள் அமைச்சர் திரு. ஓ. வி. அளகேசன், தொழிலதிபர் டாக்டர் திரு. நா. மகாலிங்கம், பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. பி. எஸ். மணிசுந்தரம், 'முத்தமிழ்க் காவலர்' டாக்டர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், திருமதி சௌந்தரா கைலாசம் முதலிய பெருமக்கள் பலர் வந்து சிறப்பித்தனர்.

## 7. சமய நூல்களின் திருவுலா :

தருமபுர ஆதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில், 11-5-84 காலை 9 மணி முதல் கருத்தரங்கம் தொடங்கியது. அதற்கு முன்பே காலை 7 மணி முதல் 9 மணி வரையும் புகழ்மிக்க இசைவாணர்களும், ஓதுவார் பெருமக்களும் கலந்து கொண்ட திருமுறைப் பாராயணத்துடன், 6 யானைகள் மீது, வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் திருமுறை சித்தாந்தசாத்திரச் சுவடிகள் ஆகியவை, திருவீதியுலா' எழுந்தருளச் செய்யப் பெற்றன. ஆதீனத்தின் அடியவர்களும், தம்பிரான்மார்களும், பக்தர்களும், வெளியூர்களிலிருந்து வந்திருந்த 500-க்கும் மேற்பட்ட பார்வையாளர்களும், பிறரும் இந்தத் திருவீதியுலாவில் கலந்து கொண்டனர்.

## 8. திறப்பு விழாக்கள் :

11-5-84 வெள்ளியன்று மாலை, தருமபுரத்தில் அருள்மிகு மகாலட்சுமி துர்க்காதேவி திருக்கோயிலின் மகாமண்டபத் திறப்பு விழா, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்களாலும்; கலைக் கண்காட்சித் திறப்பு விழா, அறநிலைய ஆணையர் திரு. கு. ஆளுடையபிள்ளை, இ. ஆ. ப. அவர்களாலும், நிகழ்த்தப் பெற்றன.

## 9. குருமகா சந்நிதானங்கள் :

தருமையாதீனம் திருவார்திரு சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள், திருவண்ணாமலை ஆதீன குருமகா சந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார், காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீன குருமகாசந்நிதானம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், பேரூர் ஆதீனம் தவத்திரு. சாந்தலிங்க இராம சுவாமி அடிகளார், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின அதிபர் 'கயிலை மாமுனிவர்' தவத்திரு. முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், தவத்திரு வித்துவான் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்(சீர்காழி), தவத்திரு வித்துவான் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் (திருநள்ளாறு), தவத்திரு வித்துவன் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் (மௌனம் மடம், திருச்சி), திருவாவடுதுறை ஆதீனத்தின் பிரதிநிதிகளாக அனுப்பப்பெற்றிருந்த தம்பிரான்சுவாமிகள் இருவர், ஆகிய ஞானத்தவ முனிவர்கள் பலரும், விழா நிகழ்ந்த மூன்று நாட்களிலும் கலந்து கொண்டருளியது, கண்ணுக்கு இனிய காட்சியாக இருந்தது.

## 10. அயல்நாட்டுப் பெருமக்கள்

இக்கருத்தரங்கத்திற்கு டாக்டர் திரு. இரா. தண்டாயுதம், டாக்டர் திரு. எஸ்.என். கந்தசுவாமி (மலேசியாவிலிருந்தும்)—திருமதி கே. ஜ. கொப்பட்ரேயர், திரு. லியோன் அன் செட்டே (கானடாவிலிருந்தும்)—திரு. கே. ஞானசூரியன் (இலண்டனிலிருந்தும்)— திருமதி மா. இரத்தினா நவரத்தினம், பேராசிரியர் திரு. கே. இலட்சுமணன் (ஸ்ரீலங்காவிலிருந்தும்)—பேராசிரியர் திரு. எர்மன் (போலந்திலிருந்தும்)— திரு. வி. கே. பாலசுந்தரம், 'சைவப் பெரியார்' திரு. ஆர். வி. கந்தையா, பேராசிரியர் திரு. பேரம்பலம் (கோலாலம்பூரிலிருந்தும்)—வருகைதந்து பல்வேறுநிகழ்ச்சிகளில கலந்து கொண்டு, மகிழ்ந்தும் மகிழ்வித்தும் சிறப்பித்தனர். மொத்தம் பத்து அமர்வுகள் நடைபெற்றன; சுமார் 80 பேரறிஞர்கள் உரை நிகழ்த்தினர்.

## 11. வெளியிடப்பட்ட நூல்கள்

இக்கருத்தரங்கை முன்னிட்டுப் பல சிறந்த அரிய ஆராய்ச்சி நூல்கள், தருமபுர ஆதீனத்தின் சார்பில் சிறப்பு மலர்களாக வெளியிடப் பெற்றன. அவைகளாவன: (1) தருமையாதீனத் தலைவர் திருவார் திரு. சண்முகதேசிகர் அவர்கள் நிகழ்த்திய அருளுரைகளின் தொகுப்பாகிய ''திருவருட்செய்தி'' பெங்களூர் திரு. எம். வி. ஜெயராமன் அவர்களாலும், (2) திருமதி இரத்தினா மா நவரத்தினம் அவர்கள் இயற்றிய Siddhanta Saivam in Essence and Manifestation என்னும் நூல், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. சை. வே. சிட்டிபாபு அவர்களாலும், (3) மகாவித்துவான் திரு சி. அருணைவடிவேலு முதலியார் எழுதிய ''சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்'' என்னும் நூல், 'முத்தமிழ்க் காவலர்' திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களாலும், (4) திருமந்திரம் 4-5-6-ஆம் தந்திரங்களின் விளக்கக் குறிப்புரை நூல், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு ஆர். செங்கோட்டுவேலன் அவர்களாலும், (5)வழக்கறிஞர் திரு டி. என். இராமச்சந்திரன்அவர்கள் தொகுத்த Saiva Siddhantam: An Explication & Assessment, by Scholars the world over என்னும் நூல், கல்வியமைச்சர் மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் அவர்களாலும் வெளியிடப்பெற்றன.

(6) இலக்கியப் பேரறிஞர் திரு. மு. அருணாசலம் அவர்கள் பதிப்பித்த 'சதமணிக்கோவை' என்னும் நூல், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவா மாண்புமிகு க. இராஜாராம் அவர்களாலும், (7) 'திருக்கோயில்' ஆசிரியர் அவர்களின் 23 ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்துக் குன்றத்தூர்ச் சேக்கிழார் பதிப்பகம அச்சிட்ட 'சைவசித்தாந்தம' என்னும் நூல், தருமையாதீனம் திருவார் திரு. குருமகாசந்நிதானம் அவர்களாலும் வெளியிடப் பெறறன.

தருமையாதீனத்தின் சார்பில் (8) ''அனைத்துலகச் சைவசித்தாந்த முதற் கருத்தரங்கத்தின் விழா மலர்'' (சுமார் 200 பக்கங்களும், அழகிய பல படங்களும் கொண்டது): மற்றும் கருத்தரங்கிற்கு அறிஞர்கள் அனுப்பியிருந்த ஆய்வுக் கட்டுரைகளின(9)''சுருக்கத்தொகுப்பு'' நூல் (Synopses) ஆகியனவும விழாவின்கண் வெளியிடப் பெற்றன.

## 12. 'சித்தாந்த கலாநிதிகள்'

கருத்தரங்கு விழாவின் நிறைவு நிகழ்ச்சியின்போது, தருமையாதீனத்தின் தலைவர் அவர்கள், (1) பேராசிரியர் டாக்டர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம், (2) பேராசிரியர் திரு. டாக்டர் கே. செல்லப்பன்,(3)மலேயா டாக்டர் இரா. தண்டாயுதம், (4) டாக்டர் திரு எஸ். என். கந்தசுவாமி, (5) திருமதி, இரத்தினா மா. நவரத்தினம், (6) திருமதி கொப்பட்ரேயர் (7) பேராசிரியர் திரு கே. இலட்சுமணன், (8) மலேயா திரு.வி.கே. பாலசுந்தரம் (9) டாக்டர் என்.ஆர். பட் என்னும் ஒன்பதின்மருக்குச் ''சித்தாந்த கலாநிதி'' என்னும் பட்டமும், சென்னை டாக்டர் ஏ. வி. ஜெயச்சந்திரன் அவர்களுக்குத் '' திருக்கோயிற் கலாநிதி '' என்ற பட்டமும் வழங்கிப் பொற்பதக்கம் அணிவித்து, பொன்னாடை போர்த்தி வாழ்த்தியருளினார்கள்.

விழா நாட்களில் இசைப் பேரரசி டாக்டர் சேலம் ஜெயலட்சுமி குழுவினர் - திருமதி சுவர்ணா சோமசுந்தரம், திருமதி ருக்மிணி இராமசாமி குழுவினர் ஆகியவர்களின் திருமுறைப் பண்ணிசை அரங்கும்; திருமதி சித்ரா விசுவேசுவரன் குழுவினரின் தனிநடனமும், திருநீலகண்டர் நாட்டிய நாடகமும், மயிலாடுதுறைக் கணநாதர் பொம்மை நாடக சபையின் ''வள்ளியம்மை திருமணம்'' கலைநிகழ்ச்சியும் கவினுற நடைபெற்றன.

## 13. ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம்

காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீமத் பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருவுள்ளப் பாங்கின்படி, ஸ்ரீமத் ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் அவர்கள், ஸ்ரீசங்கர மடத்தின் சார்பில், விலை உயர்ந்த பொன்னாடை முதலிய அருட் பிரசாதங்களைத் தக்கவர்கள் மூலம் அனுப்பி வைத்து, தருமையாதீனத் தலைவர் அவர்களுக்குத் தம்முடைய அருள்நிறைந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டமை, இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

## 14. முடிவுரை

தமிழுலகிலும், சைவ உலகிலும், சைவ சித்தாந்தத் தத்துவ வரலாற்றிலும், ஒருபெரும் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகப் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க சிறப்பை, இக்கருத்தரங்கம் பெற்றுவிட்டது என்று துணிந்து கூறலாம். இத்தகைய கருத்தரங்கம், முதன் முதலாக இத்துணைப் பெரிய அளவிலும், பெருஞ்சிறப்பிலும் நிகழுமாறு நடத்தியருளிய தருமையாதீனத் தலைவர் அவர்களுக்குச் சைவ உலகம் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

**வளர்க தமிழ் !**

**வாழ்க சைவசித்தாந்தம் !!**

**—ஆசிரியர்.**

## வல்லபாசாரியர் (கி.பி. 1440–1518)

ஆந்திர நாட்டைச் சேர்ந்த தைத்ரிய மதவகுப்பில், தைலிங்கப் பிராம்மண குடும்பத்தில், மத்தியப் பிரதேசத்தில் ரெய்ப்பூர் என்னும் நகரத்திற்கு அருகில், கம்பாரணியம் என்னும் ஊரில் அவதரித்தார். காசிக்குச் சென்று கல்வி பயின்றார். பாரத நாடு முழுவதும் மூன்றுமுறை யாத்திரை புரிந்தார். விசயநகர அரசரின் பேரவையில் விருதுகள் பெற்றார். அலகாபாத்துக்கு அருகில் உள்ள ஆடெல் என்னும் கிராமத்திலேயே பெரிதும் வாழ்ந்தார். இவரது கொள்கை, உத்திரப் பிரதேசம், இராசபுதனம், சவுராட்டிரம், கூர்ச்சரம் முதலிய மாநிலங்களிற் பெரிதும் பரவியுள்ளது.

இறைவன் 'ஏகம்' என இருக்கும்நிலையை விடுத்து, 'அனந்தம்' ஆக விரும்பினார். அதனால் அவர் விகாரப்படாமலே, பிரபஞ்சத்தைத் தம்மிடம் இருந்து தோற்றுவித்தார். தீயினின்று பொறிகள் உண்டாவது போல, கடவுளினின்று ஆன்மாக்கள் உண்டாயின. கடவுளின் 'சத்து' என்னும் கூற்றில் இருந்து உலகமும், 'சித்து' என்னும் கூற்றில் இருந்துஆன்மாவும் தோன்றின. சித்து, ஆனந்தம் என்பன பிரபஞ்சத்தில் மறைந்து கிடக்கின்றன. ஆன்மாவிடம் 'ஆனந்தம்' என்னும் இயல்பு மறைந்துள்ளது. பிரபஞ்சம் மாயையன்று; உண்மையாகவே உலகம் உள்ளது. அது பிரமத்தின் பரிணாமமேயாகும். பிரமத்தினுடைய லீலா விநோதங்களின் விளைவே பிரபஞ்சம். அறியாமையினாலேயே உலக வாழ்வாகிய பந்தம் ஏற்படுகின்றது. ஆன்மாக்கள் நித்தியப் பொருள்கள். ஆனால் அணுபரிமாணம் உள்ளவை. வினைப்பயன்களே நமது உயர்வு தாழ்வு, இன்ப துன்பங்களுக்குக் காரணம். கடவுளின் அருள்பெற்றால், தெய்வீக உடல் பெற்றுப் பிரமத்தின் இராச லீலையாகிய தெய்வீக இன்பத்தைத் துய்க்கலாம். பிரம ஞானம் பெற்றுப் பிரமத்தை வழிபடுவோர் புருஷோத்தமன் ஆக விளங்கும் இறைவன்பால் கலந்து விடுவர். இதுவே முத்தி நிலையின் சிகரம். 'என்னால் ஆவதொன்று இல்லை. எல்லாம் அவன் செயலே' என்று தெளிந்து கடவுளிடம் அன்பு செலுத்துவது 'புஷ்டி பக்தி' எனப்படும்.

இராமாநுசரும் மத்துவரும் கூறும் பக்திக்கு அறிவு அடிநிலை; வல்லபாசாரியர் கூறும் பக்திக்கு உணர்ச்சி அடிநிலை. சங்கரரின் கொள்கை, வேதாந்தம் அல்லது மாயாவாதம் என்று வழங்கப் பெறும். வல்லபாசாரியரின் கொள்கை, சுத்தாத்வைத வேதாந்தம்' எனப்படும்.

—ஆசிரியர்

# சைவசித்தாந்தம்

திரு. கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்.,
அறநிலையத்துறை ஆணையாளர், சென்னை-34.

அனைத்துலகச் சைவசித்தாந்த முதற் கருத்தரங்கத்தினையொட்டி, சீரிய கலைக் கண்காட்சியொன்றினை ஏற்பாடு செய்து, அதனைத் திறக்கும் பணியினை எனக்களித்த, தருமையாதீன குருமகாசந்நிதானம் அவர்களுக்கும், இன்றைய மாலை நிகழ்ச்சிகளில் சிறப்புப் பங்கேற்கும் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கட்கும், மற்றும் இங்குக் குழுமியுள்ள அறிஞர் பெருமக்களுக்கும், என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சைவசித்தாந்தம், சிவபரம்பொருளின் முழுமுதற் றன்மையைக் குறித்த சித்தாந்தங்களை நன்கு விளக்குவது. ''இந்தத் தத்துவக் கொள்கையானது இந்திய நாட்டிலுள்ள சமயக் கொள்கைகளுக்கெல்லாம் தலைசிறந்தது'' என டாக்டர் ஜி.யு.போப் கூறியுள்ளார். ரெவரண்ட் கௌடி அவர்கள், ''சமய ஆராய்ச்சித் துறையிலும், கொள்கை வாழ்க்கை என்பனவற்றின் வெளிப்பாட்டு முறையிலும், மிகமிகச் சிறந்த் தொன்மையுடையதாகத் தென்னிந்தியா பெற்றிருப்பது, சைவ சித்தாந்தமேயாகும்'' என்று தெளிவுபடக் கூறியுள்ளார். இவ்வளவு சிறந்த சமயக் கொள்கையினை மக்கள் அறிந்து அதன்வழி நின்று உய்ய மேற்கொள்ளப்படும் முயற்சிகள், பெரும் பாராட்டுக்குரியன.

அறிவியற் கண்ணோட்டத்தோடும், ஆராய்ச்சி நோக்கத்தோடும், செயல்படும் மக்கள் ஆராய்வதற்கு உரிய பொருள்கள் மூன்று. அவை கடவுள், உயிர்கள், உலகம் என்பனவாகும். உயிர்கள் அறிவுள்ளவை, உலகம் அறிவில்லாதது. உலகிலுள்ள அறிவு, மிகச் சுருக்கமானதேயாகும். உயிரறிவு உலகப் பொருள்களைத் தனித்தனியே சுட்டியறியும் சிற்றறிவேயாகும். அப்படிச் சிறிது அறிவதும்கூட, முற்றறிவை இயல்பாகப் படைத்துள்ள பரம்பொருள் ஒன்று அறிவிக்கத்தான், உயிர்கள் அறிகின்றன என்பதும் பெரியதோர் உண்மை. அறிவுடைப் பொருள்களைச் சித்து என்றும், அறிவில்லாத பொருள்களைச் சடம் என்றும் பெரியோர் கூறுவர். இவற்றையெல்லாம் இயக்கும் மேலான பொருளே கடவுள்.

சித்தாந்த சாத்திரங்கள் கடவுளைப் பதி என்றும், உயிர்களைப் பசு என்றும், உலகத்தைப் பாசம் என்றும் கூறும். எல்லாஆராய்ச்சிகளும் இந்த மூன்றுக்குள் அடங்கும். இவை பற்றிய அறிவை வளர்த்தல், மக்களின் ஆன்மநல முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. இம்மூன்று பொருள்களும், ஒன்றால் ஒன்று தோற்றுவிக்கப்படாமல், என்றும் உள்ள உண்மைப் பொருள்கள்.

எல்லாம் வல்ல பரசிவப்பொருள் உலகைப் படைத்தது, உயிர்களை மேல்நிலைக்கு உயர்த்துதற்காகவே! ஆகவே அது உலகங்கட்குள்ளும், உயிர்கட்குள்ளும் பிரியாமல் நின்று அவற்றை இயக்கி வருகின்றது. தானாக இயங்கமாட்டாத சடப்பிரபஞ்சத்தை, ஒருமுறைப்படி ஏதோ ஒரு சக்தி இயக்குவதையும், அதனால் உயிர்கள் படிப்படியாகத் தடைகளினின்றும் விடுபட்டுப் பேரானந்தப் பெருநிலை அடைவதையும் உணர்கின்றோம். இப்படியுள்ள பரம்பொருள் ஒன்றேதான். அப்பொருள் உருவம், அருவம் குணம், குறி இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. ''இன்ன தன்மையன் என்றறியொண்ணா எம்மான்'' என்று சுந்தரரும், ''மூவரும் முப்பத்து மூவரும், மற்றைத் தேவரும் காணாச் சிவபெருமான்'' என்று மாணிக்கவாசகரும் குறிக்கும் இப்பரம்பொருள், அன்பே உருவாய், பெருங்கருணைத் தடங்கடலாய், ஆன்மாக்களின் மெய், வாக்கு, மனம் ஆகியவைகளுக்கு அப்பாற்பட்டதாக இருப்பினும், உயிர்களோடு ஒன்றாகவும், வேறாயும், உடனாயும் உள்ளது.

---

தருமையாதீனத்தில் நடைபெற்ற அனைத்துலகச் சைவசித்தாந்த முதற் கருத்தரங்கு விழாவில், கலைக்கண்காட்சியினைத் திறந்து வைத்து, ஆணையர் அவர்கள் நிகழ்த்திய சிறப்பு உரை இங்கு வெளியிடப்படுகின்றது.

—ஆசிரியர்

ஆன்மாக்கள் எண்ணில்லாதவை, என்றும் உள்ளவை, எவராலும் படைக்கப்படாதவை. சிவத்திற்கும் பாசத்திற்கும் வேறானவை. இவற்றிற்கு இரண்டு சிறப்பியல்புகள் உள்ளன. ஒன்று பற்றுக்கோடின்றி நில்லாமை; அதாவது பாசத்தையாவது அல்லது பதியையாவது பற்றியே ஆன்மா நிற்கும். மற்றது சார்ந்ததன் வண்ணமாதல். எதைச் சார்ந்து ஆன்மாக்கள் நிற்கின்றனவோ, அதனோடு கலந்து அதன் தன்மையைத்தான் ஆன்மாக்கள் பெற்று இயங்கும்.

பாசமானது, ஆணவம், மாயை, கன்மம் என மூவகைப்படும். இவற்றில் ஆணவந்தான் மூல மலம். தான் ஒன்றேயாயினும், அனேக சக்திகளையுடையதாயிருப்பது. உயிர்களின் அறிவினை விளங்கவொட்டாமல், அதற்குத் தடையாயிருப்பது; தன்னையும் காட்டாமல், பிற பொருளையும் காணவொட்டாமல் மறைத்து நிற்பது.

மாயை என்பது, உலகம் தன்னிடம் ஒடுங்குதற்கும், தோன்றுதற்கும் காரணமாயிருப்பதால்; மாயையிலிருந்துதான் 36 தத்துவங்களும் இறைவனின் சக்தியால் தோற்றுவிக்கப்படுகின்றன. நமது சிற்றறிவு விளக்கத்திற்குக் காரணமாக இருந்து, நமக்கு இருளில் ஒளிகாட்டி உதவி புரிகின்ற ஒரு சிறு விளக்குப்போல, உயிர்களாகிய நமக்குத் துணைபுரிகின்றமாயையின்துணை கொண்டே, அதனையும் ஆணவமலத்தையும் கடக்கமுடியும் என்பது, இறைவன் வகுத்துள்ள நெறியாகும்.

கன்மம் என்பது, நாம் பெறும் பிறவிகளின் இயல்பை வரையறைப்படுத்தி, நானாவிதமான இன்பதுன்பங்களை விதிமுறைப்படி ஊட்டி வைக்கும். ஒவ்வொரு கன்மமும், தன்தன் பயனைத் தந்தே தீரும். ஆதலின் நாம் நன்றியுணர்வுடன் இறைவனை எண்ணி அன்புடன் வழிபட்டுப் பேரின்பம் பெறச் செயல்பட வேண்டும்.

சைவசித்தாந்தத்தின் சீரிய கொள்கைகளை, மக்களிடையே பரப்பப் பல்வேறு சாதனங்களைக் கையாளவேண்டும். உயிர்கள் உய்ய வேண்டுமென்ற பெருநோக்கு, இச் சித்தாந்தத்தின் கண்காட்சியமைப்பில் மேலோங்கி நிற்பதனைக் கண்டுணர்ந்து, நான் பெரிதும் மகிழ்கின்றேன். இக்கண்காட்சியை ஒலி, ஒளிக் காட்சி-தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் வழியும் அறிவுறுத்தி, நாம் பலவகைகளில் மேலும் சிவத்தொண்டு செய்யலாம் என்று குறிப்பிட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன், வணக்கம்!

---

## மத்வாசாரியர் (கி.பி. 1169–1278)

இந்தியாவின் மேற்குக் கரையில் உள்ள தென் கன்னட நாட்டில், உடுப்பிக்கு அருகில் கல்யாணபுரம் என்னும் ஊரில் தோன்றினார். தந்தை மத்திகேசபட்டர்; துளுமொழி பேசும் அந்தணர். இவர்தம் இயற்பெயர் வாசுதேவர் என்பது. அச்சுதப் பிரேட்சர் என்னும் வைணவத் துறவியிடம், துறவுநிலை பெற்றார். அவர் இவரை வேதாந்தப் புலமைக்கு அரசராக முடிசூட்டினார். பூரணமும் சுதந்திரமும் உடையதாக இருப்பதால், சாந்திக்கு உறைவிடமாக உள்ள பிரமம் ஆகிய ஆனந்தத்தை, அடையுமாறு செய்யும் வேதப் பொருளை விளக்கியதால், இவருக்குப் பூரணப்பிரக்ஞர், சர்வ தந்த்ர சுவதந்த்ரர், ஆனந்த தீர்த்தர் என்னும் பெயர்கள் வழங்கலாயின. பிரமத்தை அறியும் அவாவுடையவர் (பிரமஜிஞ்ஞாசு) என்பதனை விளக்கும் வகையில், இவர்தம் வாழ்க்கை அமைந்தது. பல புலவர்களை வாதத்தில் வென்றமையால் அநுமான தீர்த்தர், சர்வஞ்ஞர் முதலிய பெயர்களும் இவருக்கு வழங்கும். இவரை வாயுதேவனின் கூறு என்பர். ஆதலின் மாத்துவ நெறியில் ஆஞ்சநேயர் வழிபாடும் சிறப்பாக உண்டு.

பிரம்ம சூத்திரத்திற்கு 4 பேருரைகள், 10 உபநிடதங்களுக்கு விரிவுரைகள், பகவத்கீதைக்கு 2 விளக்கநூல்கள், மூலராமாயணம், பாகவதம் ஆகியவற்றுக்கு உரைகள் முதலாக 37 நூல்களை இவர் இயற்றினார் என்பர். பழமையான கிருஷ்ண வடிவம் ஒன்றை உடுப்பியில் நிறுவினார். அதையே தமது வைணவ நெறியின் நடுநாயகமாக்கினார். ஜலாலுதீன் போன்ற முஸ்லீம் மன்னர்களும், இவரை மதித்துப் போற்றினர்.

'தேருங்கால் தேவன் ஒருவனே' என்பதும், அவன் 'ஸ்ரீமத் நாராயணனே' என்பதும் மத்துவரின் கொள்கை. நான் பரம்பொருள் (அகம்பிரம்மோஸ்மி) என்ற அத்வைதக் கொள்கைக்கு எதிரிடையாக, நான் தொண்டன் (அகம் தாஸ்யோஸ்மி) என்னும் கொள்கையை இவர் வற்புறுத்தினார். பரம்பொருள் உயிர்ப்பொருள் ஆகிய இரண்டும் தனித் தனியே இயங்கும் வேறுபட்ட நிலையான இரு வேறு பொருள்கள் என்று இவர் தெளிவுபடுத்தினார். ஆதலின் இவரது கொள்கை துவைதம் எனப்பெறும். அது நீ ஆகின்றாய் (தத்துவமசி) என்பதனை மறுத்து, அது நீ ஆகமாட்டாய் (அதத்துவமசி) என்று பொருள்கூறி வற்புறுத்தினார். இறைவனே தலைவன், நாம் அவனுக்கு அடிமைகள் என்று உணர்ந்து, பணிவுடனும், அன்புடனும் வழிபட்டு வருவதனால் வீடுபேறு எய்தலாம் என்பது மத்வர் கொள்கை. இவர் தம் கொள்கையை மேலும் வலியுறுத்திப் பரப்பும் வகையில் விசயேந்திரர், வியாசராயர், செயதீர்த்தர், சீனிவாசதீர்த்தர், வாதிராசர் முதலியோர், பல்வேறு சிறந்த நூல்களை இயற்றியுள்ளனர்.

—ஆசிரியர்.

# சைவசித்தாந்தத் தத்துவம் *

மேதகு பா. இராமச்சந்திரன் அவர்கள், எம்.ஏ.,
கேரள மாநில ஆளுநர்.

தருமபுர ஆதீனமும், திருச்சிராப்பள்ளிப் பாரதிதாசன் பல்கலைக் கழகமும் இணைந்து அனைத்துலகச் சைவசித்தாந்த முதற் கருத்தரங்கம் நடத்துகிறது என்பது, பொன்மலர் நறுமணம் பெற்றது போன்று சிறப்புடையதாகும்.

உலகத்து உயிர்ப்பொருள்கள் யாவையும், இன்பநுகர்ச்சியையே குறிக்கோளாய்க்கொண்டு வாழ்வன. இன்பம் எனப்படுவது, உலகத்துப் பொருள்களினால் உயிர்களிடத்து உண்டாகும் பற்றையே துணையாய்க்கொண்டு நிகழ்ந்திடும் சிற்றின்பம் எனவும், கடவுளை உயிர் பற்றிக் கொண்டு நடத்தலால் விளைந்திடுவது பேரின்பம் எனவும், இன்பம் என்பது இருவகைப் படும். கடவுள் என்றும் மாறாத இன்பமயமாய் உள்ளார். ஆதலால் அவரைப் பற்றுவதால் உண்டாகும் வாழ்க்கை பேரின்ப வாழ்க்கை, அப்பேரின்பமானது என்றும் மாறாத நிலைத்த இயல்பினை உடையது. பேரின்பத்தை அடைவதற்கான வழியே சமயம்.

மக்களின் தன்மை, பழக்க வழக்க ஒழுக்கங்கள், அறிவு, அனுபவம் முதலியவற்றுக்குத் தக்கபடி சமயங்கள் அமைந்தன, சமயநெறிகளே, எந்தச் சூழ்நிலையிலும், எவ்விடத்திலும் எந்தப்பொழுதிலும் உலகிலுள்ள மக்களுக்குச் சாந்தத்தைக் கொடுப்பன; ஒற்றுமையை ஏற்படுத்துவன; உண்மையை ஆராயச் செய்வன; பண்பைப் பெருக்குவன. சமயம் என்பது, பொழுது, காலம் எனவும் பொருள் தந்து நிற்கும். இதனைத் தாயுமான சுவாமிகள் 'ஒன்றாய்ப்பலவாய் உயிர்க்குயிராய்ஆடும் கருணைப் பரஞ்சோதி அருளைப் பெறுவதற்கு அன்புநிலைதேடும் பருவம் இது கண்டீர் சேரவாரும் செகத்தீரே' என்கிறார்.

உலகில் உள்ள எல்லோரும் நலமாக வாழ வேண்டுமானால் ஒழுங்கும், கட்டுப்பாடும் மிகவும் இன்றியமையாதன. ஒழுங்கு அகத்தொழுங்கு, புறத்தொழுங்கு என இருவகைப்படும். அவற்றில் அகத்தொழுங்கைப் பெறுதல் சமயத்தினால்தான் இயலும். புறத்தொழுங்கு காக்கப் பெறுதல் ஆட்சிமுறையால் இயலும். அகத்தொழுங்கினைக் கடவுள் உணர்வினால் காத்துவரும் சமயம், புறத்தொழுங்கை மனித ஆற்றலால் காத்துவரும் அரசியல் ஆட்சிமுறைக்குப் பலவகையிலும் துணை செய்கிறது. உதாரணமாகக் களவு செய்வோனது கையையும், காலையும் சிறைகாக்கும் காப்பினால் திருத்துவது அரசியல் ஆட்சிமுறை. ஆனால் களவு செய்யப் புகுவோனது நெஞ்சைத் திருத்தி, அதன் வழியாகக் கைகால்களை நிறைகாக்கும் காப்பினால் திருத்துவது சமய முறை. எனவே எல்லா உயிர்களையும் வையத்தில் சிறப்புற வாழ வைப்பது சமயம் என்பது தெளிவாகிறது. இச்சமயம் ஒன்றாய் அரும்பிப் பலவாய்க் கிளைத்துள்ளது. இவ்வரிய சமயங்கள் பலவற்றை ஈன்றெடுத்த பெருமை நமது பாரத நாட்டிற்கே உரியது. ஒவ்வொரு சமயமும் சிலவும் பலவுமான உண்மைகளை அறிவிப்பனவே. எனினும் இச்சமயங்கள் கூறிய உண்மைகளோடு இவை கூறாத பல உண்மைகளையும் கூறி, முழுமையாக விளங்குவது சைவசித்தாந்தம் ஆகும். சிவபரம் பொருளின் முழுமுதற் றன்மையைக் குறித்துநன்கு விளக்குவதே சைவசித்தாந்தம்.

மற்றெல்லாச் சமயங்களையும் தன்னுள் ஏணிப்படிகள் போல அடக்கியுள்ளதும், மிகத் தூய்மை, அறிவு, அருள் முதலியவற்றை அங்கங்களாகக் கொண்டதும், பேரின்பத்தைத் தருவது

---

* தருமயாதீனத்தில், அண்மையில் நடைபெற்ற சைவசித்தாந்தக் கருத்தரங்கில், மேதகு கேரள ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய சிறப்புரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது. இவ்விதழில் மாண்புமிகு அறநிலைய அமைச்சர், மாண்புமிகு கல்வியமைச்சர், சட்டமன்றப் பேரவைத் தலைவர் ஆகியோர் ஆற்றிய சிறப்புரைகள், அடுத்த இதழ்களில் வெளிவரும்.
—ஆசிரியர்.

மான சமயமே சைவ சமயம். இதிலும் பல பிரிவுகள் உள்ளன. ஐக்கியவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாதசைவம் முதலிய பல. சித்தாந்தம் என்பது, சித்தம் - அந்தம் எனப் பிரிக்கப்படும். அந்தம் - முடிவு; சித்தம்-சித்திப்பது. சித்தாந்தமானது முடிந்த முடிவாகும்.

காலஞ்சென்ற ஐன்ஸ்டைன் போன்ற விஞ்ஞானிகளும், ஜி.யு.போப் போன்ற கிறித்துவப் பாதிரியார்களும், ஜான்மார்ஷல் போன்ற மேலை நாட்டுச் சரித்திரப் பேராசிரியர்களும், சைவசித்தாந்தத்தின் உயரிய தத்துவக் கொள்கைகளை மிகப்பெரிதும் பாராட்டியுள்ளார்கள் என்றால், சைவசமயத்தின் மேன்மையை உணர்ந்து கொள்ளலாம்.

'சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது, மிக விரிந்ததும் பெருஞ் செல்வாக்குடையதும், ஐயத்திற்கு இடமின்றி உண்மையிலேயே பெருமதிப்பிற்கு உரியதும், இந்திய நாட்டிலுள்ள சமய கொள்கைகளுக் கெல்லாம் தலைசிறந்துமாகும். தென்னிந்திய மக்களின் மிகச் சிறந்த பேரறிவின் பெரு விளைவே சைவசித்தாந்தமாகும். இறை-உயிர்-மக்கள் தன்மை-உலகியற்கை - அறியாமை - துன்பம் - காணப்படாத மறுமைநிலைகள் என்பவற்றைக் குறித்த சிக்கலான பொருள்களைத் தெரிந்துகொள்ளும் இத்தகைய சிறந்த முயற்சி பற்றி, இதுவரையிலும் ஆங்கிலத்தில் முற்றிலும் எடுத்து விளக்கப்படவில்லை' என்று சைவசித்தாந்தத்தின் சிறப்பினை எடுத்துக் கூறுகிறார், டாக்டர் ஜி.யு.போப் என்பவர்.

மேலும் இதன் சிறப்பினைக் கௌடி என்பவர் ''பிற எல்லா ஆராய்ச்சி வகைகளையும் கொள்கை அல்லது வழிபாட்டு முறைகளையும் விட, மேலானதாகச் சைவசித்தாந்தம் சில சிறப்பியற் பண்புகளைத் தன்னகத்தே கொண்டு ஒளிர்கின்றது. மிகவும் பழமை வாய்ந்ததாய், அப்பழமையினாலாகிய பெருமைகளைப்பெற்று விளங்குகிறது'' என்று மேம்படக் கூறுகிறார்.

சைவசித்தாந்தம் நம் தமிழ்நாட்டின்கண் தொன்றுதொட்டு விளங்கிவரும் நன்னெறி ஆகும். திருவருளின் உதவியினால் நம் தண்டமிழ்ச் சான்றோர் தாம் செய்த ஆராய்ச்சி, அனுபவங்கள் ஆகியவற்றின் பயனால், உலகம் உய்யும் பொருட்டு எடுத்துக்காட்டிய நன்னெறியே இது.

சைவசமயம், தோற்றம் அறியப்படாத தொன்மையை உடையது. நெடுங்காலமாக மக்கள் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. மிகப் பழமையாக விளங்கும் இருக்குவேதம், சிவமுழுமுதலை 'ஏகன்' என்ற சொல்லாலும் குறிப்பிடுகின்றது. 'ஏகன்' அல்லது ஒருவன் என்ற சொல் சிவபெருமானைத் தான் குறிக்கும் என்பதைத் தமிழ் மறை எழுதிச் சென்ற திருநாவுக்கரசர், 'ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ' என்றுகுறிப்பிடுவதாலும் வைணவப் பெரியவராகிய நம்மாழ்வார் கண்ணபிரானைப் போற்றிடும் திருப்பாடலில் 'ஒருவன் என்றேத்தி நின்ற நளிர்மதிச்சடையான் என்கோ' என்று குறிப்பிடுவதாலும் நன்குதெளிவாகிறது. இது சிவநெறியின் பழமையையும், பெருமையையும் நன்குணர்த்துகிறது. சங்ககால இலக்கியங்களாலும், பிற மத இலக்கியங்களாலும் சிவநெறியின் பழமையையும் பெருமையையும் உணரலாம். சைவசமயத்திற்கு எந்நாடும் நாடே; எம்மொழியும் மொழியே; வேற்றுமை என்பது இல்லை. இது உலகெங்கிலும் பரவியிருப்பினும், பழங்காலம் முதல் இன்றுவரையிலும் மாறாத பழைய பெருமையுடன் நிலை பெற்று விளங்குவது தமிழகத்தில்தான்.

பழங்காலத்தில் கடவுட்கொள்கை உடைய மதங்களில் சிவபெருமானைப் பரம்பொருளாகக் கொண்ட சைவம், திருமாலைப் பரம்பொருளாகக் கொண்ட வைணவம் ஆகிய இருசமயங்களே சிறந்து விளங்கின. அதற்குக் காரணம் இவ்விரு மதங்களும் தெய்வங்கள் பலவும் எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருள் ஒன்றின் வழி நடப்பனவே எனும் அடிப்படையில் நின்று கிரியைகளை வகுக்கின்ற ஆகமங்களையும், அவ்வாகமப்பொருளை வலியுறுத்துகின்ற புராணங்களையும், தூயவகையில் செய்யப்படும் வழிபாடு முதலியவற்றையும் பெற்றிருந்தமை ஆகும் என்பதே. சைவ சமயமானது பிற சமயங்களைப் போல் அல்லாமல் தனிப்பட்ட தத்துவக் கொள்கைகளையும், வழிபாட்டு முறைகளையும் கொண்டு நின்றது; நிற்கிறது.

சைவம் சிவசம்பந்தமுடையது; சிவம் என்றால் மங்களம். ஆகையால் சைவம் மங்களமுடையது. சிவசம்பந்தம் சைவம், சிவம் என்பது நன்மை என்னும் பொருளுமுடையது. பேரின்பத்துக்குக் காரணன்; முற்றுணர்வினன்; தூயதன்மையன் என்னும் பொருள் உடையது சிவம் என்னும் சொல். தூய்மை; முற்றுணர்வு, பேரின்பம் மூன்றையும் விரும்பும் உயிர் யாதாயினும் அது சிவத்தைச் சார்ந்ததே. அதற்குச் சிவம் உரியது. மக்களுள் அம்மூன்றையும் விரும்புவோர் யாவரேனும் அவர் சைவர் எனப்படுவர்.

சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையானது, பதி (கடவுள்), பசு, (உயிர்) பாசம் (தளை) என்னும் மூன்று பொருள்களும் ஒன்றால் ஒன்று தோற்றுவிக்கப்படாமல் என்றும் உள்ள உண்மைப் பொருள்கள் என்பதே. மற்ற மதங்களினின்று மாறுபட்ட சைவசித்தாந்தம், இவை மூன்றும் தனித்தனியான பொருள்களே; இவைகளுக்கு எந்நாளிலும் தோற்றமும் இல்லை, முடிவும் இல்லை என்கிறது. தோற்ற நாசங்கள் அற்ற பொருள் ஆதலால் அநாதி, அதாவது ஆதி இல்லாதது எனப்படும்.

பதியாகிய கடவுள் என்று உண்டோ அன்றே பசுவாகிய உயிரும் உண்டு என்பதே சைவசித்தாந்தத்தின் கொள்கை. இம்மூன்று பொருள்களில் உயிர், தன்னை இயல்பாகக் கட்டிப்பிணைத்துள்ள பாசத்திலிருந்து கடவுள் திருவருளைத் துணையாகக் கொண்டு விடுபட்டுக் கடவுளின் திருவடியில் பேரின்ப வாழ்வில் திளைத்திடும் என்பதாகும்.

கடவுள் எட்டு குணங்களோடு கூடியவர். அவை மாயாகுணங்கள் அல்ல, அருள் குணங்களே. இந்த எட்டு குணங்களையுடைய கடவுளே உலகத்து நாயகனாக இருக்கின்றார். அருவம், உருவம் அருவுருவம் என்ற மூன்று வழிபாடுண்டு. அருவுருவ வழிபாடுதான் சிவலிங்க பூசை.

கடவுள் நிமித்தகாரணர். முதற்காரணம் மாயை, துணைக்காரணம் சக்தி, நிமித்தகாரணம் சிவன். இவற்றிற்கு மண்-தண்டசக்கரம்-குலாலன் ஆகியவற்றை, முறையே உதாரணமாகக் கொள்ளலாம்.

உயிர் அல்லது ஆன்மா கடவுளைப்போலவே ஆதியந்தம் இல்லாத பொருள். கடவுள் உயிர்களை உண்டாக்குவதில்லை. ஆன்மாக்கள் எண்ணில்லாதன. உடம்புகளையும் மற்றவைகளையும் இறைவன் உண்டாக்குகிறான். உயிர் தாமே அறியும் தகுதியில்லாதனவாய், சிற்றறிவு உடையனவாய், இயல்பாகவே பாசத்தால் கட்டுண்டனவாய், சூரிய ஒளிகொண்டு பொருள்களைக் காணும் கண்களைப்போல, இறைஒளி உணர்த்த உணரும் இயல்புடையனவாய், இறைவனைச் சார்ந்து அறிவையும் பேரின்பத்தையும் பெறத்தக்கதாய், பாசத்தைச் சார்ந்து அறியாமையையும் பெருந்துன்பத்தையும் அடையும் இயல்பினதாய் இருப்பது ஆகும்.

செம்பில் களிம்பு இருப்பதுபோல் இயல்பாகவே உயிரில் ஒரு குற்றம் இருக்கிறது. அது தடைப்பொருள். அஃது உயிர் கடவுளை அடையவொட்டாமல் தடுத்து நிற்கின்றது. ஆணவம், மூலமலம். உயிர்களின் அறிவினை விளங்க வொட்டாமல் அதற்குத் தடையாக இருக்கின்ற யான், எனது எனும் அகப்பற்றுப் புறப்பற்றுகளை உண்டாக்கும்.

ஆணவத்தால் யான், எனது என்னும்பற்றுகள் விளைகின்றன. மாயையால் உலக இன்பத்தைப் பெரிதாக மதிக்கின்றோம். கன்மத்தால் நல்வினை, தீவினைகள் நிகழும். பாசக்கட்டு நீங்கவேண்டுமென்றால், உயிரைப் பற்றிய இந்த மூன்று குற்றமும் நீங்க வகைதேடவேண்டும். பற்று நீங்குவதற்கு மனம் முதலிய கருவிகள் இறைவனைப் பற்றுக் கோடாகக் கொள்ளவேண்டும். உலகப்பற்றில் நீங்க ஆன்மா உபாயம் தேடவேண்டும். அந்த உபாயங்களே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன.

இந்த சாதனங்களை அடைவதற்கு முன்பு சமயப்பிரவேசம் என்ற ஒரு சடங்கைச் செய்து கொள்ளவேண்டும். சரியைத் தொண்டென்பது ஒரு எஜமானனுக்கு வேலைக்காரன் என்னென்ன உபசாரம் செய்வானோ அவ்விதம் செய்தல். இறைவனை நினைத்துத் தொண்டு செய்தலால் வேறு பற்றுக்கள் நிகழாது. கிரியைத் தொண்டென்பது ஒரு வடிவத்திலே இறைவனை வைத்துப் பூசித்தல். யோகம் என்பது பிராணாயாமம் முதலிய யோக அங்கங்களால் ஒளிவடிவாக இறைவனைக் கண்டு பூசித்தல். இது அக வழிபாடு. ஞானம் என்பது, ஞானநூல் ஓதல் முதலிய செயல்களை நன்கு பயின்று, எங்கும் இறைவனைக் கண்டு பூசித்தல். இது சன்மார்க்கம். இந்த நான்கு செயல்களும் இன்றியமையாதனவே.

சங்ககாலத்தில் சமண சமயமும், பௌத்த சமயமும், பிறகு கிறித்தவமும், சிறிது ஆங்காங்குக் கால்கொண்டு நின்றனவேயன்றி, தமிழ்நாட்டின் சைவ மதத்தினை வீழ்த்தும் அளவிற்கு மேலோங்கிச் சிறக்கவில்லை. சங்ககாலத்திற்குப் பிறகு சில மன்னர்கள் சமணமதத்தினைப் பின்பற்றியதன் காரணமாக அது தமிழ்நாட்டில் மேலோங்கி நின்ற சைவமதத்தினை மங்கிடச் செய்தது. என்றாலும் மாணிக்கவாசகர் திருவாசகமும், திருமூலர் திருமந்திரமும் இக்காலத்தில் தோன்றிச் சைவத்தினை வீழ்ச்சியில் நின்று காத்தன.

திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் தோன்றிப் போரின்றிப் புரட்சியின்றி யாவரும் வியக்கும் வகையில், தாங்கள் இறைவனது உண்மைத் திருவருள் ஒன்றினாலேயே செய்த சில அற்புதச் செயல்களாலும், அருட் செம்பாடல்களாலுமே அரசர்களுக்கு உண்மையை உணர்த்தி அவர்களைச் சைவர்களாகச் செய்து, நாட்டையும் சைவமாக்கினார்கள்.

சைவசித்தாந்தத்தின் பேரருள் ஆசிரியராகிய மெய்கண்டதேவர் அவர்கள், தாம் பெற்ற பேரருளால் 'சிவஞானபோதம்' என்னும் சீரிய தத்துவ நூலினை அருளிச் செய்து, அதன் உயர்ந்த பொருளினை எங்கும் பரவச் செய்தனர். இவர்தான் சைவசித்தாந்தத்தின் முதலாசிரியர் என்பர் ஆன்றோர். உண்மை ஞானத்தினைச் சிவபெருமான் உபதேசித்த போதிலும், தெய்விக அருளால் அவ்வுபதேசம் மெய்கண்டதேவருக்குக் கிடைத்திடப்பெற்று அதன் விளைவாக அவர் உருவாக்கியதே சிவஞானபோதம். இவருக்கு முன்னால் சித்தாந்த நூல்கள் இருப்பினும் சித்தாந்தப் பொருள்களை அடைவுபடச் சிறந்தமுறையில் வகுத்து விளக்குவது இவர்தம் சிவஞானபோதமேயாகும். இவர் சித்தாந்தத்தைப் பிரமாணம் இலக்கணம், சாதனம், பயன் என நான்கு வகையாகப் பிரித்து விளக்கினார். இவருடைய சிறந்த மாணாக்கராகிய அருணந்தி என்பவர், இவர்

தம் நூலை அடிப்படையாகக் கொண்டு சிவஞானசித்தியார் என்று, சைவசித்தாந்தப் பொருள்கள் அனைத்தையும் முற்றிலும் உரைத்திடும் மிகப் பெரிய சித்தாந்த நூலினைச் செய்தார்.

மெய்கண்டதேவர், அருணந்திதேவர், மறைஞானசம்பந்தர், உமாபதிதேவர் ஆகிய நால்வரும், நான்கு தூண்களாக நின்று சைவ சித்தாந்தத்தைத் தாங்கிநின்றனர். சைவசித்தாந்த நெறிமுறைகளை உலகுக்கு எடுத்துக் கூறினர். அவர்களுக்குப் பிறகு தருமபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம் என்னும் ஞான பீட ஆதீனங்கள் அப்பணியினைச் சிறப்புற அன்றுதொட்டுச் செய்துவருகின்றன. தருமை ஆதீனத்தின் முதல் குருமூர்த்தி ஸ்ரீகுருஞானசம்பந்தர் ஆவர். தருமபுர ஆதீனம் கி.பி.16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இவரால் தோற்றுவிக்கப்பட்டது. பெயருக்கு ஏற்றாற்போல், இவர் சைவம் வளர்க்கும் ஞானசூரியனாகத் திகழ்ந்தார். சைவமுதல் ஆசிரியராய்த் திகழ்ந்து சைவம் பரப்பிய திருஞானசம்பந்தர் திருப்பெயரைத் தாங்கிய இவர், சிவபெருமான்பால் கொண்ட பற்றுதலால் ''உயிர்க்குத் தாய் தந்தையாகிய சொக்கநாதனைவிட்டு, உடலுக்குத் தாய் தந்தையாகிய பெற்றோருடன் வர மாட்டேன்' என்றாராம். இவர் சிறந்த சைவ சித்தாந்த நூல்களை எழுதினார். இவரால் உருவாக்கப்பட்ட தருமையாதீனம் கடந்த 450 ஆண்டுகளுக்கு மேலாகச் சிவநெறி வளர்ச்சியோடு இணைந்து நின்று தமிழுக்குச் செய்துவரும் தொண்டு, அளவிட முடியாதவை. பல சைவசித்தாந்த வளர்ச்சிப் பணிகளைச் சீரிய முறையில் தருமை ஆதீனம் செய்துவருகிறது என்பதனை அறியும்போது, பூரித்துப் பெருமிதம் கொள்கிறேன்.

இத்தகைய சைவசித்தாந்த தத்துவச் சிறப்பினைப் பிற சமயங்களுடன் ஒப்பிட்டு நோக்கி ஆய்வு செய்து, உலகெங்கும் பரவச் செய்திடவேண்டும் என்ற உயரிய நோக்குடன் தருமையாதீனம் 'சைவசித்தாந்த மேல்நிலை ஆய்வு மையம்' ஒன்றைத் தொடங்கவிருப்பது மிகமிகப் பாராட்டுதலுக்குரிய ஓர் உன்னதச் செயலாகும். தருமை ஆதீனம் மேலும் மேலும் பல சைவசித்தாந்த வளர்ச்சிப் பணியினைத் திறம்படச் செய்திடும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. அனைத்துலகச் சைவசித்தாந்தக் கருத்தரங்கம் இனிது நடைபெற இறையருளை வேண்டுகிறேன்.

## சங்கரர் (கி.பி. 788-820)

மலையாள நாட்டில், ஆல்வாய்ப்புழை என்னும் நதிக்கரையில், காலடி என்ற இடத்தில், ஆத்திரேய கோத்திரத்தில், சிவகுரு என்னும் தந்தைக்கும், ஆர்யாம்பிகை என்னும் தாயார்க்கும், திருச்சூர் விருஷபாசலேசுவரர் அருளால் தோன்றினார். நருமதை நதிக்கரையில் தவம் புரிந்து கொண்டு இருந்தவரும், கௌடபாதர் என்பவரின் மாணவரும் ஆகிய, கோவிந்த யோகீந்திரர் என்னும் குருவை யடைந்து, அவர்பால் அருளுபதேசம் பெற்றார். பாரதநாடு முழுவதும் யாத்திரை செய்து, பல செயற்கருஞ் செயல்கள் புரிந்தார். காசியில் வியாச தரிசனம் பெற்றார். பதரிகாசிரமத்தில் ஒரு விஷ்ணுகோயில் எடுப்பித்தார். ஸ்ரீநகரில் 'விஷ்ணு சகஸ்ரநாம பாஷ்யம்' செய்தார். பிரயாகைத் திரிவேணி சங்கமத்தில் நீராடினார். குமாரிலபட்டர் என்பவரைச் சந்தித்தார். அவர் கூறியபடி மாகிஷ்மதி நகரத்தில், மண்டனமிச்ரர் என்பவரைக் கண்டார். சரசவாணி என்னும் அவர்தம் மனைவியார் நடுவராக விளங்க, மண்டனமிச்ரருடன் வாதம் புரிந்து வென்றார். வாதில் தோற்ற மண்டனமிச்ரர், சுரேசுவராசார்யர் என்னும் பெயர்பூண்டு, இவருக்கு மாணவராயினார். பிரயாகையில் ஒருவருக்குத் தொழுநோய் தீர்த்து, உதங்கர் என்ற மாணவராக ஏற்றார். கௌசாம்பியில் இறந்த சிறுவன் ஒருவனை உயிருடன் எழுப்பினார். அமரகோசம் என்னும் வடமொழி நிகண்டு நூலை, அழியாமற் காத்துப் பரவச்செய்தார். ஸ்ரீசைலத்தில் உக்கிர பைரவன் என்னும் காபாலிகனை வெற்றி கண்டார்.

யாகம் முதலிய கருமங்களைப் புரிவதே முக்கியம் என்னும் மீமாஞ்சகரின் கொள்கையைக் கண்டித்தார். ஞானமே வீடு பேற்றுக்குரிய சாதனம் என்று நிறுவினார். பௌத்த சமண சமயங்களின் தவறான கொள்கைகளைக் கடிந்தார். இந்து மதத்தின் சீர்கேடுகளைப் போக்கி, ஆலய வழிபாட்டு முறைகளைத் திருத்தி அமைத்தார். சிருங்கேரி பூரி துவாரகை பத்ரிநாத் காஞ்சி என்னும் இடங்களில் ஆசாரிய பீடங்களை ஏற்படுத்தினார். சுரேசுவரர் பத்மபாதர் அஸ்த்தாமலகர் தோடகர் முதலியவர்கள், இவர்தம் மாணவர்கள் ஆவர்.

பிரம்ம சூத்திரம், பகவத்கீதை, உபநிஷதங்கள் ஆகியவற்றுக்கு உரைகள் இயற்றினார். மனீஷாபஞ்சகம், கனகதாரா ஸ்தவம், தசசுலோகி, விவேகசூடாமணி, பிரமோத கீதாசாரம், ஆத்மபோதம், பஜகோவிந்தம், சுப்பிரமணிய புஜங்கம், சௌந்தரிய லகரி, சிவானந்த லகரி, விஷ்ணுசகஸ்ரநாம பாஷ்யம் முதலிய பல நூல்கள், இவரால் இயற்றப் பெற்றுள்ளன.

பிரமம் என்பது இரண்டற்ற பரம்பொருள். அதற்கு வேறாகத் தோன்றும் உலகம், மாயையின் காரியம். பலவாகக் காணும் உயிர்த் தொகுதிகள், உண்மையிற் பிரமத்தின் வேறானவையல்ல. பிரமமும் ஆன்மாவும் ஒன்றே. இந்த ஞானத்தை அடைந்தால், பிறப்பு இறப்புக்களில் இருந்து விடுபடலாம் என்பது சங்கரரின் கொள்கை. இது அத்வைதம், கேவலாத்வைதம், வேதாந்தம் என்னும் பெயர்களால் வழங்கப்படும். —ஆசிரியர்

# "இந்து மதமும், வழிபாடும்"

"செந்தமிழ்த் தென்றல்"
திரு. வி. கலியாண சுந்தரனார்

'இந்து' என்னுஞ் சொல் வரலாற்றைப் பற்றி ஈண்டு விரித்துக் கூற வேண்டுவதில்லை. அது வழக்கில் எவரைக் குறித்து நிற்பதென்பது உலகறிந்ததொன்று. அக்கூட்டத்தார் தமது உயிருக்குரிய பற்றுக் கோடாகக் கொண்டு ஒழுகும் மதம் இந்து மதம் என வழங்கிவருதல் கண்கூடு. அம்மதத்தில் உயரிய கொள்கைகள் நிலவினும், அஃது உருவ வழிபாட்டு மதமென்றும், பல கடவுளரைப் போற்றும் மதம் என்றும், பலதிறப் புறவழிபாடுகளையுடைய மதம் என்றும் சொல்வோர் பலர். ஆதலால் இந்து மதத்திற்குரிய வழிபாடு யாது என்பது ஆராயற்பாலது.

இந்து மத வழிபாட்டின்மீது கருத்தைச் செலுத்தும் முன், அம்மதத்தின் உள்ளக் கிடக்கையை ஈண்டுச் சுருங்கச் சொல்வது நலம். இந்து மதத்துக்குரிய வேதம் நான்கு. அவைகளின் முடிந்த உண்மையைக் கூறுவது வேதாந்தம். அவ்வேத வேதாந்த நுண் பொருள்கள் கடல்போல் பரந்து கிடத்தலால், வேத வியாசர் என்னும் பெரியார், அக்கடல் கடைந்து, வேதாந்த சூத்திரம் அல்லது பிரம சூத்திரம் என்னும் அமிழ்தை உலகுக்குத் தந்தார். வேத வேதாந்தங்களை ஒட்டி எழுந்த வழிநூல்கள் எண்ணில. அவை யாவும் மக்கள் அறிவாற்றலுக்கேற்றவாறு, அறிஞரால் யாக்கப்பட்டன. அவைகளின் நுண்ணிய பொருள் வேத வேதாந்த ஆராய்ச்சி உடையார்க்கே செவ்விதிற் புலனாகும்.

இந்து மத நூல்களை ஆராய்ந்தால், தொடக்கத்தில் பன்மை உணர்வும், முடிவில் ஒருமை உணர்வும் தோன்றும். உலகம் பல விதம் என்பது பழமொழி. அப்பலவிதத்தில் ஒருவிதம் காண்பது அறிவுடைமை. இந்து மதம் இறைவனுக்கு எட்டு மூர்த்தம் சொல்கிறது. அவை மண், புனல், தீ, வளி, வெளி, திங்கள், ஞாயிறு, உயிர் என்பன. இப்பன்மை எட்டையும் ஓர் ஒருமை, இசைபடநிறுத்தி இயக்கும் பெருமை வியக்கற்பாலது.

'இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாய்எறியும் காற்றும் ஆகி
அரு நிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தியாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே'

'நிலம்நீர் நெருப்புயிர்
நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோடு
எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகே மௌனத்திசை
பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா
தோள்நோக்கம் ஆடாமோ!

என்று தமிழ் வேதம் முழங்குதல் காண்க.

இவ்வெட்டுக்கும் வேறாக உலகில் ஒரு பொருள் இருக்குமோ? எல்லாம் அவைகளில் அடங்கும். இவ்வெட்டுக்கும் அடிப்படையாய்த் தாரகமாய் நிற்கும் பொருள் ஒன்றுளது. அதுவே சித்தெனுஞ் செம்பொருள். அது மண்ணில் மண்ணாகவும் பிறவற்றிற் பிறவாகவும் நீக்கமற நிறைந்து எல்லாவற்றையும் இயக்கி வருகிறது. 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்' இலங்கும் அப்பரம் பொருளை உணர வேண்டுமானால், அதன் இயற்கை வடிவாகிய மண் முதலிய எட்டையுங் கருவியாகக் கோடல் வேண்டும். அக்கருவிகளைக் கொண்டு அடைந்து உண்மை உணர்ந்தவர்கள், முன்வர்கள். அவர்களே உண்மை வேதாந்திகள்.

மண் முதலியவற்றைக் கருவியாகக் கொண்டு வழிபாடு நிகழ்த்த நிகழ்த்த, அவைகளோடு அத்துவிதமாகக் கலந்து நிற்கும் அகண்டாகார ஒருமைப்பொருள் புலனாகும். அப்போது மண் முதல் உயிர் ஈறாக உள்ள எல்லாம் மறைந்து போகும். அந்நிலையைக் கண்ணால் காணல் முடியுமோ? கருத்தால் கருதல் முடியுமோ? அந்நிலையை மணிவாசகனார்,

'இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து
தேய்ந்தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ அல்லை அன்றிஒன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே'

என்று விளக்கியிருத்தல் காண்க.

அப்பெரு நிலையை உலகிற் பிறந்தமக்கள் ஒவ்வொருவரும் ஒருபோது எய்த வேண்டியவரே. அந்நிலை ஒருவர்க்கு மட்டும் உரியதன்று; ஒரு கூட்டத்தார்க்கு மட்டும் உரியதன்று; ஒரு தேசத்தார்க்கு மட்டும் உரியதன்று; அஃது அகிலத்து உறையும் அனைவர்க்கும் உரியது. அந்நிலை குறிக்கும் மதமும் அனைவருக்கும் உரியதே. அதை ஈண்டு வலியுறுத்திக் காட்ட வேண்டுவதில்லை. ஆகவே, வேதாந்தம் ஓரினத்தவர்க்கு மட்டும் உரியதன்று என்றுரைத்து மேலே செல்கிறேன்.

பஞ்ச பூதமாகவும், சந்திரனாகவும், சூரியனாகவும், ஆன்மாவாகவும் ஒளிரும் அகண்டாகார சச்சிதானந்த சிவத்தைப் பெறுவதற்கு அவ்வெட்டையே துணைக் கருவியாகக் கோடல் வேண்டும் என்பது மேலே சொல்லப்பட்டது. நாடோறும் மனிதன் தன்னுடன் உள்ள ஆன்மாவைக் காணாதொழியினும், அதைப் பற்றி ஆராயாதொழியினும், மண் முதலியவற்றைக் காண்கிறான்; ஆராய்கிறான்; அவைகளின் துணையால் வாழ்கிறான். இக் காட்சியும் ஆராய்ச்சியும் எட்டு மூர்த்தமாக உள்ள ஒன்றை மனிதனுக்கு உணர்த்துகின்றனவா? இல்லையே! அவ்வுணர்வைப் பெறுவதற்கு வழிபாடு வேண்டற்பாலது.

எட்டில் எதை விடுவது? எட்டில் ஒவ்வொன்றை வழிபடுவோருளர்; சிலவற்றை வழிபடுவோருளர்; எல்லாவற்றையும் வழிபடுவோருளர். இவ்வழிபாட்டு முறைகள் பற்பல. அவைகளே பல மதங்களாக உலகில் நிலவுகின்றன. அவ்வழிபாடுகளை உருவம் அருவம், அருவுருவம் என்றும் மூன்றனுள் அடக்கலாம். உருவத்தைக் கொண்ட மதங்கள் சில. அருவத்தைக் கொண்ட மதங்கள் சில. எல்லாவற்றையுங் கொண்டது வேதாந்தம் என்னும் இந்து மதம். ஆதலால் இந்து மதத்தை எந்த மதத்திலுங் காணலாம். இந்து மதம் கண்டப்பட்ட ஒன்றன்று. அஃது அகண்டமாக எல்லாவற்றிற்கும் இடந்தந்து நிற்பது.

மண் முதலிய ஒவ்வொன்றையுந் தனித்தனியே வழிபடுவோர் அவ்வப் பொருளில் கடவுளுண்மை காண்பர். அவர் மற்றப்பொருளில் கடவுளுண்மை காண்பதில்லை. கடவுளை யாண்டுங் காண்பது எப்படி? அதற்குரிய வழிபாடு செய்தல் வேண்டும். எட்டுக்கு வேறாகப் பொருளின்மையால், யாண்டுங் கடவுளைக் காட்டும் வழிபாட்டிற்குரிய பொருள் அவ்வெட்டனுள் ஒன்றாகவே இருத்தல் வேண்டும். அஃதெது? அதுதான் ஆன்மா. மற்ற ஏழும் ஆன்மாவைப்போன்ற அறிவுடைப் பொருளல்ல. அறிவுடைப் பொருளாம் ஆன்மாவின் வழி ஆண்டவனை வழிபடுவோர். ஆண்டவன் உண்மையை மற்ற பொருள்களிலும் காணலாம். மண் முதலியன அறிவுடைப் பொருள்களல்லவாகலான், அவைகளுக்கு எல்லை இடம் முதலியன உண்டு. ஆன்மா அறிவுடைப் பொருளாகலான், அதற்கு எல்லையுமில்லை; இடமுமில்லை; ஒற்றுமில்லை.

ஆன்ம வழிபாட்டைப் பற்றி எழுதலாம், பேசலாம். ஆனால் அதைச் செயலில் நிகழ்த்துவது அரிது. முடிந்த வழிபாடு அஃது என்பது மாத்திரம் எவரும் மறத்தலாகாது. அதைக் குறிக் கொண்டே மற்ற வழிபாடுகளை நிகழ்த்தல் நல்லது. இவ்வான்ம வழிபாட்டை அறிவுறுத்தும் இந்துமதமா உருவ வழிபாட்டு மதம்? பல் கடவுளரை வழிபடும் மதம்? பலதிறக் கிரியைகளையுடைய இழிந்த மதம்? இவைகள் இந்து மதத்தில் இல்லை என்று யான் சொல்லவில்லை. இவைகள் இந்து மதத்தில் உண்டு. இவைகள் யாவும் இந்து மதத்தின் படிகள் என்க. உருவங்களை மாத்திரம் வழிபடலே இந்து மதம் என்று சொல்வது தவறு. ஆன்ம வழிபாடு எனும் பெரு வழிபாட்டைக் குறிக் கொண்டு அவரவர் தத்தம் நிலைக்கேற்றபடி ஒவ்வொருவித வழிபாட்டைப் படிப்படியாகச் செய்து வரலாம்.

இந்துக்கள் பெரிதும் உருவங்களை வழிபடுவோராய், பல கடவுளரைப் போற்றுவோராய், கிரியையாளராய் இருப்பதற்குக் காரணம் என்ன? என்று வினவலாம். உலகில் வாழும் மக்களுள் பெரும்பான்மையோர் எந்நீரார் என்பதைக் கவனித்தல் வேண்டும். பெரும்பான்மையோர் - ஏறக்குறைய எல்லோரும் - மன உணர்வோடு - புலனறிவோடு-வாழ்வோரேயாவர். அவர் சொல் பொருள் என்னும் ஈருலகில் வாழ்வோரே யாவர். ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு பொருளுண்டு. ஒரு சொல் சொல்லும்போது, அதன் பொருள் மனத்தில் உறுதல் பெறுகிறோம். மனத்தில் பொருளுணர்த்தாத தொன்று வெறும் பாழாகவேயிருத்தல் வேண்டும். தென்னை என்றதும் தென்னையின் வடிவம் மனத்திலுறாமற் போகாது. மனிதன் மன உணர்வோடு வாழும் மட்டும் உருவங்கடந்த ஒன்றை எவ்வாறு வழிபட வல்லான்? 'நினைப்பும் மறப்பும் அற்றவர் நெஞ்சில் - வினைப்பற்றறுக்கும் விமலன் இருப்பன், நினைப்பற நிறைந்தே' என எனவரூஉம் ஆன்றோர் மொழிகளைக் காண்க. மனஉணர்வு கடந்த நிலையை எய்துவதற்கு மனவுணர்வோடு வாழும் மனிதன் என்ன செயல் வேண்டும்? தன்னிலைக்கேற்ற வழிபாடுகளைப் படிப்படியாகக் கொண்டொழுகல் வேண்டும்.

சிலர் 'இந்துக்கள் உருவத்தை வழிபடுவோர்; நாங்கள் உருவங் கடந்த ஒன்றை வழிபடுவோம்.' என்று வாயாற் பேசிப் 'பரலோகத்துள்ள எங்கள் பிதாவே' என்று ஆண்டவனை வழுத்துகிறார். பரலோகம் யாண்டுள்ளது? அங்கே பிதா எப்படியிருக்கிறார்? 'பரலோகம்' 'பிதா' என்னுஞ் சொற்களுக்கு என்ன பொருள். அவர்கள் உள்ளத்தில்தோன்றுகின்றன? செபஞ் செய்யும் கோயிலும், தொப்பியும் தாடியும் நீண்ட அங்கியும் தோன்றும் போலும்! இல்லையேல், அன்னார் வெறும் பாழைப் போற்றுவோராவர். மன உணர்வு உள்ளவரை மனிதன் மனத்தில் வடிவம் புலப்பட்டுக் கொண்டிருத்தல் இயல்பு. அத்தகைய மனத்தை ஒரு வடிவில் பதியவைத்துப்

பயிற்சி செய்யச் செய்ய, அது மனத்தைப் பல துறையில் அலைத்து அலைத்து இடர்ப்படுத்தாது. முதலாவது நெஞ்சை ஓரிடத்தில் நிலைபெறச் செய்யல் வேண்டும். அதற்கு உருவ வழிபாடு இன்றியமையாதது. வழிபாட்டுடன் நெஞ்சை மேலும் நிலைபெறுத்தச் சில கிரியைகளும் வேண்டற்பாலன.

''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்,
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதீ என்றும்,
ஆரூரா என்றென்றே அலறா நில்லே''

என்று அப்பர் சுவாமிகள் அருளிச் செய்திருத்தல் காண்க. இத்திருப்பாடல் 'விறகிற்றீயினன் பாலிற் படு நெய்போல் - மறைய நின்றுளன் மாமணிச் சோதியன்'- உறவுகோல் நட்டுணர்வு கயிற்றினால் - முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே' என்றும், 'காயமே கோயிலாக' என்றும், :இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே' ஏன்றும் உலகோர்க்கு அறிவுறுத்திய பெரியாரால் அருளிச் செய்யப்பட்டதென்பது கருதற்பாலது.

உருவ வழிபாட்டில் பலதிற மூர்த்தி பேதங்கள் தோன்றும். ஆனால் வழிபாடோ ஒரு நிலையது. பேத உணர்வையே குறிக்கொண்டு, உயர்வு, தாழ்வு வாதமிடுவோர், உண்மை காணும் முயற்சியில் தலைப்பட்டு உழைப்பவரல்லர். மூர்த்தி வழிபாடு அவரவர் விரும்பியவாறு செய்யலாம். ஒரு மூர்த்தியின் மாட்டுக் கொண்ட பற்றால், மற்ற மூர்த்திகளைக் குறை கூறுவோர், ஆன்ம வழிபாடு எனும் பெருநிலை எய்தல் அரிது. மூர்த்தி வாதத்தில் தலையிட்டுக் காலங்கழிப்போர் ஒருவித நாத்திகரே ஆவர்.

பஞ்சபூதப் பெருவடிவையே முதல் முதல் மனிதன் மனத்தில் உன்ன இயலாதெனக் கருதி, நம்முன்னோர் பஞ்சபூத நுட்பத்தைக் கோயில்கள் வாயிலாகவும், பூசைகள் வாயிலாகவும் விளங்க வைத்துச் சென்றனர். பஞ்சபூதம் ஆண்டவன் வடிவம் என்பதை அறிவுறுத்தத் தமிழ் நாட்டிலேயே ஐந்து திருத்தலங்கள் உண்டு. அவை காஞ்சி (மண்), திருவானைக்கா (புனல்), திருவண்ணாமலை (நெருப்பு), திருக்காளத்தி (காற்று), சிதம்பரம் (வெளி), என்பன. பூசைக் காலத்திலும் இக்குறிகளுண்டு. மூர்த்தி மண்ணுக்கு அறிகுறி. அபிடேகமும், தீபமும், நீரையும் நெருப்பையும் உணர்த்துவன. விசிறி காற்றைக் குறிப்பது. பாடல் ஒலி வடிவான ஆகாயத்தை அறிவுறுத்துவது. சூரிய வணக்கம் ஒளியை விளக்குவது. தியானம் அமைதி கூட்டுவது. மக்களின் நிலைக்கேற்றவாறு பலமுறைகள் வகுக்கப்பட்டன. இம்முறைகள் இப்போது பொருளிழந்து கிடத்தல் கண்கூடு.

திருக்கோயில் வழிபாடும். பூசை முறைகளும் நெஞ்சை நிலைபெறுத்துவன ஆகலான், அவைகள் தொடக்கத்தில் கொள்ளற்பாலன. உருவ வழிபாட்டைக் குறை கூறுவோரும், ஆண்டவனைத் தொழுதற்கெனத் தனி நிலையங் கோலிக் கொள்வது காண்கிறோம். இம்முறை வெவ்வேறு வழியில் மனவுணர்வு உடைய மனிதர் ஒவ்வொருவராலும் தம்தம் மதப் பெயரால் கொள்ளப்படுவது. இது இந்து மதத்திற்கு முதற்படியாக விளங்குவது.

உருவ வழிபாட்டால் ஒருமை மனம் பெற்ற ஒருவன், செயற்கை உருவங்களையும் செயற்கை முறைகளையும் விடுத்து இயற்கை உருவங்களை வழிபடும் ஒரு நிலையை எய்துவன். மலையையும் காட்டையும் வயலையும் கடலையும் ஆண்டவன் வடிவாகப் போற்றும் மனம் பரந்து பட்டொழுகுவதாகும். இயற்கை இன்பமும் மனவுணர்வும் ஒன்றுபடும்போது மனம் ஒடுங்குதல் காணலாம். அஃது ஒடுங்க ஒடுங்க ஆன்ம மூர்த்த வழிபாடு கூடும். அவ்வழிபாடு கூடப்பெற்ற ஒருவன் எல்லாவற்றையும் தன்னில் சாணும் பேறெய்துவன். அவ்வழிபாட்டுக்கு மேற்பட்டதொன்றில்லை. பின்னைக் கூடும் பெருநிலையைப் பற்றிய பேச்சு எற்றுக்கு? 'உரையற்ற தொன்றை உரை செயும் ஊமர்காள் - கரையற்றதொன்றைக் கரைகாண லாகுமோ' என்னுந் திருமூலர் திருவாக்கைப் போற்றுகிறேன்.

'எவ்வுயிரும் என்னுயிர்போல்
எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கணை
செய்யாய் பராபரமே'

— தாயுமானவர்.

# ஆகமங்கள் எத்தனை

திரு மு. அருணாசலம்,

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

ஆகமங்கள் கணக்கில்லாதன என்று ஒரு கல்லாடப் பாடல் கூறும். அவை பலவகை: லௌகிகம் (உலகைத் தழுவியன), வைதிகம் (வேதத்தைத் தழுவியன), அத்யாத்மீகம் (ஆன்மிக நெறியைத் தழுவியன), அதிமாகேத்தம் (உபதேசமார்க்கங்களுக்கு அப்பாற்பட்டவை), மந்திரம் என்று சொல்லப்படும். இவற்றுள் மந்திரப் பிரிவொன்றே சித்தாந்தம் எனப்படுகிறது. மற்றவை வைதிக நெறிக்கு மாறானவை என்று சிவஞானசுவாமிகள் தம் சிவஞானபாடியத்துப் பாயிரப் பகுதியில் கூறுவது காணத்தக்கது. ஆயினும், சில ஆகம நூல்களில், ஆகமம் தந்திரம், சித்தாந்தம், மந்திரம் என்ற பெயர்கள் ஒரேபொருளைக் குறிப்பனவாய் வழங்கவும் காண்கின்றோம்.

சிவபெருமானுடைய திருமுகங்கள் ஐந்து. சத்தியோகாதம், வாமதேவம், அகோரம் தத்புருஷம் ஈசானம் என. (இவை முறையே மேற்கு வடக்கு தெற்கு கிழக்குத் திக்குகளை நோக்கியிருக்கும்; ஈசானம் மேல்நோக்கி, ஈசானதிசையில் வடக்குதிசையில் இருக்கும்.) இவை ஒவ்வொன்றும் தனித்தனி ஐந்து முகங்களை உடையதென்றும், இவ்விருபத்தைந்து முகங்களினின்றும் கணக்கற்ற ஆகமங்கள் தோன்றின என்றும் ஒரு வரலாறு கூறும்.

வைதிக சாத்திரங்களைச் சைவசந்தானாசாரியருள் ஒருவராகிய அருணந்திசிவாசாரியர் வேதம் சிவாகமம் என இருகூறாகப் பிரித்துக் கூறுகிறார். இங்கு ஆகமங்களை இவர் சைவநூல் என்று கூறுவது காணத்தக்கது.

''வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
 வேறுரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்,
ஆதிநூல் அநாதிஅமலன் தருநூல் இரண்டும்
 ஆரணநூல் பொது, சைவம் அருஞ்சிறப்பு நூலாம்,
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும்
 நிகழ்த்தியது நீள்மறையின் ஒழிபொருள்; வேதாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம்; பிறநூல்,
 திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்த மாகும்.

இங்கு இவர் சொல்வது, சிவாகமங்களே சித்தாந்தம், மற்றவையெல்லாம் இதற்கு ஒவ்வாதன. பிறநூல்கள் யாவும் இவற்றிலிருந்து வந்தன. வேதம் சிவாகமம் என்ற இரண்டும் மட்டுமே சிவபிரானால் உபதேசிக்கப்பட்டன. இவ்விரண்டில் வேதம் பொதுவாக ஒவ்வொருவருக்குமாகச் செய்தது. ஆகமமோ சத்திநிபாதமுடையோருக்கு உரியது. இதுவே வேதாந்தத்தின் மெய்ப்பொருளை உணர்த்துவது என்பது அவர் கருத்து. (சித்தியார் சுபக்கம் 261)

சதாசிவமூர்த்தி தமது சத்தியோசாதம் வாமதேவம் அகோரம் தத்புருஷம் ஆகிய நான்குமுகங்களிலிருந்தும் கருடம் வாமம் பூத தந்திரம் பைரவம் என்ற ஆகமங்களையும், ஈசான முகத்திலிருந்து 28 சிவாகமங்களையும் அருளிச் செய்தார் என்றும் சொல்லப்படும். முதல் நான்கு ஆகமங்கள் 1,24,4,2 பாகங்களை உடையன. ஆனால் இக்கருத்துக்கு ஆட்சி இல்லை. ஆகமங்களின் தோற்றத்துக்கும் வழங்கும் வரலாறு முன் குறிப்பிட்டதுபோல வேறானது.

நவாகமம் (ஒன்பது) என்பது மற்றொரு வகையான தொகுப்பு. திருமூலர் கூறும் ஒன்பது ஆகமங்கள் முன்னே சொல்லப்பட்டன. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தருமபுர மடத்துச் சீடராயிருந்த வெள்ளியம்பலவாண முனிவர் தமது ஞானாவரண விளக்கத்தில் (பக்கம் 9) ஒன்பது ஆகமங்களைக் கூறுகிறார். அவையாவன: பாதத்துவநாகம், பரமம், சிவம், சத்தி, கலா, தேவப்பிரசாதம், பரதந்திராவதாரம், சிவஞானாகரம், சிவசாதாக்கியப் பிரசாதம் என்பன. ஆனால் இப்பெயர்கள் வேறெங்குமே காணாத புதுமையாயுள்ளன. இப்படிப்பட்ட நூல்களும் இல்லை.

சைவாகமம் என்பது ஒரு பொதுப் பெயர். இதில் நான்குவகை ஆகம நூல்கள் அடங்கும். சைவம் பாசுபதம் வாமம் லாகுளம் என்பன. இவற்றுள் சைவத்தில் மூன்று பிரிவுகள்; வாமம் தட்சிணம் சித்தாந்தம் என. வாமம் என்ற பகுதியில் அடங்கியவை காபாலம் காளாமுகம் அகோரம் என்ற மூன்று. தட்சிணம் என்ற பகுதி 18 நூல்களைக் கொண்டது. இவை காசுமீரசைவம் முதலியன. சித்தாந்தம் என்ற பிரிவே நாம் எடுத்துக் கொண்ட 28 ஆகமங்களைக் கொண்ட பிரிவு. இவையே பொதுவா

கப் பேசும் சைவாகமங்களாகும். இவையாவும் கிடைக்கின்றன. மற்றவற்றைக் குறித்து ஒன்றும் தெரியவில்லை.

இனி, வேதம் என்ற அடிப்படையில் ஆகமங்களை இரு பிரிவுகளாகப் பிரிப்பதுண்டு. சிரௌதம் என்பது வேத அடிப்படையில் அமைந்தது. (சுருதி வேதம்). அசிரௌதம் வேத அடிப்படை இல்லாதது. காபாலிகம் காளாமுகம் பாசுபதம் என்பன அசிரௌதம் 28 சைவாகமங்களும் அவற்றின் உபாகமங்களும் சிரௌத ஆகமங்கள் ஆகும்.

கௌதம நியாய சூத்திரம் (1.26) சித்தாந்தம் என்பதற்கு இலக்கணம் வரையறுத்துச் சொல்லுகிறது.

> சித்தாந்த நாம ய: பரீட்ச கை: பகு
> விதம் பரீக்ஷ்ய ஹேதுபி: சாதயித்வா
> ஸ்தாப்யதே நிர்ணய: ஸ சித்தாந்த:

''எது பலவிதப் பரீட்சைகளால் பரீட்சித்து ஹேதுக்களால் ஸ்தாபித்து நிர்ணயிக்கப் படுகிறதோ அதுவே சித்தாந்தம் என்று சொல்லப்படும்''. 28 சைவாகமங்களும் சிவபிரானுடைய ஐந்து முகங்களிலிருந்தும் வெளிவந்தன என்றும் நூல்கள் கூறும். ஈசானமுகம் எட்டு ஆகமங்களையும் மற்ற நான்கு முகங்களும் ஐந்து ஆகமங்கள் வீதமும் 20 ஆகும். அவை பின்வருமாறு:

சத்தியோஜாத முகம்: காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம். இவை கௌசிக ரிஷிக்கு உபதேசிக்கப்பெற்றன.

வாமதேவ முகம்: தீப்தம், சூக்ஷ்மம், சகஸ்ரம், அம்சுமத், சுப்ரபேதம், பெற்றவர் காசியபர்.

அகோரமுகம்: விஜயம், நிச்வாசம், சுவாயம்புவம், (ஆக்னேயம் என்னும்) அனலம், வீரம்; பெற்றவர் பாரத்துவாஜர்.

தத்புருஷமுகம்: ரௌரவம், மகுடம், விமலம், சந்திரக்ஞானம் (பிம்பம் என்னும்) முகபிம்பம்; பெற்றவர் கௌதமர்.

ஈசான முகம்: புரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் ஆக எட்டுப் பெற்றவர் அகத்திய முனிவர்.

ஆகமங்களைச் சிவபெருமான் மகேந்திர மலையில் இருந்துகொண்டு தமது ஐந்து முகங்களாலும் வெளியிட்டருளினன் என்று திருவாசகத்துள் மாணிக்கவாசகரும் கூறுவார்.

> மாவேட் டாகிய ஆகமம் வாங் கியும்
> மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
> உற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்

(கீர்த்தித் திருவகவல் அடிகள் 18-20)

இவற்றுள் முதல் பத்து ஆகமங்கள் சதாசிவனால் அட்டவித்தியேசுரர் அவர்களுக்கு உபதேசிக்கப்பட்டன. அதுபற்றி இவை சிவபேத ஆகமங்கள் எனப்படும். ஏனைய பதினெட்டும், ஒவ்வொன்றும் இருருத்திரர் வீதம் 36 ருத்திரர்களுக்கு உபதேசிக்கப்பட்டன. அதுபற்றி இவை ருத்திரபேத ஆகமங்கள் எனப்படும். முதல்பத்து ஆகமங்களையும் உபதேசம் பெற்ற ரிஷிகள் ஒவ்வொன்றையும் மூன்று தேவர்களுக்கு உபதேசித்தார்கள். ஆக அவர்கள் 30 தேவர்கள், மற்றதை உபதேசப் பெற்ற 36 ருத்திரர்கள் ஆக, ஆகமம் பெற்றவர்கள். 66 பேர் என்ற வரலாறு உண்டு. இதையே திருமூலர் ஒரு பாடலில் கூறுவதும் அறியத்தக்கது.

> அஞ்சனமேனி அரிவையொர் பாகத்தன்
>
> அஞ் சொடிருபத்து மூன்றுள ஆகமம்
>
> அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
>
> அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே

அனந்தேசுவரர் ஸ்ரீகண்டருக்கு ஆகமங்களை உபதேசித்தார். அவர் இருடிகளுக்கு உபதேசித்தார். அவர்கள் தங்கள் மாணாக்கர்களுக்கு ஆகம ரகசியங்களை உபதேசித்தனர். இவ்வாறு ஆகம நூல்கள் பூலோகத்தில் மனிதரிடை வழங்கலாயின. ஆகமங்களின் வரிசை முறை, அவற்றின் தோற்றமுறை, அவற்றின் சுலோக எண்ணிக்கை, அவை குறிப்பிடும் சிவபெருமான் திருவுருவத்தின் அங்கம், அவற்றை உபதேசம் பெற்றவர்கள், அவற்றின் வழிப் பிறந்த உபாகமங்கள் ஆகிய இச் செய்திகள் யாவும் காமிகாகமத்தின் தொடக்கப்பகுதியான சந்திராவதாரப் படலத்திலும், ஏனைய விரிந்த ஆகமங்களிலும் விரித்துச் சொல்லப்படுகின்றன.

வடமொழியில் வேதம் முதல் எல்லாச் சாத்திரங்களும் தெய்வத்திடம் தோன்றின என்று சொல்வது மரபு. அந்தமுறையில் ஆகமங்களும் சிவபெருமானிடமிருந்தே உதித்தன என்று சொல்வதும் இயல்பேயாகும். சைவ ஆகமங்கள் 28 என்று எல்லா நூல்களும் சொல்லும். அவற்றிலும் அவ்வாறே சொல்லப்பட்டுள்ளது. ஆயினும் உலகில் எத்தனையோ சந்தேகப் பிராணிகள், '' இதெல்லாம் வெறும் கதை. 28 இல்லை. இது வெறும் உபசாரம்'' என்போரையும் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் புதுச்சேரியில், பாரிஸ் சர்வகலாசாலையின் அங்கமாக இயங்கிக் கொண்டுவரும் இந்திய ஆய்வு மையத்தில் பேராசிரியர் என்.ஆர். பட் என்ற அறிஞர் பொறுமையாகத் தேடி 28 ஆகமங்களையும் முழுமையாகவோ பகுதிகளாகவோ பெற்றுக் கோத்திருக்கிறார். 207 உபாகமங்களில் 45 உபாகமங்களையும் பெற்றிருக்கிறார். அந்த நிறுவனத்தினர் வெளியிட்டுள்ள ஆகமங்களில் இவ்வனைத்து ஆகமங்களிலும் குறிப்புத் தந்திருக்கிறார். சில ஆகமங்கள் முழுமையாகக் கிடைத்திருக்கலாம். சில முழுமையாய்க் கிடைக்காமல் சில பகுதிகள் மட்டுமே கிடைத்திருக்கலாம். எனினும் மூல ஆகமங்கள் 28தான் என்பதில் இனி எந்த ஐயத்துக்கும் இடமில்லை.

***

உ

# கல்வெட்டுகளில்

# மாணிக்கவாசகர் பற்றிய செய்திகள்

திரு. என் சேதுராமன், பி.எஸ்.ஸி., டி. எம். ஐ. டி.

கும்பகோணம்.

**முன்னுரை :**

மாணிக்கவாசகர் பாண்டி நாட்டில் திருவாதவூரில் அவதரித்தவர். மதுரையில் கி.பி. 863 முதல் 911 வரை அரசு புரிந்த பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுண வர்மனிடம் மாணிக்கவாசகர் அமைச்சராகப் பணிபுரிந்தவர். சிறந்த சிவபக்தரான மாணிக்கவாசகர், திருவாசகமும் திருக்கோவையாரும் அருளிச் செய்தனர். முதலாம் இராசராச சோழன் கி.பி. 985 இல் முடிசூடினான். இம்மன்னன் கி. பி. 1010இல் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை எடுப்பித்தான். திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியின் துணைகொண்டு, சிதம்பரம் நடராசர் கோயிலில் இருந்த மூவர் முதலிகளின் திருப்பதிகங்களைக் கண்டு எடுத்தான். அவற்றில் சில மண்மேடிட்டுச் செல்லு அரித்துப் போயிருந்தன. கிடைத்தவைகளைக் கொண்டு நம்பியாண்டார் நம்பியின் அரும்பணியால்—அத்திருப்பதிகங்களை ஏழு திருமுறைகளாகச் செய்தனன். திருஞான சம்பந்தரின் திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் திருப்பதிகங்கள் அடுத்த மூன்றாகவும், சுந்தரமூர்த்தி நாயனாரின் திருப்பதிகங்கள் ஏழாம் திருமுறையாகவும் வகுக்கப்பட்டன. இவ்வேழு திருமுறைகள் தேவாரங்கள் என அழைக்கப்படுகின்றன.

கி. பி. 1012-இல் இராசராசன் தனது மகன் இராசேந்திரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டினான். 1014-இல் இராசராசன் மறைந்தான். இராசேந்திரன், சோழ மாமன்னன் ஆனான். இராசேந்திர சோழனும் திருமுறைகள் வகுக்கும் பணியில் ஈடுபட்டான். நம்பியாண்டார் நம்பியின் துணைகொண்டு, மாணிக்கவாசகரின் திருவாசகத்தை எட்டாம் திருமுறையாகவும், திருவிசைப்பாவை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், திருமுகப் பாசுரத்தைப் பதினொன்றாம் திருமுறையாகவும் செய்தனன். ஆக, திருமுறைகள் பதினொன்றாக வகுக்கப்பட்டன. இராசேந்திரன் கி. பி. 1043-இல் மறைந்தான். இராசேந்திர சோழனின் பெண் வயிற்றுப் பேரனே, முதல் குலோத்துங்க சோழனாவான். இம்மன்னன் 70 முதல் 1122 வரை அரசு புரிந்தவன். இம்மன்னனின் பேரனே இரண்டாம் குலோத்துங்க சோழனாவான். இவ்வரசர் பெருமான் 1133 முதல் 1150 வரை அரசு புரிந்தவன். இம்மன்னனது அமைச்சராகிய சேக்கிழார் பெருமான் பெரிய புராணம் எழுதினார். பெரியபுராணம் கி. பி. 1140 இல் பன்னிரண்டாம் திருமுறையாகச் செய்யப்பட்டது.

பன்னிரு திருமுறைகளில் மாணிக்கவாசகரின் திருவாசகம் இராசேந்திர சோழன் காலத்தில் எட்டாம் திருமுறையாகச் செய்யப்பட்டது. இவ்வரசனின் காலத்திலிருந்து கோயில்களில் திருவாசகம் விண்ணப்பித்தல் பிரபலமாயிற்று. இதனைப் பல கல்வெட்டுக்களில் காணலாம். இவ்வாறு திருவாசகத்தேன் அமுதத்தை அள்ளித்தரும் கல்வெட்டுக்களையும், மாணிக்கவாசகருக்குக் கற்சிலை எடுத்துப் பூசை வழிபாடுகள் செய்வதற்கு அளிக்கப்பட்ட நிவந்தங்களைக் கூறும் சில கல்வெட்டுக்களையும் பார்ப்போம்.

**கல்வெட்டுச் செய்திகள் :**

திருக்கோவலூர் வட்டத்தில் உள்ள கீழூர் வீரட்டானேசுவரர் ஆலயத்தில் இராசேந்திர சோழனின் இரண்டாம் மகனான இராசேந்திர தேவனது 5-ஆம் ஆண்டு (கி.பி. 1057)க்கு உரிய கல்வெட்டில், கோயிலில் (மணிவாசகரின்) திருவெம்பாவை விண்ணப்பிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

இராசேந்திர சோழனின் நான்காம் மகனான வீரராசேந்திரனின் திருவொற்றியூர்க் கல்வெட்டு கி. பி.1000-இல் செதுக்கப்பட்டது. இக்கல்வெட்டில் கூறப்படும் செய்தி, படிப்போர் மனதை உருக்கிவிடும். திருவொற்றியூர்ப் படம்பக்கநாதர் கோயிலுக்கு 60 வேலி நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டன சக்கரவர்த்திகள் வீரராசேந்திர சோழ தேவ உடல் நலம் பெறவும், அரசியாரின் திருமா கல்யம் மங்களகரமாக விளங்கவும், மன்னன

மகள் உடல் நலம்பெற்று மகப்பேறு அடைய வும், இறைவனுக்குக் கோயில் வழிபாடுகளும், திருவிழாக்களும் நடத்த நிவந்தங்கள் ஏற் படுத்தப்பட்டன. திருவாதிரைத் திருநாட் களில் காரானை விடங்கர் வீதிஉலா வருங் காலத்தில் இருபத்திரண்டு தளிப்பெண்டுகள் ஆடவும், பதினாறு பெண்கள் அகமார்க்கத்தில் திருப்பதியம் விண்ணப்பிக்கவும் நியமிக்கப் பட்டனர். இப்பெண்களுக்கு ஆடற் கலை சொல்லிக் கொடுக்க இரண்டு நடன ஆசிரியர் களும் நியமிக்கப்பட்டனர்.

## முதல் குலோத்துங்கன் (1070-1122)

திருவொற்றியூர்க் கோயிலில் உள்ள முதல் குலோத்துங்க சோழனின் இரண்டாம் ஆண்டுக் கல்வெட்டின் காலம் கி. பி. 1072 ஆகும். காரானை விடங்கருக்குத் திருச்சாந்தாடல் விழா எடுக்க நிவந்தங்கள் அளிக்கப்பட்டன என்று இக்கல்வெட்டு கூறுகிறது.

விருத்தாசலம் வட்டம், நல்லூர்க் கிராமத் தில் உள்ள வில்வாரண்யேச்சரர் கிராமத்தில் உள்ள வில்வாரண்யேச்சரம் கோயிலில் இம் மன்னனது நான்கு கல்வெட்டுக்களில் திரு வெம்பாவை விண்ணப்பித்தல் கூறப்படுகிறது. முதல் கல்வெட்டில் ஆட்சி ஆண்டு குறிப்பிடப் படும் இடம் சிதைந்து விட்டது. எனினும் பின்வரும் கல்வெட்டுக்களால் இக்கல்வெட்டு மன்னனின் 20-ஆம் ஆட்சியாண்டுக்குரிய கி.பி. 1090-இல் செதுக்கப்பட்டது எனக் கொள்ள லாம். இறைவன் நல்லநாயனார், வீதிஉலா வரும்போதும், தேரில் பவனி வரும்போதும், இரண்டு தேவரடியார் மகளிர், திருவெம் பாவை முதல் பத்து (திருப்பள்ளி எழுச்சி) பாடிக்கொண்டு வருவதற்கு நிவந்தங்கள் அளிக்கப்பட்டதாகக் கல்வெட்டுக் கூறுகிறது.

அடுத்த கல்வெட்டு மன்னனின் 22-ஆம் ஆண்டுக்கு உரியது. இதன் காலம் கி.பி. 1092-ஆகும். ஆள்வி வளையமழகியாள் பதினெண் பூமிநங்கை என்னும் தேவரடியார் விழாக் காலங்களில், கோயிலில் திருவெம்பாவை இரண் டாம் திருப்பாட்டுப் பாடி, அதற்கு ஏற்ப நடன மாட வேண்டுமென்றும், இப்பணியைச் செய்ய அப்பெண்ணை நியமனம் செய்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

மூன்றாம் கல்வெட்டு மன்னனின் 20ஆம் ஆண்டு 1096-க்கு உரியது. நல்ல நாயனார் கோயிலில் திருவெம்பாவை கடைப்பத்துப் பாடுவதற்குக் குலோத்துங்க சோழ மாணிக்கம் என்று பெயர் கொண்ட உடையநாச்சி என்னும் தேவரடியார் கோயில்தானத்தாரால் நியமனம் செய்யப்பட்டாள் என்று கூறுகிறது.

நான்காம் கல்வெட்டு மன்னனின் 24ஆம் ஆண்டு 1094-க்கு உரியது. திருவேகம்பநங்கை என்னும் தேவரடியாரின் மகளான குலோத் துங்க சோழ மாணிக்கம் என்னும் பெயர் கொண்ட உடையநாச்சி இறந்து விட்டாள். எனவே பொற்கோயில் நங்கை என்னும் தேவ ரடியாரின் மகளான பூமியாள்வி என்பவள் தேவரடியாராகக் கோயில் பணிக்கு அமர்த்தப் பட்டாள். விழாக் காலங்களில் இறைவன் முன் பூமியாள்வி திருவெம்பாவை கடைப்பத்து பாடவேண்டுமென்றும், சாக்கைக் கூத்து ஆட வேண்டுமென்றும் கோயில் தானத்தார் நிய மனம் செய்தனர். மாணிக்க வாசகரின் திரு வெம்பாவைப் பாடல்கள் நாயகநாயகி பாவத் தில் உள்ளன. எனவே பாடல்களுக்கு ஏற்ப-தேவரடியார்கள் நடன மாடவும், சாக்கைக் கூத்து ஆடவும் நியமிக்கப்பட்டனர்.

## விக்கிரம சோழன் (1118-1135)

தென்னார்க்காடு மாவட்டம் எலவானசூர் என்னும் கிராமம், அக்காலங்களில் இறை யானரையூர் என்று அழைக்கப்பட்டது. கல் வெட்டுக்களில், இவ்வூர்ச், சிவன்கோயிலின் பெயர் ஊர்பாகங்கொண்ட தேவர் என்றே காணப்படுகிறது. இக்காலம் கிராமார்த்த நாதேச்சுவரர் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலில் உள்ள விக்கிரம சோழனின் கல் வெட்டு மன்னனின் 17-ஆவது ஆட்சி ஆண்டில் வெட்டப்பட்டது. இதன் காலம் கி.பி. 1135. ''திருப்பள்ளி அறை ஆள்உடையாள், திரு ஞாயிற்றுக்கிழமை தோறும் புறம்பே எழுந் தருளித் திருச்சாழல் கேட்டருளி, அமுது செய்து அருளி, கோயிலைச் சூழ எழுந்தருளி மேலே எழுந்தருள்கைக்கு அற்றை நாளுக்கு வேண் டும் அமுது படைக்க''—தேவையான நிவந் தங்கள் அளிக்கப்பட்டன என்று சொல்லப்பட் டுள்ளது.

சாழல் என்பது மகளிர் ஆட்டவகையுள் ஒன்று. திருச்சாழல் திருவாசகத்தில் உள்ளது. இருபது பாடல்கள் உடையது. எலவானசூர்க் கோயிலில் திருப்பள்ளி அறைநாச்சியார் (அம்மன்), ஞாயிற்றுக் கிழமை தோறும் எழுந் தருளி உலாவரும் காலத்துத் திருச்சாழல் பாடப்பட்டது என்னும் செய்தி சிந்தனைக் குரியது.

## இரண்டாம் இராசராசன் (1146-1173)

கும்பகோணத்திற்குத் தெற்கில் நான்கு கல்தொலைவில் உள்ளது மருதாநல்லூர் என்னும் கிராமம். இவ்வூர்ச் சிவன்கோயில் சற்குணேச்சரம் என்று அழைக்கப்படுகிறது. இது தேவாரத்தலம். திருஞான சம்பந்தரால் பாடல் பெற்றது. திருக்கருக்குடி என்று சம் பந்தர் அழைப்பர். கல்வெட்டுக்களில் இறை வனின் பெயர் விழுமியநாயனார் என்று கூறப் பட்டுள்ளது.

இக்கோயிலில் இரண்டாம் இராசராசனின் 2-ஆம் ஆட்சியாண்டு கி.பி. 1148-க்கு உரிய கல் வெட்டு ஒன்று உள்ளது. தேவரடியாராகிய கரை யேறிவிட்டாள் திருநீறிட்ட பெருமாள் என்னும் அம்மையார் - திருக்கருக்குடி விழுமிய நாயனார் கோயிலில் திருவாதவூர் நாயனாரை எழுந் தருள்வித்தாள் என்று சொல்லப்பட்டுள்ளது. நாள்தோறும் வழிபாட்டுக்கு நிவந்தம் அளித்த

னர். ''திருவாதவூர் நாயனார்'' என்று இங்குக் குறிப்பிடுவது மாணிக்கவாசகர் ஆவார்.

திருவலஞ்சுழி கபர்தீச்வரர் ஆலயத்தில் இராசராசனின் 12-ஆம் ஆண்டு மேடநாயிற்று அபரபட்சத்து நவமியும், புதன்கிழமையும் பெற்ற திருவோணத்துநாள் வெட்டப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. இதன் காலம் கி.பி. 1158-மார்ச்சு மாதம் 26ஆம் தேதி ஆகும். அன்று சித்திரை மாதம் 2-ஆம் தேதி புதன்கிழமை மாலை வரை நவமியும், மறுநாள் காலை 5 மணிவரை திருவோணமும் திகழ்ந்தன. கோயில் தேவரடியார் மகளிரில், ஆட்கொண்டான் தேவுந் திரு உடையாளும், கிழக்கடைய நின்றாளும் ஆகிய இவ்விருவரும், இக்கோயிலில் எழுந்தருள்வித்த திருவாதவூராளிகளுக்கும், திருநாவுக்கரசு தேவருக்கும், திருக்கண்ணப்ப தேவருக்கும் நாள் வழிபாட்டிற்கு நிவந்தங்கள் அளித்தனர் என்று சொல்லப்பட்டுள்ளது. திருவாதவூராளிகள் என்பதுமாணிக்கவாசகர் ஆவர், நிலங்களை நிவந்தங்களாகக் கொடுக்கும்போது இத்தேவர்களின் ஸ்ரீபாதத்தில் நீர்வார்த்துக் கொடுத்தனர்.

## இரண்டாம் இராசாதிராசன் (1166-1180)

வழுவூர் வீரட்டானேச்சுவரர் கோயிலில் இராசாதிராசனின் 5-ஆம் ஆண்டு, கர்க்கடக மாதம், பூர்வபட்சத்துத் திரயோதசி சனிக்கிழமைக்கு உரிய கல்வெட்டு ஒன்று உள்ளது. இதன் காலம் கி. பி. 1170 சூன் மாதம் 27-ஆம் தேதி ஆகும். (கர்க்கடகம்-ஆடி மாதம் முதல் தேதி). திருவாதவூர்நாயனாரின் திருமேனி எழுந்தருளிவிக்கப்பட்டு மார்கழித்திருவாதிரை, பங்குனி உத்தர விழாக்கள் எடுக்கவும், திருவெம்பாவை விண்ணப்பிக்கவும் நிவந்தங்கள் அளிக்கப்பட்டன.

## மூன்றாம் குலோத்துங்கன்:

வழுவூர் வீரட்டானேச்சுவரர் கோயிலில் உள்ள மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டு யாண்டு மூன்றுக்கு உரியது. இதன் காலம் கி.பி. 1181-ஆகும். முன்சொல்லப்பட்ட கல்வெட்டில் கூறப்பட்டிருக்கும் திருவாதவூர் நாயனாருக்குப் பூசை வழிபாட்டிற்கு வேண்டிய திரவியங்கள் வாங்க நிவந்தங்கள் அளிக்கப்பட்டன.

விருத்தாசலம் வட்டம் நல்லூர் நல்ல நாயனார் கோயிலில், இம்மன்னனின் 6-ஆம் ஆண்டு கி.பி. 1184-க்கு உரிய கல்வெட்டில் இறைவியின் ஆலயத்தில் திருச்சாழல் விண்ணப்பம் செய்ய நிவந்தங்கள் அளிக்கப்பட்டதெனச் சொல்லப்பட்டுள்ளது.

## திருவாதவூர்:

மதுரை மாவட்டம் மேலூருக்குத் தெற்கில் சுமார் எட்டு கல் தொலைவில் திருவாதவூர் என்னும் ஊர் உள்ளது. மாணிக்கவாசகர் அவதரித்த திருத்தலம் திருவாதவூர் ஆகும். இவ்வூரில் ஓர் கற்பலகையில் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டு கி.பி. 1216-இல் முடிசூடிய முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனுடையது. மன்னனின் 16ஆம் ஆண்டு கி.பி. 1232இல் வெட்டப்பட்டது. இக்கல்வெட்டுச் சில இடங்களில் சிதைந்துள்ள போதிலும், சுவையான செய்திகளைக் காண முடிகின்றது. இவ்வூரின் திருவாதவூர்ப் பெருமாள் திருமடவிளாகம் குறிப்பிடப்படுகிறது. மும்முடிச் சோழன் பூவண முனிவன் அதிகைமான் என்பவன், திருவாதவூர்ப் பெருமாள் பக்கல் விலைகொண்ட சில நிலங்களையும் மற்றும் விலைக்குக் கொண்ட வேறு பல நிலங்களையும் ''பாண்டனம் பலங்காட்டின பெருமாள் திருமடத்துக்கு'' நிவந்தமாக அளித்தவன். திருமடத்தில் நாயனாரைப் பூசித்து இருக்கும் தவசியர்க்கு நாள்தோறும் அன்னமிடவும் வழி வகுத்தனன். இச்செய்திகளைக் கூறும் பகுதிகளில் ''திருவாதவூர்ப் பெருமாள் சீபாதத்துத் திருமடவிளாகம்''—''திருவாதவூர்ப் பெருமாள் பக்கல் விலைகொண்ட நிலம்'' ஆகிய தொடர்கள் காணப்படுகின்றன. எனவே அவ்வூரில் திருவாதவூர்ப் பெருமாள் ஆகிய மாணிக்கவாசகரின் பெயரில் ஒரு கோயிலும், அதனை ஒட்டிய ஒரு மடமும் இருந்தன என்னும் செய்தியை அறிகிறோம். இக்கல்வெட்டைத் தாங்கியுள்ள கற்பலகை நாட்டப்பட்டுள்ள இடமே நிவந்தம் அளிக்கப்பட்ட நிலமாகும்.

## மதுரை:

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி. 1238-இல் முடிசூடியவன். இம்மன்னனது இரண்டு கல்வெட்டுக்கள் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் காணப்படுகின்றன. முதல் கல்வெட்டு மன்னனின் 4 ஆம் ஆண்டில் வெட்டப்பட்டது. இதன் காலம் கி.பி. 1242. அய்யன் மழவராயன் என்னும் அமைச்சன் கேட்டுக் கொண்டதன் காரணமாக அரசன் இட்ட உத்தரவைக் கூறுகிறது. வாணாதராயன் என்பவன் தன் பெயரால் ஒரு சந்தியை ஏற்படுத்தி இறைவனுக்குச் சிறப்புப்பூசை வழிபாடுகள் செய்ய நிவந்தங்கள் அளித்தனன். திருவெம்பாவை விண்ணப்பம் செய்யும் கோவணவர்க்கு அப்பமிடவும் வழிவகைகள் செய்யப்பட்டன. விழாக்காலங்களில் இறைவன் தெற்குப் புறத்தில் இருக்கும் வாணாதராயன் திருவாசலில் - விழாக்காலங்களில் — இறைவன் சாதாரிப்பண் கேட்டருளவும் வழிமுறைகள் வகுக்கப்பட்டன.

இரண்டாம் கல்வெட்டு மன்னனின் ஆட்சி ஆண்டு 15-க்கு உரியது. இதன் காலம் கி.பி. 1253 ஆகும். அருளாளன் சேவகத்தே[illegible] வைணாதராயர் கோயிலுக்குச் சில [illegible] பணிகள் செய்தார். இதன் தொடர்பா[illegible]

னின் அதிகாரி தமிழ்ப் பேரரையன் என்பவன் விண்ணப்பித்தபடி மன்னனும் சோழ பாண்டிய நல்லூர் என்னும் கிராமத்தைத் திருப்பணி களுக்காக, நிவந்தமாக அளித்துக் கீழ்க்கண்ட வாறு மேலும் சில திருப்பணிகள் செய்தனன்.

(1) ''அதிரவீசியாடுவார்'' என்னும் பெயர் கொண்ட திருமண்டபம் கட்டப்பட்டது.

(2) திருநடைமாளிகை ஒன்று கோயி லுக்குள் கட்டப்பட்டது.

(3) இறைவன் வீதிஉலா வருவதற்குத் தேர் ஒன்று அளிக்கப்பட்டது.

(4) எழுநிலைக் கோபுரம் செப்பனிடப் பட்டது.

**திருப்பத்தூர் :**

இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டி யன் கி.பி. 1254இல் முடிசூடியவன். திருப்பத் தூரில் இம்மன்னனது நான்காம் ஆட்சியாண்டு, கன்னிநாயற்று, முதல் திகதியும், அபர பட்சத் துத் திரிதியையும், அசுவதி நட்சத்திரமும் பெற்ற புதன்கிழமை அன்று வெட்டப்பட்ட கல்வெட்டுக்கள் இரண்டு உள்ளன. இக்கல் வெட்டுக்களின் காலம் கி.பி. 1257-ஆகஸ்டு மாதம் 29ஆம் தேதி (கன்னி -புரட்டாசி மாதம் முதல் திகதி-புதன்கிழமை). திருச்சிற்றம்பல முடையாரும், திருவாதவூர் நாயனாரும் எழுந் தருளிவிக்கப்பட்டுப் பூசை வழிபாட்டுக்கு நிவந் தங்கள் அளிக்கப்பட்டன என்று சொல்லப் பட்டு உள்ளது. திருச்சிற்றம்பலமுடையார் என்பது நடராசப் பெருமானைக் குறிக்கும். திருவாதவூர் நாயனார் என்பது மாணிக்க வாச கர் ஆவார்.

**திருக்கோடிகா :**

கும்பகோணத்திற்கு வடமேற்கில் உள்ள திருக்கோடிகா, திருக்கோடீச்சரர் கோயி லில் கோப்பெருஞ் சிங்கனின் கல்வெட்டுஒன்று உள்ளது. இது மன்னனின் 22-வது ஆண்டு கி.பி. 1265இல் வெட்டப்பட்டது. திருப் பெருந்துறை ஆளுடையாரைப் பிரதிட்டித்து, கோயிலும் திருமுற்றமும் ஏற்படுத்தப்பட்டன. திருப்பெருந்துறை ஆளுடையார் பூசை வழி பாட்டிற்கு நிவந்தங்கள் அளிக்கப்பட்டன. 'திருப்பெருந்துறை ஆளுடையார்' என்ற பெயர் ஏழு இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. திருப்பெருந்துறை ஆளுடையார் ஸ்ரீகோயில் என்று இரண்டு இடங்களில் வருகிறது. அளிக்கப்பட்ட நிவந்தம் திருப்பெருந்துறை ஆளுடையார் கோயிலுக்கு ஆகும். ஆனால் இதனைக் கூறும் சிலாசாசனத்தைத் திருக் கோடிக்காவல் சிவன் கோயிலில் திருநடை மாளிகையில் கல்லில் வெட்டினர் என்று கூறப் படுகிறது. கல்வெட்டும் அங்குதான் உள்ளது.

எனவே திருக்கோடிகாவலில் திருப்பெருந் துறை ஆளுடையார்கோயில் என்று ஒரு தனிக் கோயில் கி.பி. 1265-இல் கட்டப்பட்டதுஎன்று அறிகிறோம். ''திருப்பெருந்துறை ஆளுடை யார்'' என்னும் பெயர் மாணிக்கவாசகரைக் குறிக்கலாம் என்று கருதுகின்றேன்.

**முடிவுரை :**

மாணிக்கவாசகர் 9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். அவரது திருப்பதி கங்கள் கி.பி. 1035-இலிருந்து 1043-க்குள் நம்பியாண்டார் நம்பியால் இராசேந்திர சோழன் காலத்தில் எட்டாம் திருமுறையாகச் செய்யப்பட்டது. இக்காலம் முதலாக மாணிக்க வாசகரின் பாடல்களைப் பாடுவதும், பாட லுக்கு ஏற்பத் தேவரடியார் நடனமாடுவதும் பிரபலமாயிற்று. 12ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியிலிருந்து மாணிக்கவாசகருக்குத் திரு மேனி எடுக்கப்பட்டுப் பூசை வழிபாடுகளும் நடத்தப்பட்டன. இவையாவும் சோழமன்னர் களால் பெரிய அளவில் சமுதாயத்திலும், சம யத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டன. சோழர் களைப் பின்பற்றிய பாண்டியர்களும், பிற் காலப் பல்லவ மன்னனும் இப்பணியில் ஈடு பட்டனர். அம்மன்னர்கள் செய்த நிரந்தர மான தர்மங்களின் அஸ்திவாரங்கள் இன்றும் அழியாமல் நிற்கின்றன.

இதுவரை படியெடுக்கப்பட்டு வெளிவந் துள்ள கல்வெட்டுக்களில் அடியேன் ஆய்ந்த வற்றை இங்குக் குறிப்பிட்டு உள்ளேன். விஜய நகர மன்னர் காலத்தும் இப்பணி தொடர்ந்து இருக்கலாம். விரிவுக்கு அஞ்சி ஆய்வினை 13ஆம் நூற்றாண்டுடன் நிறுத்திக் கொண் டேன்.

சோழர்களும் பாண்டியர்களும் பல்லவ னும் இன்று இல்லை. அவர்கள் எதையும் கொண்டு வரவில்லை. எதையும் கொண்டு செல்லவில்லை. ஆனால் அவர்கள் விட்டுச் சென்றவைகள் ஏராளம், ஏராளம். அவை ஆலயங்களாகவும் கல்வெட்டுக்களாகவும், இலக்கியங்களாகவும் சிற்பங்களாகவும் காட்சி அளிக்கின்றன. எது நிரந்தரமோ, எது சாசு வதமோ அதைத்தான் அவர்கள் செய்தனர். அவர்களது வழித்தோன்றல்களாகிய நாம் அவர்கள் செய்த தர்மங்களைக் காப்பாற்ற வேண்டும். இதுவே நமது நாட்டுக்கும், நம் முன்னோர்களுக்கும் நாம் ஆற்றும் நன்றிக் கடனாகும்.

— — — —

# திருமால் திருவுருவங்கள்

"திருமால்நெறிச் செல்வர்"
திரு. என். எஸ். தாத்தாசாரியார்,
தஞ்சை.

''தமர்உகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமர்உகந்த தெப்பேர் மற்றப்பேர்-தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியா னாம்''.

**முன்னுரை:**

பக்தர்கள் தன்னைத் தத்தம் நிலைக்கு ஏற்ப வழிபட்டு உய்வதற்காகத் திருமால் ஐந்து நிலையில் நின்று தரிசனம் தருகிறார் என வைணவ ஆகம நூல்கள் கூறுகின்றன. அந்த ஐவகை நிலையினுள், ''அர்ச்சாவதாரம்' என்ற வழிபாட்டுக்குரிய உருவ நிலையும் ஒன்றாகும். இந்நிலைக்கே ஏற்றமும் அதிகம் என்பார். அந்த உருவ நிலைகளின் அமைப்பு களைப் பற்றிப் பழைய நூல்கள் விரிவாகக் கூறியுள்ளன. சிலவற்றை ஈண்டுக் காணலாம்.

சிவபெருமானின் உருவங்களைப் பற்றிக் கூறும் நூல்கள் பல உள்ளமைபோல, திருமாலின் உருவங்களைப் பற்றிய விளக்கம் உரைக்கும் நூல்கள் அவ்வளவு இல்லை. ஆயினும், பழைய வைகானச ஆகமநூல்களில் சிறப்பாகவும், பாஞ்சராத்திர ஆகமநூல்களில் குறிப்பாகவும், உருவவிளக்கம் கூறப்பட்டுள்ளது. தென்னிந்தியத் திருமால் வடிவங்கள் பெரும்பாலும் ஆகமநூல் வழியில் அமைந்தவைகளேயாகும். ஆகம முறைப்படிக்குத் திருமால், ஆலயங்களில் நின்ற இருந்த கிடந்த திருக் கோலங்களில் அமைய வேண்டும். இவைகள் யோகம் போகம் வீரம் ஆபிசாரிகம் என நான்கு விதமாக அமையலாம். யோகிகள் யோக மூர்த்திகளையும், குடும்பத்தில் உள்ளவர்கள் போகமூர்த்திகளையும், வீரர்கள் வீரமூர்த்தி களையும், பகைவர்களுக்குத் துன்பம்இழைக்க விரும்புகிறவர்கள் ஆபிசாரிக மூர்த்தியையும் வணங்குவார்கள். ஆக இவை மொத்தம் பன்னிரண்டு பிரிவுகள் கொண்டவை. மேலும் இப் பன்னிரண்டு மூர்த்திகள். உபமூர்த்திகளுடன் முதல் இடை கடை என்று மூன்று பிரிவுகளாக முப்பத்தாறு மூர்த்தங்களாக அமையும். இன்று பழக்கத்தில் திருமால் வடிவங்கள் போக மூர்த்திகளாகவோ, அல்லது யோக போக மூர்த்திகளாகவோ தான் காணப்படு இன்றன. வீரமூர்த்திகள் அருமை. ஆபிசாரிக மூர்த்தங்கள் இன்று இல்லவே இல்லை எனலாம். இதனை வேண்டும்பொழுது அமைத்து அழித்து விடுவதும் உண்டு.

**அயல் நாட்டில் விஷ்ணு வடிவம்:**

''விஷ்ணு'' என்ற சொல்லுக்கு, எங்கும் பரந்தவர், நன்மை தருகிறவர், மாயையிலிருந்து அகற்றுபவர், எல்லாப் பொருள் களின் உயிர்நாடியாய் இருப்பவர் என நான்கு வகைப் பொருள் உண்டு. இந்த விஷ்ணுவின் சிறப்பும், அவரது வடிவங்களும் அயல்நாடு களிலும் உண்டு. சிறப்பாகச் சீனா, ஜப்பான் என்ற இடங்களில் திருமால் புத்தர் பெருமானாக வடிவக் காட்சி தருகிறார். சம்பா, காம்போஜம், சயாம், சுமத்ரா, ஜாவா முதலிய நாடுகளில் நாராயணன், அரி, கோவிந்தன் என்ற பெயர்களால் திருமாலே முழு முதற் கடவுளாக முன்பு வழிபடப் பட்டிருக்க வேண்டும் என்பதும் ஆராய்ச்சியாளர்களின் உறுதி.

**பலவகையான வடிவங்கள்:**

தமிழ்நாட்டில் இன்று உள்ள திருமால் உருவங்கள் எல்லாம் பெரும்பாலும் 7ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவைகளே. பிருகத் சம்மிதை என்ற பழைய வடமொழி நூலில் (கி.பி. 400) உருவ இலக்கணங்கள் ஐந்து செய்யுள்களிலே கூறப்பட்டுள்ளன. அவை களாவன: திருமாலின் திருமேனியில் கைகள் எட்டு அல்லது நான்கு அல்லது இரண்டு இருக்கலாம். எட்டுக் கைகளானால், வலக்கைகளில் கத்தி கதை அம்பும் இடக்கைகளில் வில் கேடயம் சங்கு சக்கரமும், ஒரு வலக்கை அபய முத்திரையுடனும் இருக்கும். நான்கு கைகளானால், வலக்கை அபய முத்திரையுடனும் இருக்கும். நான்கு கைகளானால், வலக்கை அபய முத்திரையுடனும், கதையுடனும், இடக்கைகளில் சங்கு சக்கரமும் இருக்கும். இரண்டு கைகளானால், வலக்கை அபய முத்திரையுடனும், இடக்கை சங்கேந்தியும் இருக்கும். இந்த வடிவங்கள் மார்பில் ஸ்ரீவத்சம் என்ற மறுவுடனும், கௌஸ்துபம் என்ற ஆபரணத்துடனும், காதுகளில் கடுக்கன்களும், தலைமேல் முடியும் (கிரீடம்) துலங்க இருக்க வேண்டும். திருமுக மண்டலம் கம்பீரமாகவும் புன்சிரிப்புடனும் இருக்க வேண்டும் என்பதேயாகும்.

பழைய விஷ்ணு சிற்பங்களுக்குச் சீதேவி பூதேவி என்ற இரு பிராட்டியர்கள் மருங்கே இருப்பதில்லை. ஆயசிர்ஷம் என்னும் பாஞ்சராத்திர நூலில் நான்கு கைகளுடன் கூடிய விஷ்ணுவின் வடிவம் கீழ்வருமாறு அமைக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

வலப்பக்கத்து மேல்கையில் சக்கரம், கீழ்க் கையில் தாமரைப்பூ. இடப்பக்கத்து மேல் கையில் கதை, கீழ்க் கையில் சங்கு இருபக்கமும் ஸ்ரீயும், புஷ்டியும், கையில் தாமரைப் பூவும் வீணையும் பிடித்து விஷ்ணுவின் தொடை அளவிற்குச் சற்றுச் சாய்ந்திருக்கும் என்பதாகும். மற்றும் இதைப் பற்றிய சிறப்புகளும் இயல்புகளும், மந்தனாவின் ரூபமந்தனம், ஹேமாத்ரியின் விரதகாண்டம் போன்ற நூல்களில் காணப்படும். சில இடங்களில் நிற்கும் விஷ்ணுமூர்த்திகள் நான்கு முகங்களுடனும் காணப்படும். முக்கியமாக இந்தியாவின் வடகோடிப் பகுதிகளிலும், கீழ்மத்தியப் பகுதிகளிலும் ஓரளவிற்கு அவைகள் காணப்படும். அவைகளில் சில நான்கு, எட்டு, பன்னிரண்டு கைகள் கொண்டவை. இவைகள் குஷானர் காலத்திற்குப் பிறகு பல மாறுதல்களைப் பெற்றுவிட்டன என்பர். விஷ்ணு தர்மோத்திரம் என்ற நூலின் கருத்துப்படிக்கு, விஷ்ணு கருடன் மேல் நான்கு முகங்களுடனும், எட்டுக் கைகளுடனும் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் அமையலாம். கிழக்கு முகம் சாந்தம் உள்ளதாகவும், தெற்குமுகம் நரசிங்க முகமாகவும், மேற்கு அதாவது பின்பக்கமுகம் கபிலர் முகமாகவும், வடக்குமுகம் வராக முகமாகவும் இருக்க வேண்டும். வராக அவதாரம் என்பதற்குப் பன்றி அல்லது காண்டாமிருக வடிவம் என்றும் சிற்பநூல் கூறுவதுண்டு. காண்டாமிருக முகமுள்ள உருவங்களும் காணப்படுகின்றன. அடுத்தபடியாக உட்கார்ந்த விஷ்ணு சிற்பங்கள் நிற்கும் கோலங்களை விடக் குறைவாக உள்ளன. அவைகள் ஆதிசேஷன் மீதோ, கருடன்மேலோ பத்மாசனத்திலோ தனித்தோ அல்லது தேவிமார்களுடனோ காணப்படும்.

வடநாட்டில் சில இடங்களில் அமர்ந்த விஷ்ணுவின் வகைகளில் பலப்பல தென்படுகின்றன. சிவபெருமான் வடிவான உமா மகேசுவர மூர்த்தியைப்போல லட்சுமி நாராயண மூர்த்தங்களை அமைப்பதுண்டு. அவைகள் வலக்காலைத் தொங்கவிட்டு இடக்காலை மடித்து ஆசனத்தின் மேல் வைத்துக்கொண்டு அந்தத் திருவடியில் இலக்குமியை உட்கார வைத்திருக்கும் வகையில் இருக்கும். அல்லது இலக்குமி இல்லாமலும் மேலே குறித்தபடிக்கு வடிவம் இருக்கும். பெரும்பாலும் திருமாலின் அமர்ந்த அழகான வடிவங்களே அதிகம். சயனத் திருக்கோலம் அதிகம் இல்லை. சயனத் திருக்கோலங்கள் அரிதாயினும் அவை எட்டு வகைப்படும். , அவை உத்தியோகம் தருப்ப சயனம் புஜங்கசயனம் போகசயனம் மாணிக்க சயனம் வடபத்திரசயனம் வீரசயனம் தவ சயனம் என்பவையாகும். இவைகளின் தோற்றங்களில் சில நுணுக்கமான மாறுபாடுகள் உண்டு. பள்ளிகொண்ட அரங்கநாதர் வடிவம் சில உண்டு. அந்த மூர்த்திகள் பிரளய காலத்தில் உண்டாகும் சக்திகள் யாவும், பரம் பொருளான ஸ்ரீமந் நாராயணரை அடைந்து, மறுபடியும் அவன் சங்கல்பத்தால் இந்தச் சக்திகள் யாவும் தோன்றுகின்றன என்பதைக் குறிக்கும்.

### திருமாலின் இருபத்து நான்கு வடிவங்கள்

விஷ்ணு தர்மோத்தரத்தில் கூறியுள்ளபடி, சங்கர்ஷணன் பிரத்யும்நன் அநிருத்தன் வாசுதேவன் ஆகிய நால்வரையும் திருமாலின் நான்கு தனித்தனிப் பிரிவுகளாகக் கொள்ளலாம். இவைகளை வியூக மூர்த்திகள் என அழைப்பார்கள். இந்த நான்கு மூர்த்திகளையும் நான்கு முகங்கள் எட்டுக் கைகள் கொண்ட மூர்த்தியான அமைப்பில் கருதலாம். இந்த வடிவில் உள்ள கிழக்குப் பக்க முகம் சிரிப்புடன் கூடிய வாசுதேவனாகும். தெற்கு நோக்கிய சிங்கமுகம் சங்கர்ஷணன். வடக்குமுகமான வராகம் பிரத்யும்நன். பின்பக்கமாய் மேற்குப் பார்த்திருக்கும் ருத்திரமுகம் அநிருத்தன் என்பதாம். இந்த வியூக வடிவத்தின் நான்கு நான்கு பிரிவுகளுடன் மொத்தம் இருபத்து நான்கு அமைப்புகள் கணக்கிடப்பட்டுள்ளன. இதன் விபரம் மகாபாரதம் அநுசாசன பர்வத்தில் கூறப்பட்டுள்ளது. பொதுவாகத் திருமாலின் ஆயிர நாமங்களில் 24 நாமங்களின் விளக்கமே மேலே கூறப்பட்டுள்ளது. அந்த 24 நாமங்களின் விளக்கமே மேலே கூறப்பட்ட 24 முகங்களின் அமைப்பாகும். இந்த 24 முகங்களுக்குத் தக்கவாறு ஆயுதங்களும் 24 உண்டு என்கிறது பழைய ஆகம நூல்.

### தசாவதார உருவ அமைப்புகள்

அவதாரம் என்ற சொல்லிற்குப் பரம் பொருள் மக்களுடன் இணைந்து கலந்திருக்கத் தாழ வந்து அருள் பாலிப்பது எனப் பொருள். அவைகள் பூரணம் ஆவேசம் அமிசம் என்று மூன்று வகைப்படும். பத்து அவதாரங்களில் இராமனும் கிருஷ்ணனும் பூரண அவதாரங்கள். சிலகாலத்திற்குச் சில குறித்த செயலைச் செய்யத் திருமால் தனது சக்தியின் ஒரு சிறு பகுதியைத் தான் விரும்பிய வஸ்துவிற் செலுத்தலாம். இதற்கு ஆவேசம் எனப் பெயர். பரசுராம அவதாரமே இதற்குச் சான்று. அமிசாவதாரங்களே ஆழ்வார்கள் போன்ற மகான்களின் தோற்றங்களாகும். திருமாலின் அவதாரங்கள் எண்ணற்றவைகளேயாயினும், பத்து அவதாரங்கள் மிக முக்கியமாகும். இந்தப் பத்து அவதாரங்களின் அமைப்புகள் பலமுறையில் இருக்கின்றன. அவை எப்படி என்பதைச் சிறிது பார்ப்போம்.

மச்சம்-மீன், கூர்மம்-ஆமை. இந்த இரண்டு அவசர உருவங்கள் முழுவதும் மீனாகவோ, ஆமையாகவோ காட்டப்படலாம். அல்லது மேல் பகுதி கிரீடத்துடனும், நான்கு கைகள் கொண்ட மனிதன் போலவும், கீழ்ப்பகுதி மீன் ஆமை ஆகியவற்றின் அமைப்பிலோ இருக்கலாம். வராக அவதாரத்தின் அமைப்போ பலவிதம். பன்றித் தலையுடன் நான்கு கைகளுடன் மனித உடலுடன் இருக்க

லாம். ஸ்ரீமுஷ்ணத்தில் எம்பெருமான் இது மாதிரிதான் சேவை தருவார். திருவிடவெந்தையில் பெருமான் வராகத் திருமுக மண்டலத்துடன், பூமிப்பிராட்டியை இடது பக்கத்தின் தொடையில் அமர்த்திக் கொண்டும் அணைத்துக் கொண்டும் சேவை தருவார். இவருக்குப் பூவராகன் என்ற திருநாமம். வங்காளத்தில் வராகப் பெருமாள் ஒரு பக்கமாகப் பார்த்துக் கொண்டு சங்கம் போன்ற முகத்துடன் முற்கால வடிவங்களின் அமைப்பில் தென்படுகிறாராம். சில சமயம் பரமபதநாதன் போல் அமர்ந்து தேவியை மடியிலோ, அருகிலோ வைத்துக் கொண்டிருப்பது போலும் அமைக்கலாம். இவருக்கு யக்ஞ வராகன் என்று திருநாமமாகும். நரசிங்க அவதாரத்தின் சிறப்பினையும் அமைப்பையும் பற்றி விஷ்ணு தருமோத்திரம் என்னும் நூல் நன்கு உரைக்கிறது. இது சிங்க முகத்துடனும் மனித உடலுடனும் இரணியனை மடியில் இட்டுக் கிழிப்பது போன்ற தோற்றமும், 4, 6, 8 கைகள்கொண்ட தோற்றமும் கொண்டதாகும். 12, 16 திருக்கைகள் கொண்ட வடிவங்களும் உள.

யோக நரசிம்மன், கிரிஜா, தாணு(லட்சுமி நரசிம்மன்) போன்றவர்கள் யோகாசனத்தில் இருப்பதாகவும், குகையிலிருந்து வருவது போலவும், தூணில் இருந்து வருவதுபோலவும், சிங்கமுகத்துடன் அமைக்கப் பெற்றிருக்கலாம், கருடன் மேலும் ஆதிசேடன் மேலும் அமர்ந்திருக்கும். நரசிம்ம வடிவங்களும் உண்டாம். வாமன அவதார வடிவம் இரண்டு வகைகளில் இருக்கலாம். குள்ளமான பிரம்மசாரி ஒன்று. ஓங்கி உலகளந்த வடிவம் ஒன்று. வைகானச ஆகமப்படி திருவிக்கிரமன் திருவடிகளில் தூக்கி இருப்பது ஊன்றிய திருவடியான முட்டு வரையிலோ, நாபி வரையிலோ திருமுடிவரையிலோ இருக்கலாம். 4, 8 திருக்கைகள் அமைக்கப்படலாம். பரசுராம அவதாரத்தில் 2, 4 கைகள் இருக்கும். கோடரியே இவருடைய ஆயுதம். இராம அவதாரத்தில் வில்லும் அம்பும் ஏந்திய கைகளே அடையாளமாகும். இராமனுடைய வடிவங்களில் நான்கு திருக்கைகளும் உண்டு.

பலராம அவதாரத்தில் இவருடைய முக்கிய ஆயுதம் கலப்பை. உலக்கையும் ஆயுதமாக இருக்கலாம். சிலசமயம் கருடன் மேல் அமர்ந்திருப்பதாகப் பலராம வடிவத்தைக் காட்டுவதுண்டு. நான்கு திருக்கைகள் இவருக்கு அமைக்கப்பட்டால், அப்பொழுது கலப்பை, உலக்கை, சங்கு சக்கரங்கள், அத்திருக்கைகளில் ஆயுதங்களாகும். தசாவதார வரிசையில் இவர்எழுந்தருளி இருக்கும்பொழுது, ஒருகையில் கலப்பையும், மற்றொரு கையில் அபய அல்லது வரத முத்திரையுடன் இருப்பர். இவருக்கு மூத்தபிரான் பலதேவர் பலபத்திரர் சங்கர்ஷணன் என்றெல்லாம் திருநாமங்கள் ஆகும்.

**கிருஷ்ணன் :** பத்து அவதாரங்களில் இவரே மிகவும் புகழ்பெற்றவர். இவரது அர்ச்சை வடிவங்களின் தோற்றங்கள் எண்ணற்றவை. கல்கி அவதாரம். இதுவே கடைசி அவதாரம், இந்த அவதாரத் தோற்றத்தைப் பலபடியில் காட்டலாம். முகம் குதிரையின் முகம்போல் அல்லது மனிதனது போல் இருக்கத் திருக்கைகள் 2, 4 கொண்டவைகளாக அமைக்கலாம். குதிரைமேல் அமர்ந்து பட்டாக்கத்தியுடன் வருவது போலும் அமைப்பார்கள். ஒருகையில் கத்தியும், மற்றொரு கையில் குதிரையின் கடிவாளமும் இருக்கும். இவ்வாறு திருமாலின் பிம்ப உருவ அமைப்பில் மேலும் பற்பல அமைப்புகளும் உண்டு. சுருக்கமாக இதில் எழுதியபடி.

***

## கபீர்தாசர் (கி.பி. 1440—1518)

காசியில் வாழ்ந்த நீரு என்னும் முகம்மதிய நெசவாளியின் மனைவி நீமா என்பவளால், ஒரு குளக்கரையில் கண்டெடுத்து வளர்க்கப் பெற்றார். பெரியவர் எனப் பொருள்படும் கபீர் என்னும் பெயர், திருக்குரானில் கண்டெடுத்து இவருக்கு வழங்கப் பெற்றது. திருவள்ளுவரைப்போல இவரும் ஒரு நெசவாளராக வாழ்ந்து வந்தார். இராமாநந்தரைக் குருவாக அடைந்தார். இராமனும் ரகீமும் ஒன்றே; அரியும் அல்லாவும் வேறல்ல என்ற சமரச ஞானத்தைப் பரப்பினார். இவருடைய பாடல்களில் இந்து மதத்தின் அத்வைத வுணர்வையும், இசுலாமியத்துச் சூஃபிகளின் சமய அனுபவத்தையும் காணலாம். கடவுளைப் பற்றிய இவர்தம் பாடல்களில் 'நாயக நாயகி பாவம்' பெரிதும் அமைந்து காணப்படுகின்றது. இவர் கடவுளை இராமன் அரி கோவிந்தன் அல்லா என்னும் பெயர்களால் வழுத்தினராயினும், கடவுள் பல பிறவிகள் எடுத்தார் என்று கூறுவது அடாதென்றும், இறைவனைக் கல் செம்பு வடிவங்களில் வைத்து வணங்குவது பொருத்தமன்று என்றும், சமயக் கிரியைகளும் சடங்குகளும் பொருளற்ற புன்செயல்களாகும் என்றும், மிகவும் கடுமையாக மறுத்துப் பாடியுள்ளார். இந்தி மொழியின் ஒரு பிரிவான 'அவதி' மொழியில் இவருடைய பாடல்கள் அமைந்துள்ளன. தாம் இயற்றிய 'விப்ரமதீசி' என்னும் செய்யுள் நூலிற், கபீர்தாசர் பொருளற்ற வெறும் சடங்குகளை மிகக் கடுமையாகத் தாக்கி மறுத்துள்ளார். இவர் பாடல்களைத் தர்மாசார் என்னும் சீடர் தொகுத்து 'வைத்துப் பரப்பினார். சீக்கிய மத குருவாகிய' குருநானக் என்பவர், இவருடைய சீடரேயாவர். கபீர்தாசரின் முக்கியமான பாடல்களை 'பீஜக்' என்னும் நூல்களிற் காணலாம். இரவீந்திரநாததாகூர் இவருடைய 100 பாடல்களை வங்காளத்தில் மொழிபெயர்த்தார். ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. இவரது கொள்கையைப் பின்பற்றுவோர் 'கபீர் பந்திகள்' எனப்படுவர்.

—ஆசிரியர்.

# சங்க நூல்களில் இராமாயணக் குறிப்புகள்

ந. ரா. முருகவேள், M.A.,M.O.L.

**முன்னுரை:**

அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழியிலுள்ள நூல்களுள், பழமையும் பெருமையும் வாய்ந்தவை, சங்கநூல்கள் என்பனவாகும். அவைகள் இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பது, அறிஞர்கள் ஆராய்ந்து கண்ட முடிவு. 'சங்கமலி செந்தமிழ்' என்று திருஞான சம்பந்தரும், 'சங்கத்தமிழ் மாலை' என்று ஆண்டாளும், 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று ஔவைப் பிராட்டியாரும், பிறரும் குறிப்பிட்டிருத்தலால், சங்க நூல்களின் அருமை பெருமைகளை யாவரும் இனிது உணரலாம்.

**சங்கச் சான்றோர்கள்:**

இத்துணைப் பழமையும் பெருமையும் வாய்ந்த சங்க நூல்களில், சைவம் வைணவம் முதலிய சமயங்களின், கருத்துக்களும் கொள்கைகளும் தத்துவங்களும் ஆங்காங்கே விரவிக் காணப்படுகின்றன. சங்ககாலப் புலவர்கள், சமய உணர்வும் பண்பாடும் நிரம்பிய தலைசிறந்த பெரும் சான்றோர்களாக விளங்கியிருந்தனர். அவர்கள் தெய்வத் தன்மை வாய்ந்த சிறந்த பெருங் கவிஞர்களாய்ப், 'பொய்யடிமை இல்லாப் புலவர்கள்' எனப் பாராட்டப்பெறும் நிலையில் புகழ்பெற்று விளங்கியிருந்தனர். அத்தகைய தெய்வப் பெற்றிமை மிக்க சங்க காலத்துச் சான்றோர்கள் அருளிச் செய்த சங்கநூல்களில், பல சிறந்த சமய உண்மைகளும் வரலாறுகளும், ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னரே சிறப்புற எடுத்து விளக்கப் பெற்றிருப்பது, நம்மனோர் உணர்ந்து மகிழ்தற்குரிய செய்தியாகும்.

**இராமாயணம்:**

நம்முடைய பாரதநாட்டில் வழங்கிவரும் பலப்பல சிறந்த பண்டைய நூல்களுள், இராமாயணம் என்னும் இதிகாசம், ஈடும் எடுப்பும் அற்றது என்பதனை யாவரும் அறிவர். இராமபிரானின் இனிய வரலாறும், இணையற்ற சிறந்த தெய்விக இயல்புகளும், எவருள்ளத்தையும் கொள்ளை கொள்ளவல்லன. மிகவும் கற்றுணர்ந்த அறிஞர்கள், ஏதும் அறியாத பாமரர்கள் ஆகிய எல்லோருக்குமே, எல்லையில்லாச் சுவையும் இன்பமும் நல்கி, யாவராலும் மிகவும் விரும்பிப் போற்றப்படத்தக்கதாக 'இராமாயணம்' இலங்குகின்றது. எத்துணையோ பன்னெடுங்காலமாக, பற்பல நூற்றாண்டுகளாக, பலகோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களை எளிதில் கவர்ந்து, இணையற்று விளங்கி வருகின்றது இராமயணம்; நம் பாரத நாட்டுக் கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களில் எல்லாம் ஊடுருவித் தோய்ந்து ஒன்றி நின்று, பக்தி உணர்ச்சியினை வற்றாத பெருவெள்ளம் எனப் பெருக்கெடுத்து 'ஓடச் செய்துவரும் பெருமைக்குரிய நூல்களுள், இராமாயணம் இணையற்றது என்பதற்குத் தடையும் உண்டோ?

**சங்க நூல்கள்:**

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படும் பழந்தமிழ்ச் சங்கநூல்களிலும்கூட, இராமாயணத்தைப் பற்றிய செய்திகளும் கதைகளும் குறிப்புகளும் விரவி அமைந்து காணப்படுகின்றன. சங்க காலப் புலவர்கள் தாம் பாடத் தலைப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் தகவுற விளக்குவதற்கு, இராமாயண நிகழ்ச்சிகளையும், கதைகளையும் ஆங்காங்கே அழகிய இனிய உவமைகளாக எடுத்துக் காட்டி விளக்கிப் பாடியிருக்கின்றார்கள்.

எல்லோருக்கும் தெளிவுறத் தெரிந்தனவும், யாவரும் சுவைத்து உவந்து விரும்புவனவும் ஆகிய செய்திகளே, இலக்கியங்களில் உவமைகளாகப் புலவர்களாற் கையாளப்படும். இவ்வடிப்படையில் ஆராய்ந்தால், மிகப்பழங் காலத்திலேயே இராமாயண வரலாறு தமிழ் நாட்டில் நன்கினிது பரவியிருந்தமை புலனாகும். இவ்வுண்மையை விளக்கும் சங்ககால

இலக்கியச் சான்றுகள் சிலவற்றை மட்டும், ஈண்டுக் கண்டு இன்புறுவோம்.

(1) அகநானூறு:

இராமபிரான் சேதுபந்தனம் செய்து, இலங்கை செல்லத் தலைப்படும் முன்னர், ஒரு நாள் மாலை தன் துணைவர்களாகிய வானர வீரர்களுடன், மேலே நிகழ்தற்குரிய போர்ச் செய்திகள் குறித்து, தனுக்கோடியிலுள்ள கடற்கரையில் ஓர் ஆலமரத்தின் கீழ்த் தங்கியிருந்து ஆராய முற்பட்டார். அம்மாலை வேளையில், அவ்வால மரத்தின்கண் வாழ்ந்து கொண்டிருந்த பறவையினங்கள் தம் இயல்பிற்கேற்ப ஒன்றுகூடிப் பேரொலி செய்தன. அஃது இராமபிரான் வானரவீரர்களுடன் கலந்து நிகழ்த்திய ஆலோசனைக்குச் சிறிது தடையாக இருந்தது. அதனால் இராமபிரான் அப்பறவைகளை நோக்கித் தம் திருக்கையை அமர்த்தினார். அவ்வளவில் அப்பறவைகள் சிறிதும் ஒலி செய்யாமல் அமைதியுற்றடங்கி நின்றன.

இந்த இராமாயண வரலாற்றுச் செய்தியினை, 'ஒரு தலைவனும் தலைவியும் தம்முட் காதலித்துக் களவொழுக்கம் மேற்கொண்டிருந்தபொழுது, அலர்தூற்றிய அவ்வூர்ப் பெண்டிர்கள், பின்னர் அவ்விருவரும் முறைப்படி திருமணம் செய்துகொண்ட நிலையில், அலர்தூற்ற வாய்ப்பின்றி நாவடங்கி நின்றனர்' என்னும் கருத்தினை வற்புறுத்த, உவமையாக எடுத்துக்காட்டிக் கடுவன்மள்ளனார் என்னும் புலவர் பின்வருமாறு பாடுகின்றார்.

> வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
> முழங்கிரும் பவ்வம் இரங்கும் முன்துறை,
> வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
> பல்வீழ் ஆலம் போல,
> ஒலியவிந் தன்று இவ்வழுங்கல் ஊரே
>
> —அகநானூறு, 70

(2) புறநானூறு:

சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி என்னும் கொடைவள்ளல் ஒருவனிடம் சென்று, புலவர் ஒருவர் அவனைப் புகழ்ந்து பாடினார். அவ்வள்ளல், அவர்தம் புலமை நலனையும் பாடல்நலனையும் வியந்தினிது போற்றி, மிகுந்த பரிசில்களை வழங்கினான்; ஏராளமான பொன் அணிகலன்களை அளித்தான். புலவரும், அவர்தம் உறவினரும் அத்தகைய அணிகலன்களை எங்கும் என்றும் கண்டதிலர். அதனால் அவற்றைச்செய்வதின்ன தென்று அறியாமல், விரலில் அணிவதைச் செவியிலும், செவியில் அணிவதை விரலிலும், இடுப்பில் தரிப்பதைக் கழுத்திலும், கழுத்தில் தரிப்பதை இடுப்பிலுமாகக் காண்பார்க்கு நகைப்புண்டாகும் வண்ணம், மாற்றிமாற்றியணிந்து கொண்டு மகிழ்ந்து நின்றனராம். இச்செய்தியினை ஊன்பொதி பசுங்குடையார் என்னும் அப்புலவர் தாமே குறிப்பிடுகின்றார்.

அங்ஙனம் குறிப்பிடுங்கால் அவர், 'இராவணன் சீதையைக் கவர்ந்து தேரில் ஏற்றிக் கொண்டு வான் வழியாகச்சென்றபொழுது இருசியமூக மலையின் அருகில்,சீதைப்பிராட்டி தன் அணிகலன்களையெல்லாம் ஒவ்வொன்றாகக் கழற்றி எறிந்துகொண்டு சென்றாள். அவற்றை அங்கு வாழ்ந்து திரிந்த கொண்டிருந்த வானர சேனைகள் கண்டு எடுத்து, அவற்றின் ஒளியிலும் அழகிலும் மயங்கி, அவற்றைத் தாம் அணிந்துகொண்டு அழகு பார்க்க முற்பட்டன. ஆனால் அணிந்துகொள்ளும் முறை அறியாமையால், அவற்றை மாற்றி மாற்றிப் பிழைபட அணிந்துகொண்டு நகைச்சுவையைத் தோற்றுவித்துத் திகைத்து மயங்கின' என்னும் இராமாயணக் கதையினை எடுத்து உவமையாகக் காட்டிப் பாடி, உவகை விளைவிக்கின்றார்.

> மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
> தாங்காது பொழிதந் தோனே; அதுகண்டு
> இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்
> விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
> செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
> மிடற்றமை மரபின அரைக்குயாக் குநரும்
> கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை
> வலித்தகை அரக்கன் வவ்விய ஞான்றை
> நிலஞ்சேர் மதர்அணி கண்ட குரங்கின்,
> செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந்
> தாஅங்கு
> அறாஅ அருநகை இனிதுபெற் றிகுமே
>
> — புறநானூறு, 318.

(3) பரிபாடல்:

இராமாயணத்தில் தாடகை வதம் நிகழ்ந்த பின்னர், இராமன் அகலிகையின் சாபம் தீர்த்தருளிய செய்தியை யாவரும் அறிவர். இந்திரன் வஞ்சக வடிவம் கொண்டு வந்து அகலிகையினைப் புணர்ந்ததும், கவுதமமுனிவர் வருதல்கண்டு பூனை வடிவம்.கொண்டு, இந்திரன் மறைந்தோடியஃதும், கவுதம முனிவர் நிகழ்ந்த துணர்ந்து அகலிகையினைக் கல்லாகும் வண்ணம் சபித்ததும் ஆகிய செய்திகள், இராமாயணத்தில் வருவன. இவற்றை ஆசிரியர் திருவள்ளுவர் தாமும், தம்முடைய திருக்குறள் நூலில்,

> ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு
> ளார்கோமான்
> இந்திரனே சாலும் சரி
>
> — திருக்குறள்

என்று குறிப்பிட்டருளினர். இவ்விராமாயணக் கதைபற்றிய குறிப்பு, பரிபாடல் என்னும் சங்கம் மருவிய நூலிலும் பயின்றுள்ளது.

பரிபாடலில் முருகனைப் பற்றிய பாடல்கள் பல வருகின்றன. அவற்றுள் திருப்பரங்குன்றம் பற்றிய பாடற்பகுதி ஒன்று. 'அங்கேயுள்ள கோயிலில் அமைந்திருந்த சித்திரமண்டபத்தில் அகலிகை சாப விமோசனம் பற்றிய கதைச் சித்திரம் ஒன்றும் வரையப் பெற்றிருந்தது;

கோயிலில் முருகனைத் தொழுவதற்கு வரும் அடியார்கள், அச்சித்திரத்தைக் கண்டு வியந்து மகிழ்கின்றனர்' எனக் குறிப்பிடுகின்றது.

இந்திரன் பூனை: இவள் அகலிகை; இவன்
சென்ற கவுதமன்; சினன் உறக்கல்உரு
ஒன்றிய படிஇது; என்றுரை செய்வோரும்

பரிபாடல்: 19,50-53.

## (4) கலித்தொகை:

சங்கத்தொகை நூல்களுள் மிகவும் புகழ்பெற்ற தொன்றாய்க் 'கற்றறிந்தார் ஏத்துங்கலி' என்னும் சிறப்பினைப் பெற்றுத் திகழ்வது, கலித்தொகை என்னும் நூல். அதன்கண் 'குறிஞ்சிக்கலி' என்னும் பகுதியைப் பாடிய நல்லிசைப் பெரும்புலவர், கபிலர் என்னும் கவிஞர் பெருமான். ''மலைநிலத்தில் வாழும் மதங்கொண்ட ஓர் யானையானது, பூத்துப் பொலிவு எய்தி நின்ற வேங்கை மரத்தினைக் கண்டு, அதனைப் புலி என மயங்கி மருண்டு, கறுவு கொண்டு, அதன்மீது வேகமாகச் சென்று மோதியது. அதனால் அவ்வேங்கை மரத்தின் கண் அழுந்திய தந்தங்களை மீண்டும் அம்மரத்தினின்று இழுக்க முடியாமல், அவ் யானை யானது அலறிக் கதறி அழுது வருந்தி ஓலமிடுகின்றது.''

இவ்வியற்கை வருணனைச் செய்தியை விளக்கிப் பாடலுறும் கபிலர், 'இராவணன், சிவபிரான் உமைப்பிராட்டியுடன் எழுந்தருளி வீற்றிருக்கும் திருக்கயிலை மலையினைப் பெயர்த்தெடுக்க முயன்று முடியாமல் ,அதன் கீழ் அகப்பட்டுக்கொண்டு அலறிக் கதறி அழுது ஓலமிட்ட நிகழ்ச்சியை, உவமையாக எடுத்துக் காட்டிப் பாடி உவகை கூர்கின்றார்.

இமையவில் வாங்கிய சர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந்து உயர்மலை இருந்தனன் ஆக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்ப்புகுத்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல;
உறுபுலி உருஏய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவு கொண்டு அதன்முதற் குத்திய மதயானை
நீடிரு விடரகம் சிலம்பக் கூஉய்த்தன்
கோடுபுய்க் கல்லாது உழக்கும் நாடகேள்!

—கலித்தொகை.

## (5,6) மணிமேகலை:

செந்தமிழ் மொழியிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் 'மணிமேகலை' என்பது ஒன்று. மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பவர், இதனை இயற்றியருளினார். பௌத்த சமயக் கொள்கைகளைப் பரப்புதற்கென்றே, இந்நூல் தோன்றியது. இதன்கண்ணும் இராமாயணம் பற்றிய குறிப்புகள் அமைந்துள்ளன.

கோவலனுக்கும் மாதவிக்கும் மகளாகப் பிறந்த 'மணிமேகலை' யானவள், அமுதசுரபி என்னும் அரும்பெறற் பாத்திரத்தைப் புத்தர் பெருமான் அவதரித்த வைகாசிப் பூர்ணிமை நாளில், மணி பல்லவத் தீவில், கிடைக்கப்பெறுகின்றாள். அஃது அள்ள அள்ளக் குறையாமற் பெருகும் அட்சய பாத்திரம். அதனைக் கொண்டு மணிமேகலை, 'காணார் கேளார் கால் முடப் பட்டோர் பேணுநரில்லோர் பிணி நடுக்குற்றோர் 'முதலிய ஏழைகள் யாவருக்கும் உணவு வழங்கி உதவி செய்கின்றாள். விருச்சிகன் என்னும் முனிவராற் சபிக்கப்பெற்று, யானைத்தீ என்னும் தீராதபசி நோய் எய்திப் பன்னிரண்டு ஆண்டுகள் எங்கணும் வருந்தியுழன்ற காயசண்டிகை என்னும் கந்தருவப் பெண் ஒருத்தி, மணிமேகலைபாற் போந்து அவள் அமுதசுரபியினின்று வழங்கிய உணவை உட்கொண்டு, தீராத தன் நோய் தீரப் பெறுகின்றாள். அதற்கு முன்பெல்லாம் எத்துணை மலையளவு உணவை யுண்டும் தன் பசிநோய் தணியாமல் இருந்த தன்மையினை மணிமேகலைக்கு அவள் கூறுங்கால், ''இராமபிரான் சேதுபந்தனம் செய்த பொழுது வானர சேனைகள் கொண்டு வந்து எறிந்த பெரிய பெரிய மலைகள் எல்லாம், கடலின்கண் சென்று ஆழ்ந்து மறைந்து நின்றது போல, மலைமலையாகத் தான் இதற்கு முன்பு உண்ட உணவெல்லாம் தன் வயிற்றுக்குள் சென்று மறைந்து அடங்கிப் பசி தணிக்காமல் ஒழிந்தன'' என்று கூறியதாகச் சீத்தலைச் சாத்தனார் பாடுகின்றார்.

யானைத் தீநோய் அகவயிற் றடக்கிய
காயசண் டிகைஎனும் காரிகை வணங்கி,
நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீர் அடைத்த ஞான்று,
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை எல்லாம்
அணங்குடை அளக்கர் வயிறுபுக் காங்கு,
இட்டது ஆற்றாக் கட்டழற் கடும்பசிப்
பட்டேன் என்றன் பழவினைப் பயத்தால்

—மணிமேகலை 11,7-14

மீட்சி என்பது இராமன்வென் றான்என
மாட்சியில் இராவணன் தோற்றமை மதித்தல்

—மணிமேகலை 27,53-54

எனப் 'பத்துவகை அளவைகள்' பற்றி விளக்குங்காலும் 'மீட்சி' அல்லது பாரிசேடம் என்னும் பிரமாணம் பற்றிய உதாரணம் காட்டும் இடத்தில், இராமன் வென்றதும் இராவணன் தோற்றதும் ஆகிய செய்தியை அவர் குறிப்பிட்டிருத்தலும் உணர்தற்குரியது.

## (7) சிலப்பதிகாரம்:

இன்று தமிழ் மக்களிடையே பொதுவாக அனைவராலும் பாராட்டப் பெற்றுச் சிறந்து திகழ்வது, சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியம். இதனை இயற்றியவர் இளங்கோவடிகள் என்னும் தவநலம் சான்ற

முனிவரார். அவரைச் சமண சமயம் சார்ந்தவர் எனவும் சிலர் கூறுவர். அப்பெருந்தகையார் இயற்றியருளிய சிலப்பதிகார காவியத்திலும், இராமாயணத்தைப் பற்றிய இனியகுறிப்புகள் சில வருகின்றன.

கோவலன் புகார் நகரை விட்டு நீங்கி மதுரை மாநகர்க்குக் கண்ணகியுடன் புறப்படுகின்றான். அவன் புகார் நகரம் விட்டு நீங்கிய நிலையில், அந்நகரம் இராமனைப் பிரிந்த அயோத்தி போலப் பெரிதும் கலங்கி வருந்திய தாகக் கௌசிகன் என்னும் அந்தணன் கூற்றில் வைத்து, இளங்கோவடிகள் பாடுகின்றார்.

பெருமகன் ஏவல் அல்லது யாங்கணும்
அரசே தஞ்சம் என் றருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பேது உற்றதும்

— சிலப்பதிகாரம்

8. மதுரைமாநகர் நோக்கிப் புறப்பட்ட கோவலன், வழியிற் கவுந்தியடிகள் என்னும் சமண சமயத் தவமூதாட்டியாரைக் கண்டு வணங்குகின்றான்; வணங்கித் தனக்கு நேர்ந்த மிகப் பெருந் துயரநிலை பற்றிக்கூறி மனம் வருந்துகின்றான். அதுபோது கவுந்தியடிகள், ''இராமபிரானே தந்தையின் கட்டளைப்படி கானகம் சென்று, அங்கே தன் மனைவியாகிய சீதையினை இராவணனின் சூழ்ச்சியால் இழந்து வருந்திப் பலவகை இன்னல்களை அடைந்தனன் என்றால், நம்போலும் மனிதர் எம்மாத்திரம்?'' என்றுகூறித் கோவலனுக்கு ஆறுதல் உரைகள் பகர்ந்ததாக இளங்கோவடிகள் பாடுகின்றார்.

தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீஅறிந் திலையோ? நெடுமொழி அன்றோ!

— சிலப்பதிகாரம்.

இராமனை 'வேதமுதல்வற் பயந்தோன்' என்றும்; இராமனது வரலாறாகிய இராமாயணம், மக்கள் அனைவராலும் அறியப்பெற்று நாடு முழுவதும் பரவியிருந்தமையின் 'நெடுமொழி' என்றும்; இராமன் 'தந்தை தாய் வாக்கிய பரிபாலனம்' செய்தற் பொருட்டுப் பல இன்னல்களையும் மேற்கொண்டு நின்றான் என்பதனை உணர்த்தத் 'தாதை ஏவலின் மாதுடன் போகிக் கடுந்துயர் உழந்தோன்' என்றும் கூறியிருக்கும் நுட்பங்கள் நுனித்தறிந்து மகிழ்தற்குரியன.

9. மேலும், சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் என்னும் பகுதியில், சேரன் செங்குட்டுவனுக்கும் கனக விசயர்களுக்கும் நிகழ்ந்த போர்த்திறம் பற்றிக் குறிப்பிடுகையில், தேவாசுரப் போர் 18 ஆண்டுகளும், இராம ராவணப்போர் 18 மாதங்களும், பாரதப்போர் 18 நாட்களும், செங்குட்டுவனும் கனகவிசயனும் நிகழ்த்திய போர் 18 நாழிகைகளும் நடைபெற்று முடிவுற்றன' என இளங்கோவடிகள் குறிப்பிடுதலும் காணலாம்.

செறிகழல் வேந்தன் தென்தமிழ் ஆற்றல்
அறியாது மலைந்த ஆரிய மன்னரைச்
செயிர்த்தொழில் முதியோன் செய்
தொழில் பெருக
உயிர்த்தொகை யுண்ட ஒன்பதிற் றிரட்டி
யென்று
யாண்டும் மதியும் நாளும் கடிகையும்
சண்டுநீர் ஞாலம் கூட்டி எண்கொள
வருபெருந் தானை மறக்கள மருங்கின்
ஒருபகல் எல்லை உயிர்த்தொகை யுண்ட
செங்குட்டுவன்....

—சிலப்பதிகாரம்

**தொல்காப்பிய மேற்கோள்:**

இராமபிரான் தாடகைவதம் செய்து, அகலிகை சாபம் தீர்ந்து, விசுவாமித்திர முனிவர் அழைத்துச் செல்ல மிதிலைமா நகர்க்குட் போகின்றார். அங்கே வீதியிற் போய்க் கொண்டிருக்குங்கால், தற்செயலாக இராமபிரான் அரச மாளிகையின் மேல்மாடியில் உலாவி நின்ற சீதைப் பிராட்டியினைக் காண்கின்றார். சீதையும் இராமபிரானைக் காண்கின்றாள். இருவர் கண்களும் ஒன்றை ஒன்று சந்தித்தன! இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்திக் காதல் வயப்பட்டனர். இதனை,

எண்ணரும் நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்
றுண்ணவும் நிலைபெறா துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கி
னாள்(1)

பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்(2)

— கம்பராமாயணம்.

எனக் கம்பநாடர் கவிதைச் சுவை பெருகக் கவின்மிகப் பாடுகின்றார். இராமன் சனகனின் சிவதனுசை முறித்த பின்பே, சீதையைக் கண்டதாக வான்மீகி முனிவர் வடமொழியிற் பாடியிருக்கின்றார். ஆயினும் தமிழ் மொழியில் அகப்பொருள் இலக்கணம் வகுத்த முறையினைத் தழுவி, சனகனின் சிவதனுசை முறிப்பதற்கு முன்பே சீதை இராமபிரானைக் கண்டு காதல் கொண்டுவிட்டதாகக் கம்பநாடர் பாடியருள்கின்றார். கவிச்சுவை அமையப் பாடும் கம்பரின் கற்பனைத் திறனுக்கு, இஃதொரு சிறந்த எடுத்துக்காட்டாகும் எனலாம்.

இங்ஙனம், கம்பநாடர் தாமே தம்முடைய மனம் சென்றவாறு பாடிவிட்டார் எனப் பிறரெவரும் குறைகூற இயலாதவகையில், அவர்க்கு ஆதாரமும் அடிப்படையுமாக அமையத்தக்கதொரு செய்யுள் ஒன்று, தொல்காப்பியப் பொருளதிகார நூற்பா ஒன்றின் மேற்கோளாக, ஆசிரியர் நச்சினார்க்கினியார் அவர்களால் எடுத்துக்காட்டப் பெற்றிருக்கின்றது.

ஆள்வினை முடித்த அருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய இராமன், அவனோடு
மிதிலை மூதூர் எய்திய ஞான்றே
மதியுடம் பட்ட மாக்கண் சீதை
கடுவிசை வில்ஞாண் இடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்டம் எய்தித்
துயிலெழுந்து மயங்கினள்...

— தொல்.பொருள், 54 உரை

*(11)* இராமாயணத்தில் பரதனின் பாதுகா பட்டாபிடேகம் என்பது, ஒரு பெருஞ் சிறப்பு நிகழ்ச்சி. தனக்காகத் தனது தாய் ஆகிய கைகேயி பெருமுயற்சி செய்து பெற்றுத் தந்த அரசுகட்டில் உரிமையைப் பரதன் ஒருசிறிதும் விரும்பாமல், துச்சமென மதித்துத் துறந்தான். தனது தமையன் ஆகிய இராமபிரானின் திரு வடி நிலைகள் ஆகிய பாதுகையினை விரும்பி வேண்டிப் பெற்றுத் தன் தலைமேற் கொண்டு போற்றி மகிழ்ந்தான். பரதனின் இப் பண்பு நலம் பெரிதும் வியக்கத்தகுவது.

தொல்காப்பியத்திற் போதரும் ''கட்டில் நீத்தபால்'' என்பதற்கு, 'அரசின் அரசவுரிமை யைக் கைவிட்ட பகுதி. அது பரதனும் பார்த் தனும் போல்வார் அரசு துறந்த வென்றி' எனப் பொருள் விளக்கி உரை வரைந்து;

கடலும் மலையும் நேர்படக் கிடந்த
மண்ணக வளாகம், நுண்வெயில் துகளினும்
நொய்தால் அம்ம தானே! இஃதெவன்
குறித்தனை நெடியோன் கொல்லோ?
மொய்தவ
வாங்குசிலை இராமன் தம்பி, ஆங்கவன்
அடிபொறை ஆற்றின் அல்லது
முடிபொறை ஆற்றலன் படிபொறை
குறித்தே

எனவரும் பழையதொரு சிறந்த மேற்கோட் பாடலையும், ஆசிரியர் நச்சினார்க்கினியர் எடுத்திக் காட்டியருள்கின்றார்.

*(12)* இராமாயணத்தில் வரும் பற்பல சிறந்த இனிய சுவைமிகு பகுதிகளில், 'விபீட்ண சரணாகதி' என்பது, மிகவும் முதன்மை வாய்ந் தது. இராவணனை விட்டுப் பிரிந்து போந்த விபீடணனை, இராமபிரான் தனது படைத் துணையாக அமைந்த சுக்கிரீவன் அநுமன் முத லிய வானரசேனை வீரர்கள் பலரொடும் கலந்து உசாவியபின்னர் ,ஏற்றருள முடிவு செய்கின் றான்.

"குகனொடும் ஐவர் ஆனேம்
முன்பு, பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகமமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகலரும் கானம் தந்து
புதல்வராற் பொலிந்தான் நுந்தை!"

"ஏழினோடு ஏழாய் நின்ற
உலகும், என் பெயரும், எந்நாள்
வாழும்நாள் அன்று காறும்
வாளெயிற்று அரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே தந்தேன்"

என்று, அன்பு ததும்பும் இன்சொற் கூறி, இராமபிரான் வீபீடணனைத் தழுவி ஏற்றுக் கொள்ளுகின்றான்.

தொல்காப்பியப் புறத்திணைத் துறை களுள் ஒன்றாக வரும் **''கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்''** எனவரும் பகுதிக்கு, ''தன்னை இகழ்ந்தாரையும் தான் இகழ்ந்தோ ரையும் கொள்ளார் (பகைவர்) என்ப. பகை வர் நாட்டினைத் தான் கொள்வதற்கு முன்னே யும் கொண்டான் போல வேண்டுவோர்க்குக் கொடுத்தல், 'கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்' எனப்படும். 'ஒன்னார் ஆரெயில் அவர்கட் டாகவும் நுமதெனப் பாண்கடன் இறுக்கும் பெரியோய் '(புறம் 203) என்பது காண்க. 'ஆனா ஈகை அடுபோர் '(புறம் 42) என்பதும் அது. ''இராமன் இலங்கை கொள்வ தன் முன்பே விபீடணற்குக் கொடுத்த துறை யும் இது'' என ஆசிரியர் நச்சினார்க்கினியர் அழகுற எழுதியிருக்கும் விளக்கம், இங்குநாம் பொன்னினும் மணியினும் போற்றத் தக்க தாகும்.

*(13)* தொல்காப்பியப் பொருளதிகாரத் தில் வரும்புறத்திணைத் துறைகளுள் ''தோலின் பெருக்கம்'' என்பதுஒன்று. அஃதாவது ''மதில் மேற் சென்றுழி மதிலகத்தோர் அம்புமாரி விலக்குதற்குக் கிடுகும் கேடயமும் மிடையக் கொண்டு சேறல் ''எனப் பொருள் வரைந்து,

இருசுடர் இயங்காப் பெருமூது இலங்கை
நெடுந்தோள் இராமன் கடந்த ஞான்றை
எண்குஇடை மிடைந்த பைங்கட் சேனையில்,
பச்சை போர்த்த பல்புறத் தண்ணடை
எச்சார் மருங்கிலும் எயிற்புறத்து இறுத்தலில்
கடல்சூழ் அரணும் போன்றது
உடல்சின வேந்தன் முற்றிய ஊரே

என்னும் அழகிய இனிய ஒரு மேற்கோட் செய் யுளினையும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் எடுத் துக் காட்டியிருக்கின்றார். இதன்கண் இலங்கை மாநகரினை இராமபிரான் முற்றுகை யிட்ட செய்தி உவமையாக வந்திருத்தல் உணர்தற்கு உரியது.

# ஆழ்வார்கள் வரலாறு

**முன்னுரை:**

திருமால் அடியார்களாக விளங்கித், தமிழகத்தில் திருமால் நெறியைப் பரப்பிய பெரியோர்கள் பன்னிருவர் ஆவர். இறையருள் இன்பநலத்திலும், அவரது எல்லையற்ற இனிய மங்கள குணங்களிலும், ஆழ்ந்து, திளைத்து நின்ற அப்பெருமக்களை ஆழ்வார்கள் எனத் தமிழ்கூறும் நல்லுகம் பெரிதும் சிறப்பித்துப் போற்றி வழிபட்டு வருகின்றது.

''பொய்கையார், பூதத்தார்,
பேயார், புகழ்மழிசை
ஐயன், அருள்மாறன்,
சேரலர்கோன் - துய்யபட்ட
நாதன், அன்பர்தாள்தூளி,
நற்பாணன், நற்கலியன்,
ஈதுஇவர் தோற்றத்து
அடைவுஆம் இங்கு''

என்னும் வெண்பாவில், ஆழ்வார்களின் பெயர்களும், அவர்கள் தோன்றியருளிய முறையும் தொகுத்துக் கூறப்பட்டிருத்தல் காணலாம். இதன்படி பெரியாழ்வாருடன் ஆண்டாளையும், நம்மாழ்வாருடன் மதுரகவிகளையும் ஒருங்கு சேர்த்து இணைத்து, ஆழ்வார்கள் பதின்மர் என்றும் சிலர் கூறுவதுண்டு. இங்கு ஆழ்வார்கள் பன்னிருவரும் பற்றிய வரலாற்றினை, இயன்ற அளவு இங்குச் சுருக்கமாகக் காண்போம்.

## 1. பெரியாழ்வார்.

பாண்டிநாட்டில், திருவில்லிபுத்தூர் என்னும் திவ்விய தேசத்தில், வேயர் குலத்தில், பதுமையாருக்கும், முகுந்தாச்சாரியாருக்கும், ஆனிமாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில், கருடஅம்சமாகத் தோன்றியருளினார். இவர் தமது சித்தத்தில் எப்போழுதும் இடையறாது எண்ணி விஷ்ணுவை அன்புடன் வழிபட்டு வந்தவராதலின், இவருக்கு விஷ்ணுசித்தர் என்னும் பெயர் அமைந்தது. பாண்டியனின் அரசவையில் பரதத்துவப் நிச்சயம் பொருள் செய்து, ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருள் என்று நிறுவிப் பொற்கிழி அறுத்து, சகலவேத சாத்திர ஞானச் செல்வராகத் திகழ்ந்தமையினால் 'பட்டர்பிரான்' என்ற பெயரும் இவருக்கு வழங்கும். இவர் திருவில்லிபுத்தூர் வடபெருங்கோயிலுடையானுக்கு மிக்க அன்பு பூண்டு, திருமாலைகள் புனைந்து சாத்தி வழிபட்டு வந்தவர். திருப்பல்லாண்டு, பெரியாழ்வார்திருமொழி என்னும் இரண்டும், இவர் அருளிச் செய்த பிரபந்தங்களாகும். பெருமாளுக்குப் பல்லாண்டுபாடி மங்களாசாசனம் செய்த பரிவின் மிகுதியினால், ஏனை ஆழ்வார்களினும் பெருமை பெற்றவராதலின், இவருக்குப் பெரியாழ்வார் என்னும் திருப்பெயர் ஏற்பட்டது.

## 2. ஆண்டாள்.

திருவில்லிபுத்தூரில், திருவாடிப்பூரத்தில், பூமிப்பிராட்டியார் அம்சமாகத் தோன்றியருளியவர். தம்முடைய திருநந்தவனத்தில் திருத்துழாய்ச் செடியின்கீழ்க் குழந்தையாகக் கிடந்த இவரை, விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வார் எடுத்துக் கோதை என்னும் பெயரிட்டு வளர்த்து வந்தார். பெரியாழ்வார், வடபெருங் கோயில் உடையானுக்காகத் தொடுக்கும் மலர்மாலைகளைத் தான் முதலில் சூடிமகிழ்ந்து பிறகு எம்பெருமானுக்குக் கொடுத்தவள் ஆதலின், இவருக்குச் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் ஒரு பெயர் உண்டு. தம் அன்பின் மிகுதியாலும், காதல் உணர்வின் சிறப்பாலும், ஆண்டவனையே தன்பால் ஏற்று ஆண்டுகொண்டவள் ஆதலின், ஆண்டாள் என்றே இவர் மிகவும் சிறப்பாகப் போற்றப்படுவார். ''மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்று அணியரங்கத்து அம்மானுக்கே அற்றுத் தீர்ந்த காதலை உடையவளாய் இருந்து, அப்பெருமானுக்கே மணவாட்டியாகும்பேறுபெற்று அவனோடு ஒன்றிக் கலந்தவள். இவர் அருளிச் செய்த பிரபந்தங்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டாகும்.

### 3. குலசேகராழ்வார்:

இவர் சேரநாட்டில், திருவஞ்சைக்களம் என்னும் நகரத்தில், திடவிரதன் என்னும் அரசனுக்குக் கௌஸ்துப அம்சமாக மாசி மாதத்தில் புனர்வசு நட்சத்திரத்தில் திருவவதாரம் செய்தார். தமது குலமரபுக்கு ஏற்ப அரசராய் முடிசூட்டப்பெற்றுக் குடிமக்களை நன்கு பாதுகாத்து வந்தார். ''பெருமாள்'' என்பது சேர அரசர்களுக்குரிய பட்டப்பெயர். ஆதலின் இவரைக் குலசேகரப் பெருமாள் என்றும் குறிப்பிடுவர். இராமபிரானிடத்தும், இராமயணத்திலும் இவர் மிகவும் எல்லையில்லாத ஈடுபாடு கொண்டிருந்தார். ''ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்'' என்னும் நிலையிற் பக்தியுணர்வில் திளைத்தவர். ''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே! நெடியானே! வேங்கடவா! நின்கோயில் வாசலில் அடியாரும் அரம்பையரும் கிடந்தியங்கும் படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே'' என்று அருளிச் செய்தவர் இவர்.

### 4. திருமழிசையாழ்வார்:

சென்னைக்கு அருகே பூந்தண்மலிக்கு அருகில் உள்ள திருமழிசை (மகிசார க்ஷேத்திரம்) என்னும் திவ்விய தேசத்தில், தை மாதத்தில் மக நட்சத்திரத்தில், பார்க்கவ முனிவர்க்குப் புதல்வராய்த் திருமாழியின் கூறாகத் திருவவதாரம் செய்தருளினார். இவர் அவதரித்த போது உறுப்பொன்றும் காணப்பெறாமல் பிண்டமாய் இருந்ததனால், இவரை இவர் தந்தையாரும் தாயாரும், ஒரு பிரம்புப் புதரில் எறிந்து விட்டுப் போயினர். திருவாளன் என்னும் ஒரு வேளாளன், அக்குழந்தையைக் கண்டெடுத்து, தன் மனைவி பங்கயச் செல்வியின்பாற் கொடுத்து, அன்புடன் வளர்த்து வந்தான். ஆனால் அக்குழந்தை பால் பருகாமலும், பசி தாகம் கொள்ளாமலும், ''உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான்'' என்றபடி, பரம புருஷனையே அனுபவித்து வளர்ந்து வந்தது.

திருமழிசையில் தோன்றியதனால் இவருக்குத் திருமழிசையாழ்வார் எனப் பெயர் வழங்குகின்றது. உற்ற வயதடைந்ததும், ''சாக்கியம் கற்றோம் சமண்கற்றோம் சங்கரனார் ஆக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்'' என்றபடி, இவர் உலகாயதம் பௌத்தம் சமணம் மாயாவாதம் முதலிய பல சமயங்களையும் ஆராய்ந்தார். பின்னர்ச் சைவ சமயம்சார்ந்து, 'சிவவாக்கியர்' என்னும்பெயர் பூண்டு, சிலகாலம் சிவபிரானை வழிபட்டு வந்தார். இவர் பின்னர் பேயாழ்வார் பேரருளால் பரம வைஷ்ணவராய்த் திருந்தினார். அதுமுதல் திருமகள் கொழுநனான நாராயணரையே தியானம் செய்து வந்தார். இவர்தம் பக்தியின் சிறப்பினால், இவருக்குப் 'பக்திசாரர்' என்றும் ஒரு பெயர் வழங்கும். திருச்சந்தவிருத்தம், நான்முகன் திருவந்தாதி என்னும் இரு திவ்வியப்பிரபந்தங்கள், இவரால் அருளிச் செய்யப்பெற்றன. இவர் திருவெஃகாவிலுள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் இடத்திலும், திருக்குடந்தையில் உள்ள ஆராவமுதப் பெருமாளிடத்திலும், மிகவும் ஈடுபாடு கொண்டவராவர். கணிகண்ணர் என்பவர், இவருக்கு மாணவராக இருந்தார்.

### 5. தொண்டரடிப் பொடியாழ்வார்:

இவர் திருக்குடந்தைக்கு அருகிலுள்ள திருமண்டங்குடி என்னும் தலத்தில் மார்கழிக்கேட்டையில், திருமாலின் வனமாலையின் அம்சமாய் வேதம் வல்ல ஒரு பிராமணரின் குடியில் தோன்றியவர்; இவரது இயற்பெயர் விப்பிரநாராயணர் என்பது. இவர் வைஷ்ணவருக்கு அடிமைபூண்டு ஒழுகி, அவர்களின் திருவடிகளுக்குத் தொண்டு செய்து மகிழ்வதையே, ஒரு பெரும் பேறாகக் கருதியிருந்தார். ஆகையால் இவருக்குத் தொண்டரடிப் பொடியாழ்வார் (அன்பர் தாள் தூளி) என்னும் பெயர் ஏற்பட்டது. இவர் திருவரங்கப் பெருமானையே தம் வழிபடு கடவுளாகக் கொண்டவர். திருவரங்கத்தில் அழகிய மணவாளனுக்குத் திருநந்தவனப் பணி புரிந்து வந்தார். திருமாலை, திருப்பள்ளி எழுச்சி என்னும் இரு பிரபந்தங்களை இவர் அருளிச் செய்துள்ளார்.

### 6. திருப்பாணாழ்வார்:

சோழநாட்டில், உறையூரில் கார்த்திகை மாதத்தில் உரோகிணி நட்சத்திரத்தில், திருமாலினது ஸ்ரீவத்சத்தின் அம்சமாய்த் தோன்றியருளியவர். இவர் சிறு குழந்தையாக இருந்த போது, பாணர் குலத்தில் பிறந்த ஒருவனால் எடுத்து வளர்க்கப் பெற்றமையால், பாணாழ்வார் (பாண்பெருமாள்) என்னும் பெயர் பெற்றார். இவர் யாழ்ப்பாடலில் தேர்ச்சி பெற்றுத் திருவரங்கம் பெரிய பெருமாள் திருவுள்ளம் உவக்குமாறு பாடல் தொண்டு புரிந்துவந்தார். அதனால் அவர்தம் இன்னருளுக்கு இலக்காகி அவர் பணித்தருளியபடி லோகசாரங்கமாமுனிகளின் தோள்களின் மேலே ஏறி, அப்பெரிய பெருமாளின் திருக்கோயிலுக்குள் சென்று, அவரைத் திருவடிமுதல் திருமுடிவரை தனித் தனியாகவும் ஒருசேரவும் தரிசித்து நன்கு அனுபவித்து, 'என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று நெஞ்சுருகப் பாடி, அவர் தம் திருவடிகளையே சார்ந்தவர். ''அமலன் ஆதிபிரான்'' என்பது, இவர் அருளிய திவ்வியப் பிரபந்தமாகும்.

### 7. மதுரகவியாழ்வார்:

பாண்டிநாட்டில், ஆழ்வார் திருநகரிக்கு அருகிலுள்ள திருக்கோளூர் என்னும் திவ்விய

தேசத்தில், சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில் கணநாதரான குமுதர் என்பவரின் அம்சமாகத் திருவவதாரம் செய்தவர். சூரியோதயத்திற்கு முன்னர் நிகழும் அருணோதயம் போன்று, நம்மாழ்வார் திருவவதாரம் செய்வதற்கு முன்பே இவர் தோன்றியருளினார். இளமையிலேயே வேதம் முதலிய நூல்களையெல்லாம் ஓதி உணர்ந்து மதுரம் மிகுந்த இனிய சிறந்த கவிகளைப் பாட வல்லவராக இருந்ததினால், இவருக்கு மதுரகவிகள் என்னும் பெயர் வாய்ப்பதாயிற்று. இவர் ''தேவு மற்றறியேன் குருகூர்நம்பி பாவின் இன்னிசை பாடித் திரிவனே'' என்று நம்மாழ்வாரையே குருவாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர். ''நண்ணித் தென்குருகூர் நம்பி என்றக்கால், அண்ணிக்கும் அமுதூறும் என்நாவுக்கே'' என்று நம்மாழ்வாரையே புகழ்ந்து, இவர் பாடியருளிய பிரபந்தம் ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்னும் பிரபந்தமாகும். இது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் இடம்பெற்று நடுநாயகம்போல் சிறப்புற்று விளங்குகின்றது.

## 8. திருமங்கையாழ்வார்:

சோழநாட்டில், திருவாலித் திருநகரி என்னும் திவ்விய தேசத்திற்கு மிக அருகிலுள்ள திருக்குறையலூரில் சோழ மன்னனின் படைத் தலைவனான ஒருவனுக்குக், கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில், திருமாலின் சார்ங்கம் என்னும் வில்லின் அம்சமாய் அவதரித்தார். 'நீலன்' என்னும் இயற்பெயர் பெற்றிருந்த இவர், தமது குலத்திற்கேற்ப இளமையிலேயே படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற்று, சோழ மன்னனை அடுத்துப் படைத்தலைவராய் அமர்ந்து, பகைவர்களைப் போரில் வென்று, பரகாலன் என்னும் சிறப்புப் பெற்றிருந்தார். இவர் குமுதவல்லி என்னும் அமரமகளை மணம்செய்துகொள்ள விரும்பி அவளது வேண்டுகோளுக்கு இணங்கித் திருநறையூர் நம்பியிடம் திருவிலச்சினை தரித்தவர். வயலாலி மணவாளரிடம் திருமந்திர உபதேசம் பெற்றவர். திருவரங்கம் கோயிலுக்குச் சிறந்தபல திருப்பணிகள் புரிந்தார். திருமங்கை என்னும் நாட்டுக்கு மன்னராக விளங்கியவராதலின் இவருக்குத் திருமங்கைமன்னன் என்றும், திருமங்கையாழ்வார் என்றும் பெயர்கள் வழங்கும். ஆலிநாடன் - அருள்மாரி - கலியன் - கலிகன்றி - நாலுகவிப் பெருமாள் முதலிய பெயர்களும் இவருக்கு உண்டு. இவர் பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல் என்னும் ஆறு பிரபந்தங்களை அருளிச் செய்துள்ளார். இவ் ஆறு பிரபந்தங்களும் நம்மாழ்வார் அருளிச் செய்த நான்கு வேதம் போன்ற நான்கு பிரபந்தங்களுக்கும், முறையே உரிய ஆறு அங்கங்களாக மதித்துப் போற்றப் படுகின்றன.

## 9. பொய்கையாழ்வார்:

ஆழ்வார்கள் பன்னிருவருள், பொய்கையார், பூதத்தார், பேயார் என்னும் இம்மூவரும் முதலாழ்வார்கள் எனப்படுவர். பொய்கையார் காஞ்சிபுரத்தில், திருவெஃகா என்னும் திவ்விய தேசத்தில், பொற்றாமரைப் பொய்கையில், ஓர் அழகிய தாமரை மலரில் ஐப்பசித் திருவோண நாளில், திருமாலின் பாஞ்சசன்னியம் எனப் பெயர்பெற்ற சங்கின் கூறாக அவதரித்தருளினார். பொய்கையில் அவதரித்ததனால் இவருக்குப் பொய்கையார் எனப்பெயர் அமைந்தது. இவர் அருளிச்செய்த பிரபந்தம், முதல் திருவந்தாதி எனப்படும்.

## 10. பூதத்தாழ்வார்:

தொண்டை நாட்டிலுள்ள திருக்கடல் மல்லை (மாமல்லபுரம்) என்னும் திவ்விய தேசத்தில் ஒரு குருக்கத்தி மலரில், திருமாலின் கௌமோதகி என்னும் கதாயுதத்தின் கூறாக, ஐப்பசி அவிட்ட நட்சத்திரத்தில் தோன்றியருளினார். இவர் இறைவனை நினைதலாலேயே தாம் உயிர் (பூதம்) உளராகும் தன்மையை உடையவராய் இருந்தார். ஆதலால் இவருக்குப் பூதத்தார் என்று பெயர் அமைந்தது. இவர் திருவரங்கர் புகழ் பாடுதலில் மிகுதியான அன்புடையவர். இவர் பாடியருளியது இரண்டாம் திருவந்தாதி எனப்படும்.

## 11. பேயாழ்வார்:

இவர் சென்னையிலுள்ள திருமயிலை என்னும் திவ்விய தேசத்தில், ஒரு கிணற்றில் மலர்ந்த செவ்வல்லிப் பூவில், திருமாலின் நந்தகம் என்னும் வாளின்கூறாக, ஐப்பசியில் சதய நட்சத்திரத்தில் அவதரித்தார். ''பேயரே எனக்கு யாவரும்; யானும் ஓர் பேயனே எவர்க்கும்; இது பேசி என்? ஆயனே அரங்கனே என்று அழைக்கின்றேன்; பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே'' என்று குலசேகரர் அருளிச் செய்தது போன்று, திருமாலின்பால் தாம் கொண்ட பேரன்பின் மிகுதியினால், காண்பவர்கள் 'இவர் பேய்பிடித்தவர் போலும்' என்று எண்ணும்படி இருந்ததனால், இவருக்குப் பேயாழ்வார் எனப் பெயர் அமைந்தது.

பொய்கையார் பூதத்தார் பேயார் என்னும் இம்மூவரும், இராமன் பரதன் இலக்குமணன் என்னும் மூவரைப் போன்று அடுத்தடுத்த நாட்களில் அவதரித்து, சுத்த சத்துவ குணமுடையவராய், ஒருநாள் தங்கிய இடத்தில் மற்றொருநாள் தங்காமல், ஓர் ஊரில் ஓர் இரவு மட்டும் தங்கி, தம்மில் ஒருவரை ஒருவர் அறியாமல், தனித் தனியே தலயாத்திரை செய்துகொண்டிருந்தனர். கருணைக் கடலாகிய திருமால் இவர்கள் மூவரையும் ஓரிடத்தில் சேர்த்து ஆட்கொண்டு, இம்மூவரால் உலகத்தை உய்விக்கத் திருவுள்ளம்பற்றி, மழை என்னும் ஒரு காரணத்தால், இம்மூவரையும் திருக்கோவ

லூரில் ஓர் இடைகழியில் ஒன்றுசேரும்படி செய் தருளினார். அங்ஙனம் ஓர் இடைகழியில் ஒன்று சேர்ந்த இம்மூவரும், திருமாலின் திருவருள் நலங்களை வியந்து தமக்குள் சொல்லியும்கேட்டும் மகிழ்ந்திருந்தனர். அப்போது திருமால் தாமும் அங்குச் சென்று அம்மூவருடன் சேர்ந்து அவர்களுக்குப் பொறுக்கொணாத மிக்க நெருக்கத்தை உண்டாக்கினார். அப்போது அவர்கள் நம்மையொழியவும் இங்குப் போந்து புகுந்து, நம்மோடு நிற்பார் எவரேனும் பிறருண்டோ? என ஐயம் கொண்டனர். அப்போது பொய்கை யாழ்வார் ''வையம் தகளியா, வார்கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காக'' ஏற்றினார். பூதத்தாழ்வார் ''அன்பே தகழியா, ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை இடுதிரியா, நன்புருகு ஞானச்சுடர் விளக்கு'' ஏற்றினார். அவ்விரு விளக்குகளையும் கொண்டு பேயாழ்வார் தம்மோடு உடன் கலந்து ஒன்றி நின்ற திருமாலைக் கண்கூடாகக் கண்டு மகிழ்ந்து வணங்கி அனுபவித்துக் களித்தார். ''திருக்கண்டேன்; பொன்மேனி கண்டேன்; திகழும் அருக்கன் அணிநிறமும் கண்டேன்; செருக்கிளரும் பொன்னாழி கண்டேன்; புரிசங்கம் கைக் கண்டேன், என் ஆழி வண்ணன்பால் இன்று'' என்று பாடி மகிழ்ந்தார். பேயாழ்வார் பாடிய; பிரபந்தம் மூன்றாம் திருவந்தாதி எனப்படும்.

**12. நம்மாழ்வார்**

இவர் பாண்டிநாட்டில்; தாமிரபரணியாற்றின் கரையில், குருகூர் அல்லது ஆழ்வார் திருநகரி என்னும் திவ்விய தேசத்தில், திருமாலுக்கே தொண்டு பூண்டொழுகும் சிறப்பு வாய்ந்த வேளாண்குலத்தில், காரியார்க்கும் உடைய நங்கையார்க்கும், வைகாசிவிசாகத்திருநாளில் திருக்குறுங்குடி நம்பியின் அருளால் விஷ்வக்சேனர் என்னும் சேனை முதலியாரின் அம்சமாகத் திருவவதரித்தார். உலகியல் வாழ்க்கையின் மயக்கமாகிய சடப்பொருள் உணர்ச்சி தம்மைப் பற்றாதவாறு கோபித்து ஓட்டி ஒழித்தவர் ஆதலால், இவருக்குச் சடகோபன் என்னும் திருப்பெயர் ஏற்பட்டது. இவர் திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள நம்பெருமாளால் உறவு கொண்டாடிப் பெரிதும் விரும்பிப் போற்றப் பெற்றவர். ஆதலால் இவருக்கு நம்மாழ்வார் என்றும் பெயர் வழங்கும். இவர்தம் இயல்பு உலகநடைக்கு மாறாக இருந்ததனால், மாறன என்னும் காரணச் சிறப்புப் பெயரால் பெரியோர்கள் இவரைக் குறிப்பிடுவர். காரிமாறன், பராங்குசன், குருகைப்பிரான், வகுளாபரணன் முதலிய பெயர்களும் இவருக்கு உண்டு.

இலக்குமணன் அவதரித்தபோதே இராமபிரானிடம் பேரன்பு பெற்றிருந்தது போன்று, இவரும் அவதரிக்கும் போதே திருமாலிடம் பேரன்பு கொண்டு திகழ்ந்தவர். ஆதலால் இவரது பக்தியைச் 'சகச பக்தி' என்று பெரியோர்கள் புகழ்ந்து பேசுவர். இவர் இடையறாது எம்பெருமானை எப்போதும் அனுபவித்து வாழ்ந்தவர். கண்ணபிரானிடம் அளவற்ற அன்புபூண்டவர். ஏனைய ஆழ்வார்கள் எல்லாம் தமக்கு உறுப்பாக அமைய, இவர் உறுப்பியாகி, அவர்களுக்கெல்லாம் மிக்க பெருமையும் முதன்மையும் கொண்டு திகழ்ந்தவர். திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு பிரபந்தங்கள் இவரால் அருளிச் செய்யப்பெற்றன.

—ஆசிரியர்.

## சைதன்னியர் (கி.பி. 1486—1534)

வங்காளத்திலுள்ள நவத்வீபம் (நடியா) நகரத்தில், மாயாப்பூர்பகுதியில் ஏழை வைதிக குடும்பத்தில் உதித்தவர். தந்தை ஜகந்நாத மிச்ரர், தாய் சசிதேவி. இவரே கடைசி பத்தாவது புதல்வர். 15ஆம் வயதில் வல்ல பாசாரியர் என்பவரின் மகளான இலட்சுமி தேவியை மணந்தார். 17ஆம் வயதில் கேசவ மிச்ரர் என்னும் புலவரை வென்றார். பாம்புக் கடியால் முதல் மனைவி இறந்தார். பின்னர் விஷ்ணுப் பிரியை என்பவளை இரண்டாம் மனைவியாக மணந்தார். கயை என்னும் புனிதத் தலத்திற்குச் சென்று, ஈசுவரபுரி என்னும் வைணவ சந்நியாசியிடம் தீக்கை பெற்றார். தர்க்கவாதம் புரிதலைக் கைவிட்டார். சமயப் பிரசாரகர் ஆனார். கீர்த்தனை மண்டபம் ஒன்று கட்டி, பக்திமார்க்கம்பற்றிப் போதிக்கத் தொடங்கினார். கீர்த்தனங்களை இசையுடன் பாடும்போது, தம்மை மறந்த நிலையில் நடனமும் ஆடுவார். 24ஆம் வயதில் குட்வா என்னும் நகரில் துறவு நிலையை மேற்கொண்டார். பூரியில் வசித்தார். தென்னகத் திற்குத் தலயாத்திரை வந்து திரும்பும்போது, பண்டரிபுரம் சென்றார். துக்காராம் இவருடைய பக்திமார்க்கத்தில் ஈடுபட்டார். தமது 48ஆம் வயதில் கோயிலில் பாடிக்கொண்டே மறைந்துவிட்டார் என்பது வரலாறு.

கடவுளை ஞானத்தால் அறிய முடியாது. பக்தியினால்தான் அறிய முடியும். கடவுளின் அருள்மூலம் சான்றோர் அறிந்து கூறிய அருளுரைகளே வேதங்கள் ஆகும். வேதப்பொருளை விளக்குவனவே புராணங்கள். ஆதலின் வேதங்கள் புராணங்கள் ஆகிய இரண்டுமே ஆன்மிக வாழ்விற்குத் தேவையான பிரமாண நூல்களாகும். பக்தியே முக்தியடைவதற்குரிய நேரிய வழி. கிருஷ்ண பிரேமையே ஆன்ம லட்சியம். உண்மையான நல்ல வைஷ்ணவனின் தொடர்பினால், சத்சங்கம், பக்தி சிரத்தை முதலியன அடைந்து; பகவானுக்குச் சேவை செய்யும் இன்பமும், தோழமையும் அடையலாம். இந்நிலையே வீடுபேறு என்பது இவருடைய கொள்கை. சைதன்யரின் மதம், அசிந்திய பேதாபேதம் எனப்படும்.

—ஆசிரியர்.

# திருவடி வணக்கம்

'முத்தமிழ்க் காவலர்'
டாக்டர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்
திருச்சிராப்பள்ளி.

திருவடி வணக்கம் சைவசித்தாந்த மரபு. அது தமிழ் மரபும், தமிழர் மரபும், தமிழகத்தின் மரபுமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருள்வள்ளல் இராமலிங்க அடிகள். திருவடி முறையீடு, திருவடிக்கண்ணி, திருவடி சூடவிழைதல் முதலிய பதிகம், கண்ணி முதலியவை பாடியிருந்தாலும், திருவடிப்புகழ்ச்சி என்ற நீண்ட கட்டுரையால், '' பரசிவம் சின்மயம் பூரணம்'' என ஒரு திருமுறையைத் தொடங்கிப் பாடியிருக்கிறார்.

திருவடி வணக்க முறையை முதன்முதல் வள்ளலார்தான் தோற்றுவித்தாரா? என்று ஆராய்ந்தால், அவர் ''வாழையடி வாழையாக வந்த திருக்கூட்ட மரபில் யானொருவன் அல்லனோ'' என்று கூறியுள்ளார். எனவே திருவடி வணக்கமுறை தொன்றுதொட்டு வரும் மரபு பற்றியதாகும் எனத் தெரிகிறது. சித்தர்களில் வள்ளலார்தான் கடைசிச் சித்தர் ஆவார். வள்ளலார் 17ஆம் நூற்றுண்டில் தோன்றிய தாயுமான அடிகள் மரபைத் தம்மரபாகத் தோற்றியவர். தாயுமான அடிகள் மரபு, மௌனகுரு மரபாகும். தாயுமானவர், தாம் பாடிய மௌனகுரு வணக்கத்தில்,

'மந்திர குருவே! யோக தந்திரகுருவே
மூலர் மரபில் வரும் மௌனகுருவே!''

என்று பாடியுள்ளார். இதிலிருந்து இராமலிங்க அடிகள் தாயுமான அடிகள், பட்டினத்து அடிகள், சமயாசாரியர்கள், சந்தானாசாரியர்கள், திருவள்ளுவர், பதினெண்சித்தர்கள் ஆகிய சமயச்சான்றோர்களுக்கும், சித்தர் பெருமக்களுக்கும் மூலவர் திருமூலர் என்றே தெரிகிறது. சித்தர்களுக்கெல்லாம் மூலராக இருத்தலின், அவர் மூலர் எனப்பெற்றார். திருவடி வணக்கம் திருமூலர் காட்டிய மரபாகும். அவர் அருளிய 138வது திருமந்திரம்.

''திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகம் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே''

என்று கூறுகிறது.

திருமூலர் காலம் தெளிவாகத் தெரியவில்லை. தமிழகத்துத் தோன்றிய பழம் பெரும் சித்தர்களுக்கெல்லாம் முந்திய காலம் என்று சான்றோர்களும் கருதுகின்றனர். பெரியபுராணம் பாடிய சேக்கிழார் அடிகள். திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தில் இருந்தவர் என்று கூறியுள்ளார். எது எப்படியாயினும் எல்லோருக்கும் எல்லாவற்றிற்கும் மூலர், திருமூலர்தான்.

திருமூலர் இயற்றிய திருமந்திரமே நமக்கு மூலஞானநூல். காரணம் திருமூலருக்கு முற்பட்டவர் வரலாறு நம்மிடம் இல்லை. திருமந்திரத்திற்கு முந்திய இலக்கியம் எதுவும் நம்மிடம் இல்லை என்பதே. எனவே, 'திருவடிவணக்கம்' திருமூலர் காலந்தொட்டே ''வாழையடி வாழையெனத்'' தமிழகத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று துணிந்து கூறலாம்.

கிறித்து பிறப்பதற்கு 31 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியவர் திருவள்ளுவர். அவர் தான் இயற்றிய திருக்குறளில், முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்தில், ஏழுகுறள்களில் திருவடி வணக்கம் பற்றிக் குறிப்பிடுகிறார். அவை 'வாலறிவன் நற்றாள்' 'என்குணத்தான்தாள்' 'அறவாழி அந்தணன்தாள்' 'தனக்குவமை இல்லாதான் தாள்' எனவும், 'மலர்மிசை யேகினான் மாணடி' 'வேண்டுதல் வேண்டாமை இலானடி' 'இறைவனடி' எனவும் வருவன.

தாள் நான்கும் அடி மூன்றுமாக ஏழு குறள்களில், திருவடிவணக்கம் சிறப்பிக்கப்படுகிறது. அவருக்குப்பின் வந்த மாணிக்கவாசகப்பெருமான், தான் அருளிய திருவாசகத்தில், தொடக்கத்திலேயே, சிவபுராணத்துள்,

''நமச்சிவாய வாஅழ்க! நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்
தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!''

எனத் திருவள்ளுவர் மரபைப் பின்பற்றி நான்கு தாள்களைக் குறிப்பிட்டுப், பின் திருவள்ளுவர்

கூறியுள்ள மூன்று திருவடிகளையும் மறவாமல், உள்ளத்தே வைத்து, மேலும் பல அடிகளில்,

''ஈசனடி போற்றி! எந்தையடி போற்றி,
தேசனடி போற்றி, சிவன்சேவடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி!''

எனக் கூறித் திருவடி வணக்க மரபைத் தொடர்ந்து விளக்கியுள்ளார்.

திருநாவுக்கரசு சுவாமிகளும்கூட, திருவடி வணக்கம் பற்றிப் பாடியுள்ளார். நாவுக்கரசரைச் சமணர்கள் நீற்றறையில் இட்டனர். சில பொழுது கழிந்து நீற்றறையைத் திறந்து பார்க்கையில் அவர் உயிரோடு வந்தார். 'சுண்ணாம்புக் கலவையில் உள்ள நெருப்பு உங்களை ஏன் தகிக்கவில்லை, எரிக்கவில்லை'' என்று கேட்டனர். நாவுக்கரசர், ''என் உடம்பை எம் பெருமான் திருவடியில் வைத்துவிட்டேன் ஆதலின், நெருப்பு என் உடலைத் தகிக்கவில்லை'' என்றார். அவர் பாடல்,

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே''

நாவுக்கரசர் தன்னை இறைவனது திருவடியில் அல்ல, திருவடி நிழலில் வைத்திருந்தேன் என்றே பாடியுள்ளார். திருவடி நிழலுக்கு இவ்வளவு ஆற்றல் இருந்தால், திருவடிக்கு எவ்வளவு பெரிய ஆற்றல் இருக்கும் என்பதை நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

ஒரு நயம். நெருப்பு தகிக்காமலிருந்ததற்குக் காரணம் இறைவனடி நிழலில் தான் இருந்ததனாலேயே என்றும், அக்குளிர்ச்சியை நெருப்பாலும் தடுக்க முடியவில்லை என்பதும் பெறப்படுகிறது. அக்குளிர்ச்சியும் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தனையும் குளிரவைத்தன என்றும் அறிய முடிகிறது.

மாசில் வீணை, காதிற்குக் குளிர்ச்சி; மாலை மதியம், கண்ணிற்குக் குளிர்ச்சி; வீசு தென்றல், மூக்கிற்குக் குளிர்ச்சி; வீங்கு இளவேனில், உடம்பிற்குக் குளிர்ச்சி; மூசு வண்டறை நல்ல பொய்கையின் நீர், நாவிற்குக் குளிர்ச்சி என்று கூறியுள்ள சிறப்பு, நம் உள்ளத்தையும் குளிரவைக்கிறது. அவரைப் பின்பற்றிய வள்ளலாரும் இதே கருத்தைக் கொண்டு திருவடி வணக்கத்தைப் போற்றிப் பாடியுள்ளார்.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்
வகைக்கிடைத்த குளிர்தருவே!
தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே!
உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே!

இப்பாடலில், வள்ளலார் அப்பரடிகள் கூறியாங்கு, ஐம்பொறிகளுக்கும் ஐந்து குளிர்ந்த பொருள்களைக் குறிப்பிட்டு, இறைவனது திருவடியைப் பரவியிருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

கொடிய கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர், காதிற்குக் குளிர்ச்சி, நிழல் கனிந்த கனியின் அழகு, கண்ணிற்குக் குளிர்ச்சி, ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீர், நாவிற்குக் குளிர்ச்சி; உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலர், மூக்கிற்குக் குளிர்ச்சி; மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்று, உடம்பிற்குக் குளிர்ச்சி; என்னே! வள்ளலார் திருவடி வணக்கத்தைப் பின்பற்றிப் பாடியிருக்கும் முறை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம்அருளிய திருப்பாண்டிக் கொடுமுடித் திருப்பதிகத்தில் ''மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்'' எனத் தன் உள்ளத்தையே இறைவனது திருவடியில் வைத்து மகிழ்ந்து பாடியுள்ளார். சுந்தரர் பெருமான் திருவடி வணக்க மரபை மனதிற் கொண்டுதான் அருளிய திருத்தொண்டத்தொகையில்,

''தில்லைவாழ்அந்தணர் தம்அடியார்க்கும் அடியேன்
திருநீலகண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன குடிமாறன் அடியார்க்கும்
அடியேன்''

என்று தொடங்கி, 'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லோர்க்கும் அடியேன்' என்று மொழிந்து திருவடிவணக்கமாய்ப் பின்பற்றிப் பாடியுள்ளார்.

இதுகாறும் கூறியது கொண்டு திருவடி வணக்கத்தை முதலில் அறிமுகப்படுத்தியவர் திருமூலர் என்பதையும், அறிமுகப்படுத்திய நூல் திருமந்திரம் என்பதையும் அறியலாம். இது ஐயப்பாட்டிற்கு உரியது அன்று. முடிந்த முடிபாகும். திருமூலரின் திருமந்திரத்துள் மூவாயிரம் என்ற எண்ணுள்ள இறுதிப்பாடல் முரசு கொட்டி இவ்வுண்மையைப் மெய்ப்பிக்கிறது.

''வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத்தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான்பாதமே''

இப்பாடலில் வரும் நான்கு அடிகளிலும் திருவடிகளை நான்கு வகையாக, திருவடி, பதம், தாள், பாதம் என்ற நான்கு சொற்களால் அமைத்துப் பாடியிருப்பது நம்மை மகிழச் செய்கிறது.

ஏன்? திருமூலர் திருவடி வணக்கத்தைக் குறிப்பிட்டுக் கூறுகிறார் என்றால் நெஞ்சு, முகம், தலை, கை முதலியவைகளைக் குறிப்பிட்டு வணங்கினால், அது பல தெய்வ வணக்கமாகப் போய்விடும். திருவடி வணக்கம் ஒன்றுதான் வேற்றுமையற்ற ஒரு தெய்வ வணக்கத்திற்குத் துணைபுரிகிறது. அதுவும் ஆண் திருவடியா? பெண் திருவடியா? என்றுகூட அறிய

முடியாது. திருவடி வணக்கம் ஒன்றுதான் உருவ வணக்கமாகவும், அருவ வணக்கமாகவும், அருவுருவ வணக்கமாகவும் இருந்து வருகிறது எனலாம். இந்த இறுதிப்பாடலில், ''மலமிலான் பாதமே'' எனத் தேற்றேகாரம் கொடுத்துக் கூறியிருப்பது, முடிவு செய்து அறுதியிட்டுக் கூறியதேயாகும்.

இப்பாடலில் மட்டுமல்ல தேற்றேகாரம். திருமூலர் தாம் பாடியுள்ள மூவாயிரம் பாடல்களிலும் ஈற்றடி இறுதிச்சொல் அனைத்தும் தேற்றேகாரத்திலேயே முடிகின்றன. இது நினைந்து மகிழவேண்டிய ஒன்று. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று தமிழ் மந்திரத்தைக் கூறியிருப்பதே திருமந்திரம்தான். இதன் சிறப்புக் கருதியே, இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் எல்லாவற்றிற்கும் மேலாகத் திருமந்திரம் ஓர் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப் பெறுகிறது.

மனிதன் கேட்க, கடவுள் சொன்னது பகவத்கீதை
கடவுள் கேட்க, மனிதன் சொன்னது திருவாசகம்
மனிதன் கேட்க, மனிதன் சொன்னது திருக்குறள்
மனிதரிலும் அருளாளர் கேட்க, அருளாளர் கூறியது அருட்பா
அருளாளரிலும் ஞானிகள் கேட்க, ஞானி கூறியது திருமந்திரம்

வாழ்க திருமந்திரம்!

வளரட்டும் திருவடி வணக்கம்!!

---

## சிவபெருமானைப் பூசித்த சிற்றுயிர்கள்

| | | |
|---|---|---|
| அணில் | — | குரங்கணில்முட்டம் (காஞ்சிபுரம் அருகில்) |
| ஆமை | — | திருமணஞ்சேரி |
| யானை | — | திருஆனைக்கா, காளத்தி, கோட்டாறு, பெண்ணாகடம், திருக்கானப்பேர் |
| ஈ | — | ஈங்கோய்மலை |
| எறும்பு | — | திருவெறும்பூர் |
| கரிக்குருவி | — | மதுரை, வலிவலம் |
| கழுகு | — | திருக்கழுக்குன்றம், புள்ளிருக்குவேளூர் |
| கருடன் | — | சிறுகுடி |
| கழுதை | — | கரவீரம் |
| காகம் | — | குரங்கணில் முட்டம் |
| குதிரை | — | அயவந்தி |
| குரங்கு | — | குரங்குக்கா,(தென்,வட) குரங்காடுதுறை, குரங்கணில்முட்டம் |
| சிங்கம் | — | திருநல்லூர் |
| சிலந்தி | — | காளத்தி, திருவானைக்கா |
| தவளை | — | ஊற்றத்தூர் |
| நண்டு | — | திருந்துதேவன்குடி (திருவிசலூர் அருகில்) |
| நாரை | — | திருநாரையூர் |
| பசு | — | திருவாமாத்தூர், ஆவூர், பெண்ணாகடம், |
| பன்றி | — | சிவபுரம் |
| பாம்பு | — | காளத்தி, திருநாகேசுவரம், நாகப்பட்டினம், குடந்தைக்கீழ்க்கோட்டம், திரும்பாம்புரம் |
| புலி | — | எருக்கத்தம்புலியூர், ஓமாம்புலியூர், திருப்பாதிரிப்புலியூர், பெரும்பற்றப்புலியூர், பெரும்புலியூர் |
| மயில் | — | மயிலாப்பூர், மயிலாடுதுறை (மாயூரம்) |
| மீன் | | திருச்செந்தூர் |
| முயல் | — | திருப்பாதிரிப்புலியூர் |
| வண்டு | — | ஸ்ரீசைலம், திருவெண்துறை, வாளொளிபுத்தூர் |

—ஆசிரியர்

# திருமூலர் திருமந்திரம்

'கவியோகி' 'மகரிஷி'
தவத்திரு சுத்தானந்த பாரதியார் அவர்கள், சிவகங்கை

(முற்றொடர்ச்சி)

## சிவயோகசாதனம் :

திருமந்திர விளக்கம் மூன்றாவது பகுதி, சிவயோக சாதனம். இப்பகுதியை மிகவும் போற்றிய புலவர் மணிகள், திரு. வி. கலியாண சுந்தர முதலியாரும், வடிவேலு முதலியாரும் ஆவார். இப்பகுதியிற் சில, நவசக்தியில் வெளி வந்தன. சிவம் என்பது பேரின்பப் பொருள். எப்போதும் இனிய பொருள். அதைச் சொல்லச் சொல்ல நாவினிக்கும், நினைக்க நினைக்க நெஞ்சினிக்கும்; உணர உணர உள்ளம் களிதுள்ளும். இந்தப் பொருளையே ''இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்றார் மாணிக்கவாசகர். இந்தச் சிவசக்தியை உள்ளுணர்ந்தால் உலகெல்லாம் அதன் மயமாகவே உணரலாம்.

எங்கும் சிவமயம் எங்கும் சிவனருள்
எங்கும் சிவபரம் ஆனந்தம்
பொங்கும் கடலது பொன்செய் கதிரது
புவியின் உயிரது பொதுவாகத்
தங்கும் நிலையது தகரக் குகையது
ஐந்தும் புரிவது அருளாலே
இங்கின் இசையது இதயத் துடியது
இறைமைப் பொருளது பரமாத்மா

நாம் களைத்திருக்கும்போது உஸ் இஸ் என்றும், ஸ்சிவ என்றும் உயிர்க்கிறோம். ஆறுதல் அளிக்கும் அந்தச் சிவமந்திரத்தை ஒவ்வொரு மூச்சுடனும் உள்ளாரச் சொல்ல வேண்டும். ஒரு புகைவண்டி ஓம் சிவசிவ என ஊதிப் புகை எறிந்து உந்தி நடக்கிறது. கடல் அலைகள், மதிநிலவை உண்டு சிவோகம்என்று உந்தி எழுந்து இன்ப நடம் புரிகின்றன. வேதம் சிவ வணக்கம் செய்கிறது.

ஓம் நம: ஸம்பவாயச
பயோப வாயச
நம: சங்கராயச
பயங்கராயச
நம: சிவாயச
சிவதராயச

''ஓம் நமோஸ்து பகவன் விஸ்வேஸ்வராய, மஹாதேவாய த்ரயகம்பகாய, நீலகண்டாய, ம்ருத்யுஞ்ஜயாய, ஸர்வேஸ்வராய ஸதாசிவாய ஸ்ரீமந் மஹாதேவாய நம: ''போற்றியே நம; சிவாய! புகலிடம் பிறிதொன்றில்லை'' என்று மாணிக்க வாசகர் முறையிடுகிறார். புருஷ ஸூக்தம் சிவனை உள்ளத்தில் உள்ளபொருளாக விளக்குகிறது.

''கார் மேகத்திடையே கம்பிமின்போலே (நீலதோயத மத்யஸ்தா வித்யுர் லேகேன பாஸ்வரா): நெல்முளை முனைபோல் நுண்ணிய அணுவொளி பொன்விட் டொளிர்வதாம். அதன் சிகையில் பரம்பொருள் இவரும். அதுவே பிரமன், அரி, சிவன், இந்திரன், அழியாப் பரமன், அவனித் தலைவன் ஆம்''. சிவன் மால் பிரமம் எல்லாம் ஒன்றே - வேறுபாடு தொழிலே. எது சிவமோ அதுவே திருமால்.

''சிவாய விஷ்ணு ரூபாய
சிவரூபாய விஷ்ணவே
சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு
விஷ்ணுஸ்ச ஹ்ருதயம் சிவ''

எது சிவமோ அதுவே விஷ்ணு; சிவன் உளமே விஷ்ணு, சிவனுளமே விஷ்ணு உள்ளம் என்கிறது சந்தியாவந்தன மந்திரம்.

''ஓயாதே உள்குவார் உள்ளத்தில் உள்ளானே, நீராய் உருகினார் ஆருயிராய், வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே'' என மணிவாசகர் பாடுகின்றார். அப்பைய தீட்சிதர் ''தோவிந்தராஜா நடராஜா சிவநாராயண ஹரிஹரசங்கர'' என்று சிதம்பரத்திலே வணங்கினார். 'தானும் சிவனும் பிரமனும் ஆகிப் பிணைத்த தனி முதலை' என்கிறார் நம்மாழ்வார்.

''ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத்து அலர்மிசை யானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றொர்
பேதித் துலகர் பிணங்குகின் றாரே''

என்று மார்புதட்டி விளம்புகிறார் திருமூலர். அப்பர் பெருமான்,

''நாரணன்காண் நான்முகன் காண்
நால் வேதன் காண்
ஞானப் பெருங்கடற் கோர்
நாவாயன்ன
பூரணன் காண் புண்ணியன்காண்
புராணன்தான்காண்

என்று இசைக்கிறார். ''சிவமாதல் வேதாந்த சித்தாந்தம் ஆகும்''. ''தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்'' என்கிறார் திருமூலர். பையூரிலே இருந்து, பாழூரிலே பிறந்து, மெய்யூரில் போவதற்கு வேதாந்த சித்தாந்த வழி திறக்கிறார் திருமூலர். திருமூலர் உடம்பார் முதல், உயிரார், உளத்தார், உயர் அறிவார், இன்பச்சிவனார் வரை மானிடத்தின் உட்புறத் தத்துவங்களெல்லாம் நிறைவாகி, களிப்பாறு காதற் கதிரொளி காட்டுகிறார். அதற்கு ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கி, தியானமுறையைக் காட்டுகிறார்.

''திரையற்ற நீர்போல்
சிந்தை தெளிந்தார்க்குப்
புரையற் றிருந்தான்
புரிசடை யானே''

''உள்நின் றுருக்கிஓர்
ஒப்பில் ஆனந்தக்
கண்ணின்று காட்டிக்
களிம்பறுத்தானே''

அருட்சோதி வள்ளலார், திருமந்திரயோகத்தின் உச்சநிலையை உணர்ந்து, உலகெலாம் அறியப் பாடி ஆடுகிறார்.

துரியமலை மேல்உள தோர்
சோதிவள நாடு
தோன்றும் அதில் ஐயர்நடம்
செய்யும் மணிவீடு
தெரியும் அது கண்டவர்கள்
காணின் உயிரோடு
செத்தவர் எழுந்தார் என்றே
கைத்தாளம் போடு.

இங்கே செத்தவர் என்று, தன்னறிவான சிவாத்தும ஞானம் அறியாது, மனமணி இலிங்கத்தை உணராது, காமம் வெகுளி மயக்கத்திலே உழன்று வாழ்வை வீணாக்கும் உயிர்ப் பிணமான அறிவிலிகளைச் சொல்லுகிறார். தன்னறிவு தழைக்காமல், சித்தமலம் அறுவித்துச் சிவமாகாமல் வெறும் சவமாக, உணர்வற்று நடைப்பிணமாகத் திரியும் அறிவிலிகளைச் சொல்லுகிறார் வள்ளலார். இந்த அறிவைப் படிப்படியாக இலிங்க தத்துவமாகக் காட்டுகிறார் திருமூலர்.

## வியன்பெரும் வீடு :

நம் உடல் தத்துவக்கூடு. அஃது எலும்புக் கூட்டில் இறைச்சி, தோல், இரத்தம், கொழுப்பு நாடி நரம்பு, துடிப்பு, உணர்ச்சி, மனம், சிந்தனை மேவிய வியன் பெருவீடாகும்.

இரதம், உதிரம், இறைச்சி, தோல் மேதை
மருளி சுத்தி வழும்பொடு மச்சை
பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி
உருவம் அல்லால் உடல் ஒன்றெனலாமே

இதில் நான் என்ற ஆணவத் துடிப்புள்ளது. தான என்ற தத்துவ நடனம் உணர்வாகிறது. இடையே ஆணவம் எழுந்து அல்லல்இழைத்து மாயத் திரைவிடுத்து உண்மையை மறைக்கிறது. இந்த மறைப்பை ஒதுக்கி, ஆணவநான் ஒழிய, அரனார் தானேதான் என்று நடமாடும் தத்துவத்தை அறிய வேண்டும். இந்த ஆத்மானுபூதியைத் திருமூலர் ஓர் அரிய உருவகமாக விளக்குகிறார்.

வழுதலை வித்திடப்
பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன்
பூசணி பூத்தது
தொழுது கொண் டோடினார்
தோட்டக் குடிகள்
முழுவதும் பழுத்தது
வாழைக் கனியே

வழுதலை என்றால் கத்திரிக்காய்-கத்திரியோகம். அறியாமையைக் கத்திரித் தெறியும் ஆத்மவிசாரம். நானார் என் உள்ளம் ஆர் ஞானங்கள்யார், என்னை யார் அறிவார் என்ற உள்ளாராய்ச்சி. பாகல் என்றால் வைராக்கியம். பாகல் எப்படிப்பட்ட நீரிழிவு, காசம் எல்லாம் போக்கி இரத்தசுத்தி தருவதாகும். பாகல் என்றால் பரிபாகம், பரிபாகம் முளைக்கிறது. பிறகு புழுதியைத் தோண்டுவதாவது உள்ளே தத்துவ ஆராய்ச்சி செய்வது, உள்ளாராய்ச்சி, ஆத்ம விசாரம் செய்யச் செய்யப் பூசணியான சிவநேயம் உண்டாகிறது. பூசணி மேலே திருநீறுபோல வெண்மை பூசப்பட்டது. மந்திரமாவது, தந்திரமாவது, சமயத்தில் உள்ளது நீறு. மலமயமான சாணியைஉருட்டி, வெய்யிலான வைராக்கியத்திலே உலர்த்தி, பிறகு ஞானத்தீயிலே வாட்டினால் தூய நறுமணத் திருநீறாகும். நாம் சாணியைப் பூச முடியாது; அது தீயில் வெந்து வைராக்கிய விபூதியானால் இனிது பூசலாம். சித்தமலம் அறுவித்து மனோமயச் சீவனுட் சிவம் விளக்கமானதும், தத்துவ அத்துவாக்களெல்லாம், மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகிய மாயைகளெல்லாம் (தோட்டக்குடிகள்), சீவனில் ஒளிரும் சிவனைத் தொழுது சிவமயத்தில் கரைந்து ஓடி மறைந்தனர். பிறகு முழுவதும் பழுத்து இனித்து வாழைக்கனிபோல ஆன்மலாபம் சித்திக்கிறது. இதை மாணிக்கவாசகர் உணர்ந்து பாடுகிறார்.

யானேயோ தவம்செய்தேன்
சிவாயநம எனப் பெற்றேன்
தேனாய் இன்அமுதமு மாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து என்உளம் புகுந்து
அடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை
ஒறுத்து அன்றே வெறுத்தேனே.

இந்தப் பாசுரத்தைத் திருப்பித் திருப்பிப் பாடிப்பாடிச் சிந்தை செய்வீராக!

நம்முள் இரண்டு தத்துவங்கள் உள்ளன. ஒன்று ஆணவ நான்; மற்றொன்று அரனான தான். நான் என்ற ஆணவம் தலைகுனிந்து ஓட வேண்டும். தான் என்ற சிவம் சீவனில் பளிச்சிட்டு ஆணவம், கன்மம், மாயை ஆகிய இருளை ஒழிக்க வேண்டும். இதற்கு எளிதான மந்திரத்தைச் சைவசித்தாந்தம் அருளுகிறது. அந்த மந்திரத்தாலே மறதிகெட்டு, மாயங் கெட்டுத் தூயனாகிச் சீவதத்துவத்தில் சிவ சத்தியம் பளிச்சிடும். அதுவே அருளொளி. தாயுமானவர் பாடுகிறார்;

கொலை களவு கட்காமம்
 கோபம் விட்டால் அன்றோ
மலையிலக்காய் நின் அருள்தான்
 வாய்க்கும் பராபரனே

என்னதியான் என்னலற்றோர்
 எங்கிருந்து பார்க்கிலும்நீ நின்
சன்னதியாம் ஸ்ரீபெரிய
 சாமி பராபரமே

முதலில் வேண்டுவது ஒழுக்க விழுப்பம். அது விழுப்பம் தருவது; அதை உயிரினும் மேலாகப் போற்ற வேண்டும். ஒழுக்கம் என்றால் உடல், உயிர், மனஅழுக்கு நீங்கி, புலனொழுக்கம் பொன்ற, நல்வாழ்வு பொலிவதாகும்.

அன்பு உண்மை இன்சொல்
 அடக்கம் பொறுமை அருள்
இன்பப் பொதுநெறியென்று ஏல்!

இந்தப் பொதுநெறிக்கு எதிரான தீய நரகவழி

கொலை புலை கூத்தி
 குடி களவு சூது
வலிய நரக வழி

தீய நரகவழியை நீக்கித் தூய பொது நெறியில் நம் வாழ்க்கை செல்ல வேண்டும். அதற்கு எளிய வழி சிவநாம ஜபமேயாகும்.

சிவாயநம என்று
 சிந்தித்து இருப்பார்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை

சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை. வணங்கி நின்றார்க்கு வழித்துணை சிவமே. வேதமந்திரம் சிவனைப் போற்று கிறது. ருத்ரம், சமகம், இந்திராட்சி சிவகவசம் பஞ்சாட்சரி ஜபம், இவை வேதசாதனமாம்.

தத் புருஷாய வித்மஹே
 மஹாதேவாய தீமஹே
தன்னோ ருத்ரப்ர சோதயாத்

இதுதான்சிவ காயத்ரி. சிவ நாம ஜபம் மூன்று சாதனத் தொகுப்பாகும். முதலில் ஓம் சிவம் என்ற பிரணவ பஞ்சாட்சரி ஜபம். ஓம்- உ ம். அரன் உமை மனிதான்மா. சி-பரமன். வ-வாலைசக்தி, ஓம் சிவம் ஒவ்வொரு மூச்சுடனும், உள்ளத்துடிப்புடனும் இயங்க வேண்டும்.

அடுத்தது சிவோகம். நான் சிவன் என்று தியானித்தல் வேண்டும். அடுத்தபடி சிவ மயம், நாம் காணும் உணரும் எல்லாம் சிவப் பொலிவுள்ளது. சிவமயம் என்பது எங்கும் சிவம் என்றுணர்வதாகும். தாயுமானார் அருளு கிறார்.

எங்கெங்கே பார்த்தாலும்
 எவ்வுயிருக் கவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ
 அன்றோ பராபரமே (1)

எவ்வுயிரும் என்னுயிர்போல்
 எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை
 செய்யாய் பராபரமே (2)

அவம் ஒழிக, சிவம் பொலிக அதுவே தவம் ஆகும். இதயத் துடிப்பு சிவம் சிவம்,ஹரஹர, ஹரி ஹரி என்று நடக்க வேண்டும். ஓம் நம: சிவாயஓம் என்ற நாமாவளியை ஒவ்வொரு மூச்சுடனும் ஓதுக!

என் உலக யாத்திரையில் கூட்டம் கூட்ட மாகப் பாடி ஆடிய சிவமந்திர நாதத்தை இங்கே தருகிறேன். எல்லாரும் ஜபித்து முதலில் சிவசைதன்ய உணர்வாலே சித்த சுத்தி எய்துவோம்.

## சிவமந்திர நாதம் :

நிறைமொழி மாந்தர் மறைமொழி மந்தி ரம்''. ''மந்திரமாவது நீறு'' என்கிறார் ஞான சம்பந்தர். அதாவது காமம் வெகுளி மயக்கம் ஆகிய ஆசாபாசங்களை உருட்டிச் சிவக்கனலான தவக்கனலில் இட்டுப் பொசுக்கினால். அது தூய்மையுற்று நீறு ஆகிறது. அதைச் சிவ சின்னமாக அணிகிறோம். அதைச் சிவமந்திர மான ஐந்தெழுத்தை வழுத்தி அணிகிறோம். அதைச் சிவமந்திரமான ஐந்தெழுத்தை வழுத்தி ஈந்தால், பிணிநீறும்; மனந்தெளியும். மந்திர நீறுபோல மந்திரநாதமும் மனத்திற்குத் தெளிவும், மதிப்பொலிவும் நல்கும். மாசற்ற மனதிலே தியானம் நிலைத்துச் சிதாகாசத்தில் ஓங்காரம் கேட்கும். வண்டுபோலும் யாழ் குழல் போலும் இனிதொலிக்கும். அதுவே மந்திரம். அதையே கவனித்து நாதலயம் எய்துதலே பிரணவயோகமாகும். ஒவ்வொரு சமயமும் மந்திர யோகம் புரிகின்றன.

ஜப்பான் சென்புத்தர் 'ஓம்நம்யோஹோ ரெங்கேகோ' என்ற மந்திரத்தைஒருடவண்டை அடித்து இசைப்பர். திபேத்து புத்தர் மணி பத்மேஹூம் எனும் மந்திரம் இசைப்பர். வேத வேதாந்திகள் தத்வமணி ஓம் தத்ஸத்மந்திரம் இசைப்பர். வைணவர் ஓம் நமோ நாராய ணாய மந்திரம் இசைப்பர். வேதியர் காயத் திரி மந்திரம் ஜபிப்பர். திருநெறிச் சைவர் பஞ்சாட்சரிமந்திரம் ஜபித்துப் பல அற்புதங் களைக் கண்டிருக்கின்றனர்.

நமச் சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச் சிவாயவே நானறி விச்சையும்
நமச் சிவாயவே நாநவின் றேத்துமே
நமச் சிவாயவே நல்வழி காட்டுமே

என்று அப்பரடிகள் பாடுகிறார்.

வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன்நாமம் நமச்சிவாயவே

என்பார் சம்பந்தர்.

நற்றவா உனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே

என்பர் சுந்தரர்.

''நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க''

என்று இசைப்பார் மாணிக்கவாசகர்.

துஞ்சலும் துஞ்சல் இல்லாத போதினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே

— சம்பந்தர்.

## சிவமந்திர நாதம்

நம; சிவாய ஓம் சிவம்
நம: சிவாய ஓம்சிவம்
நம: சிவாய ஓம் சிவம்
நம: சிவாய ஓம் சிவம்
ஓம் சிவம் சிவோஹம் சிவமயம்
ஓம் சிவம் சிவோஹம் சிவமயம்
ஓம்என ஒலிப்பதும் நம: சிவாய ஓம்சிவம்
ஓதுவேத நாதமும் நம: சிவாய ஓம் சிவம்
ஆத்ம ஞான ஜோதியும் நம: சிவாய ஓம் சிவம்
நான் எனத் துடிப்பதும் நம: சிவாயஓம் சிவம்
ஞாலமாய் நடப்பதும்நம: சிவாய ஓம் சிவம்
தேன்என இனிப்பதும் நம: சிவாய ஓம் சிவம்
சீவனாய்த் தழைப்பதும் நம: சிவாய ஓம் சிவம்
வான் விரிந்ததும் நம: சிவாய ஓம் சிவம்
வளி எனப் பரந்ததும் நம: சிவாய ஓம் சிவம்
ஊன.லே உயிர்ப்பதும் நம: சிவாய ஓம் சிவம்
உள்ளத்துள் ஒளிர்வதும் நம: சிவாய ஓம்சிவம்
ஆத்ம விச்யா தத்துவம் நம: சிவாய ஓம் சிவம்
ஆதி வேத சத்தியம் நம: சிவாய ஓம் சிவம்
வேத சத்தியம் நம: சிவாய ஓம் சிவம்
பூத்த பூ மணத்திலும் நம: சிவாய ஓம் சிவம்
புண்ணியத் தவத்திலும் நம: சிவாய ஓம்சிவம்

மந்திரத்துள் மந்திரம் நம: சிவாய ஓம் சிவம்
மனங்கடந்த மந்திரம் நம: சிவாய ஓம் சிவம்
சுடரே சக்தியும் நம: சிவாய ஓம் சிவம்
சுத்த யோகசித்தியும் நம: சிவாய ஓம் சிவ
சீவனுட் சிவமணி நம: சிவாய ஓம் சிவம்
நஞ்சை யுண்ட கண்டமும் நம: சிவாய ஓம் சிவம்
அணுவுடன் பிரம்மமும் நம: சிவாய ஓம்சிவம்
தஞ்சமீந்து காப்பதும் நம: சிவாய ஓம் சிவம்
தானே தானானதும் நம: சிவாய ஓம் சிவம்
மந்திரத்துள் மந்திரம் நம: சிவாய ஓம் சிவம்
மாதவப் பயனெலாம் நம: சிவாய ஓம் சிவம்
தந்திரத்துள் சக்தியும் நம: சிவாய ஓம் சிவம்
சரியை கிரியை யோகமும் நமசி:வாய ஓம்சிவம்
அரிய ஞான சித்தியும் நம: சிவாய ஓம் சிவம்
அகில ஜீவன் முக்தியும் நம: சிவாய ஓம் சிவம்
பெரிய பெரிய பேரின்பம் நம: சிவாய ஓம்சிவம்
பேசரிய மந்திரம் நம: சிவாய ஓம் சிவம்
நாலு வேத சாரமும் நம: சிவாய ஓம் சிவம்
நாலு சாதனங்களும் நம: சிவாய ஓம்சிவம்
நாலு யோக சித்தியும் நம: சிவாய ஓம் சிவம்
நாலு மார்க்கமாவதும் நம: சிவாய ஓம் சிவம்
நாலாச் சிரம நியமமும் நம: சிவாய ஓம் சிவம்
நாலு புருடார்த்தமும் நம: சிவாய ஓம் சிவம்
நால்வர் பாடலின் பொருள் நம: சிவாய ஓம் சிவ
நாலுணர்நிலைகளும் நம: சிவாய ஓம் சிவம்
சிதம்பரப் பரமனும் நமச் சிவாய ஓம் சிவம்
சிற்சபை நடிகனும் நமச் சிவாய ஓம் சிவம்
பதம்பிடித்துப் பாடலும் நம: சிவாய ஓம் சிவம்
பக்தர்கூடி ஆடலும் நம: சிவாய ஓம் சிவம்
திருவாசக வெள்ளமும் நம: சிவாய ஓம் சிவம்
திருமந்திர உள்ளமும் நம: சிவாய ஓம்சிவம்
திருமுறை நிறைவதும் நம: சிவாய ஓம் சிவம்
திருத்தொண்டர் மறையதும் நம: சிவாயஓம் சிவம்
நீற்றறை குளிர்ந்ததும் நம: சிவாய ஓம் சிவம்
நீலநஞ் சினத்ததும் நம: சிவாய ஓம் சிவம்
கூற்ற யானை குனிந்ததும் நம: சிவாய ஓம் சிவம்
குண்டலிக் கலையும் நம: சிவாய ஓம் சிவம்
கல்லும் தெப்பமானதும் நம: சிவாய ஓம் சிவம்
காலகாலன் வீறதும் நம: சிவாய ஓம் சிவம்
இல்லை என்பார் உள்ளத்தும் நம: சிவாய ஓம்சிவம்
நித்தியப் பொருளதும் நம: சிவாய ஓம் சிவம்
நின்மலர் அருளதும் நம: சிவாய ஓம் சிவம்
அமைதி நல்கும் ஆற்றலும் நம: சிவாய ஓம் சிவம்
அகர உகர மகரமும் நம: சிவாய ஓம் சிவம்
சமய சாத்திரங்களும் நம: சிவாய ஓம் சிவம்
சகல யோக சித்தியும் நம: சிவாய ஓம் சிவம்
என்பி பெண் எழுந்ததும் நம: சிவாய ஓம் சிவம்
எரிஎரிக் கொளுத்ததும் நம: சிவாய ஓம் சிவம்
அன்புடன் அணைந்ததும் நம: சிவாய ஓம் சிவம்
அறிவிலே விளைந்ததும் நம: சிவாய ஓம் சிவம்

உள்ளத்தைத் திறப்பதும் நம: சிவாய ஓம் சிவம்
உயிரிலே துடிப்பதும் நம: சிவாய ஓம் சிவம்

எள்ளில் எண்ணெயானதும் நம: சிவாய ஓம் சிவம்
இயற்கையில் இனிப்பதும் நம; சிவாய ஓம்சிவம்
இயற்கையில் இனிப்பதும் நம: சிவாய ஓம்சிவம்

அச்சமோட்டும் மந்திரம் நம: சிவாய ஓம் சிவம்
அன்பிலே அரும்பிடும் நம: சிவாய ஓம் சிவம்

உச்சமான சித்தியும் நம: சிவாய ஓம் சிவம்
ஊனில் மேய சக்தியும் நம: சிவாய ஓம் சிவம்

முப்பொருள் விளக்கமும் நம: சிவாய ஓம் சிவம்
மூவரின் பெருமையும் நம: சிவாய ஓம் சிவம்

எப்பொருளுமானதும் நம: சிவாய ஓம் சிவம்
எல்லாம் வல்ல மந்திரம் நம: சிவாயஓம் சிவம்

உள்ளத்தே துடிப்பதும் நம சிவாயஓம் சிவம்
உலகமாய் வளர்வதும் நம சிவாயஓம் சிவம்

தெள்ளிய விஞ்ஞானமும் நம: சிவாய ஓம் சிவம்
தெய்வ சித்தி மோனமும் நம: சிவாய ஓம் சிவம்

தேக சக்தியாவதும் நம: சிவாய ஓம் சிவம்
திவ்ய சக்தியாவதும் நம: சிவாய ஓம் சிவம்

ஏக முத்தி சித்தியும் நம: சிவாய ஓம் சிவம்
எல்லையற்ற இன்பமும் நம: சிவாய ஓம் சிவம்

சமயசார மந்திரம் நம: சிவாய ஓம் சிவம்
சர்வ சித்தி தந்திரம் நம: சிவாய ஓம் சிவம்

இமய ஜோதியில் வளர் நம: சிவாய ஓம் சிவம்
எல்லோருக்கும் இன்பமாம் நம: சிவாய ஓம் சிவம்

நமச்சிவாய ஓம் சிவம்
நமச்சிவாய ஓம் சிவம்

நமச்சிவாயஓம் சிவம்
நமச்சிவாய ஓம் சிவம்.

இந்தப் பஞ்சாட்சரி மந்திரத்தை எல்லாரும் இனிது சேர்ந்து ஆர்வமுடன் பாடுக. அப்பர் சிவபக்தியைச் சேக்கிழார் பாடும் அற்புதம் காணீர். அந்த அன்பைப் பூணீர்!

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

—தொடரும்

# வேதாந்த தேசிகர் (கி. பி. 1268-1368)

காஞ்சிபுரத்தில் திருத்தண்கா என வழங்கப்பெறும் விளக்கொளி எம்பெருமான் சந்நிதியின் சூழலில் தோன்றியருளினார். தந்தையார் அநந்த சோமயாஜி, தாயார் தோத்தாத்திரியம்மை. ஆசிரியா, மாதுலரான கிடாம்பியப்புள்ளார் என்னும் இராமாநுசப்பிள்ளான். ஸ்ரீவேங்கடநாதசர்மா என்பது, இவர்தம் இயற்பெயர். வேதாந்தாசார்யர். கவிதார்க்கிக கேசரி, சர்வதந்த்ர சுவதந்த்ரர், சமஸ்யா சகஸ்ரீ என்பன, பின்னர் இவருக்குப் பட்டப்பெயர்களாக வழங்கப் பெற்றன. திருவகீந்திரபுரத்தில் தெய்வநாயகன் சந்நிதியில் பெரிய திருவடியினால் அயக்ரீவ மந்திரம் உபதேசிக்கப் பெற்றார். அதனை இடையறாது நெடுநாள் செபித்து, அயக்ரீவ மூர்த்தியின் அருளும் தரிசனமும் கிடைக்கப் பெற்றார்.

அயக்ரீவ தோத்திரம், கருட பஞ்சாசத், தேவநாயக பஞ்சாசத், அச்சுத சதகம், கோபால விம்சதி, ரகுவீர கத்யம், தேகளீசஸ்துதி, அஷ்ட புஜாஷ்டகம், வேகாசேதுஸ்தோத்திரம், சரணாகதி தீபிகை, காமாசிகாஷ்டகம், பரமார்த்த ஸ்துதி, ஸ்ரீஸ்துதி, வரதராஜ பஞ்சாசத், வைராக்கிய பஞ்சகம், அபீதிஸ்தவம், சங்கற்ப சூர்யோதயம், பாதுகா சகஸ்ரம் என்னும் வடமொழி நூல்களும், அடைக்கலப்பத்து, அர்த்தபஞ்சகம், ஸ்ரீவைஷ்ணவ தினசரி, பன்னிருநாமம், திருச்சின்னமாலை, அத்திகிரி மகாத்மியம் முதலிய பல தமிழ்ப் பனுவல்களும்; வேதாந்த தேசிகரால் இயற்றப்பெற்றுள்ளன.

''சந்தமிகு தமிழ் மறையோன்'' என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளும் வேதாந்த தேசிகர். தமிழ் வேதமாகிய திருவாய்மொழியைத் தெளிய ஓதினால், தெளியாத மறைகளான வடமொழி வேதங்களின் பொருளையும் ஐயம் அறத் தெரிந்து தெளிந்து கொள்ளலாம் என்று கூறியருள்கின்றார். இராமாநுசரின் விசிஷ்டாத்வைதக் கொள்கையினைத் தமது வடமொழி, தென்மொழி நூல்களாற் பெரிதும் விளக்கியருளிய பெருந்தகையாளர் இவர்;

—ஆசிரியர்



# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

## திருச்செந்தூர்—628 215

ஆறு படைவீடுகளில் இரண்டாவது படைவீடாகிய திருச்செந்தூர், மன்னார் வளைகுடாக் கடலின் கரையோரத்தில் கிழக்கு மற்றும் வடக்குக் கிரிப்பிராகாரங்களில், கடல் அலைகள் வந்துமோதும் இயற்கை எழில் மிகுந்த ஒரு பழம்பதியாகும். செந்தமிழ்க் கடவுளாம் கந்தவேள் சூரபத்மனை வென்றுவாகை சூடிச் சிவபெருமானை வழிபட்டு அமர்ந்தருளும் பதி இது. சூரபத்மனை வதம்செய்து முருகப்பெருமான் வெற்றிவாகை சூடிய கந்தசஷ்டித் திருவிழா ஐப்பசி (அக்டோபர்-நவம்பர்) மாதத்தில் திருக்கோயிலில் விமரிசையாக நடைபெற்று வருகிறது.

அகநானூறு, புறநானூறு, திருமுருகாற்றுப்படை, திருப்புகழ் போன்ற நூல்களில் இடம் பெற்ற இத்திருக்கோயிலில் கர்னாடக மாநிலத்தைச் சேர்ந்த போற்றிகளால் பூசைகள் செய்யப்படுவதும், 9 கால பூசைகள் தினசரி நடைபெறுவதும் சிறப்பு அம்சமாகும்.

**கோவில் திறந்திருக்கும் நேரம்:**

தினசரி காலை 5 மணிக்கு நடை திறந்து பகல் 12.30 மணிக்கு நடை சாத்தப்படுகிறது.
பின்னர் மாலை 4 மணிக்கு நடை திறந்து இரவு 10 மணிக்கு நடை சாத்தப்படுகிறது.

**பூசை நேரங்கள்:**

விசுவரூப தரிசனம் காலை 5.30 மணி. உதய மார்த்தாண்ட அபிஷேகம் காலை 6 மணி. உச்சிக்கால அபிஷேகம் காலை 10.30 மணி. உச்சிக்கால தீபாராதனை பகல் 12.30 மணி. சாயரட்சை தீபாராதனை மாலை 5 மணி.
இராக்கால அபிஷேகம் இரவு 8.30 மணி.
இராக்கால தீபாராதனை இரவு 9.15 மணி.

**முக்கியத் திருவிழாக்கள்:**

1. மாசித் திருவிழா-பிப்ரவரி-மார்ச்
2. வைகாசி விசாகம்-மே-சூன்
3. ஆவணித்திருவிழா-ஆகஸ்ட்-செப்டம்பர்
4. கந்தசஷ்டி விழா-அக்டோபர்-நவம்பர்

**சிறப்புப் பூஜா கட்டண விவரங்கள்:**

1. தங்கத்தேர் இழுப்பதற்குக் கட்டணம் ரூ. 500/- (ரூ. ஐந்நூறு)
2. இத்திருக்கோயில் மூலமாகச் சண்முகார்ச்சனை செய்யக் கட்டணம் ரூ. 600/- (அறுநூறு) ரூபா.
3. மாதாந்திரக் கிருத்திகையன்று ஜெயந்திநாதர் சிறப்பு அபிஷேகம் செய்யக் கட்டணம் ரூ. 1,500/- —தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 70

**கட்டளைக்குச் செலுத்த வேண்டிய நிரந்தர வைப்புத்தொகை விவரங்கள்:**

| | |
|---|---|
| 1. புஷ்பக் கட்டளை | ரூ. 750/- |
| 2. உதயமார்த்தாண்ட கட்டளை | ரூ. 1,000/- |
| 3. பிரதோஷக் கட்டளை | ரூ. 1,000/- |
| 4. அஷ்டோத்தர அர்ச்சனைக் கட்டளை | ரூ. 1,000/- |
| 5. சண்முகார்ச்சனைக் கட்டளை | ரூ. 7,500/- |
| 6. ஒருநாள் முழுவதும் ஒன்பதுகால பூசைக் கட்டளை | ரூ. 10,00/- |
| 7. தங்கரதம் கட்டளை | ரூ. 10.000/- |
| 8. ஜெயந்திநாதர் சிறப்பு அபிஷேகக் கட்டளை | ரூ. 15,000/- |

பி.கு—வருடத்தில் ஒரு தினத்தில் மட்டும் பக்தர்கள் விரும்புகிறவாறு மேற்கண்ட கட்டளைகள் செய்யப்படும்.

மாதந்தோறும் அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்ப வருடம் 1க்குக் கட்டணம் (பதிவு அர்ச்சனை) ரூ. 40/-
(தபால் கட்டண உயர்வுக்கு ஏற்பக் கட்டணம் உயர்த்தப்படும்).
குறிப்பிட்ட நாம, நட்சத்திரத்தில் அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்பக் குறைந்த பட்சக் கட்டணம் ரூ. 5/-
திருக்கோவில் பிரசாதம் தபாலில் பெறக் குறைந்த பட்சக் காணிக்கை ரூ.2/-

**தங்குமிட வசதி விவரங்கள்:**

குளியலறை மற்றும் இதர நவீன வசதிகளுடன் கூடிய பல்வேறு ரகங்களிலான அறைகள் மற்றும் சிறு குடில்கள் நியாயமான வாடகைக்குக் கிடைக்கும்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்.71.
தொலை பேசி எண்கள்: அலுவலகம் 21, கோவில் (உள்துறை) 70

| | |
|---|---|
| த. நாகராசன், B.Sc., | எஸ்.ஆர். சுப்ரமணிய ஆதித்தன், |
| உதவி ஆணையர்/செயல் அலுவலர் | தக்கார் |

# "சைவசித்தாந்தத்தின் சிறப்பியல்புகள்"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை :

சிவபிரானை முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம், சைவம் எனப் படும். அச் சைவத்தின் சித்தாந்தம் அல்லது கொள்கையே, பொதுவாகச் சைவ சித்தாந்தம் என வழங்கப்படும். எனினும் சைவம் என்பதும் சைவசித்தாந்தம் என்பதும், தனித்தனிப் பொருட் குறிப்புடையன ஆகும். சைவம் என்பது இமயம் முதல் குமரி வரையில் இந்திய நாடு முழுவதிலும் பரவியுள்ளது. ஆயினும், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் சமயாசிரியர்கள் நால்வராலும், மெய்கண்டார், அருள்நந்திசிவம், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் என்னும் சந்தான ஆசிரியர்களாலும், அவர்தம் வழிவந்த மற்றும் பற்பல அருட்பெருஞ் சான்றோர்களாலும், பரப்பி வளர்க்கப் பெற்றதே ''சைவ சித்தாந்தம்'' எனப்படும்.

## சைவசித்தாந்தத்தின் சிறப்பு :

இத்தகைய சைவசித்தாந்தச் செந்நெறியின் சிறப்பினையும், அருமை பெருமைகளையும், நம்முன்னோர் தம் நூல்களில் பலவகைகளில் விதந்து குறிப்பிட்டுள்ளனர். ''சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்திக்கும்''—''தற்சிவம் கண்டுளோர் சைவ சித்தாந்தரே'' - ''சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே'' என்பன போல வரும் திருமூலர் திருமந்திரத் தொடர்கள், சைவசித்தாத்தின் சிறப்பினைக் குறிப்பிட்டு உணர்த்துதல் காணலாம்.

சிவப்பிரகாசம் என்னும் நூலில், ஆசிரியர் உமாபதி சிவம் ''சைவ சித்தாந்தமானது, புறச்சமயத்தவர்களுக்கு இருளாய், அகச்சமயத்தவர்க்கு ஒளியாய் விளங்கும்; அளவை நெறிக்கு அளவையாகத் திகழும்; இறைவனையும் உயிர்களையும், பொன்னும் பணியும்போல் அபேதம், இருள் ஒளிபோல் பேதம், சொற்பொருள்போல் பேதாபேதம் என்று கூறும் பிறசமயங்கள் போலாமல், இறைவன் உயிர்களுடன் உடலும் உயிரும்போல் ஒன்றாகவும், கண்ணும் சூரியனும்போல் வேறாகவும், கண்ணொளியும் உயிரறிவும்போல் உடனாகவும் இயைந்து நிற்றலை இனிது உணர்த்தும்; வேதாந்த நூல்களின் பிழிவாகவும் தெளிவாகவும் திகழும்'' என்கின்றார்.

''புறச்சமயத் தவர்க்கிருளாய், அகச்சமயத்
தொளியாய்ப்
புகல் அளவைக்கு அளவாகிப்
பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய், இருள்ஒளிபோற் பேதமும்,
சொற்பொருள்போல்
பேதாபேதமும் இன்றிப், பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய், உடலுயிர்கண்
அருக்கன்
அறிவொளிபோல் பிறிவரும்அத் துவிதம்
ஆகும்
சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்க லுற்றாம்''

—சிவப்பிரகாசம்.

மற்றும், இச்சைவ சித்தாந்தமானது, ''உலகாயதம் முதலாகச் சிவாத்துவைதம் ஈறாக உள்ள பல்வேறு மதங்கள் கூறும் கொள்கைகளை எல்லாம் கடந்தது. வேதத்தலை தரு பொருளாய் விளங்குவது. ஆயுந்தோறும் அறிஞர்களுக்கு ஆராஇன்பம் அளிப்பது. உள்ளதே தோழிற்படும் என்னும் கொள்கை (சற்காரிய வாத) நெறியினை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது'' என்றும், சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கையின் சிறப்புக்களை, ஆசிரியர் உமாபதி சிவம் தொகுத்துக் கூறியருள்கின்றார்.

---

**பாரதிதாசன் பல்கலைக்கழகமும், தருமபுர ஆதீனமும் இணைந்து நடத்திய அனைத்துலகச் சைவ சித்தாந்தக் கருத்தரங்கில், படிக்கப்பெற்ற "The Characterestics of the Saiva Siddhantha Philosophy" என்னும் ஆங்கில ஆய்வுக் கட்டுரையினைத் தழுவியது. —ஆசிரியர்**

''நிலவுல காய தாதி
நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்
குலவினர் அளவ ளாவாக்
கொள்கைய தாய் வேதத்
தலைதரு பொருளாய்,
இன்பமாய்த், தாவில்சற் காரி யத்தாய்
மலைவறும் உணர்வாற் பெத்த
முத்திகள் மதித்தாம் அன்றே''

—சிவப்பிரகாசம்100

## தமிழ்ப்பண்பாடு :

சைவ சித்தாந்தக் கொள்கை நெறியினைச் ''சித்தாந்த சைவம்'' என்றும் பெரியோர்கள் வழங்குவர். இது நம் தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்குமே உரிய, பழைமையும் பெருமையும் மிக்க சிறப்பு நெறியாகும். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் என்னும் தமிழ்வேதமே பசுவாகவும், திருமூலர் அருளிய திருமந்திரம் என்னும் தமிழ் ஆகமமே அப்பசுவின் பாலாகவும், அப்பர் சம்பந்தர் சுந்தரர் மணிவாசகர் என்னும் நால்வர் பாடிய திருமுறைகளே அப்பாலின் நெய்யாகவும், மெய்கண்டார் அருள்நந்திசிவம் உமாபதி சிவம் என்னும் சந்தான ஆசிரியர்கள் இயற்றிய நூல்களே அந்நெறியின் சுவையாகவும் அமையச் சிறந்து விளங்குவது, சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கை. இவ்வாற்றால் சைவ சித்தாந்தம் நம் தமிழ்நாட்டிற்கும், தமிழ்ப் பண்பாட்டிற்குமே, உரிய தமிழ் நெறியாதல் தெளியற் பாலது.

''வேதம் பசு; அதன்பால்மெய்யா கமம்; நால்வர்
ஓதும் தமிழ் அதனின்உள்ளுறும்நெய்—போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணை
மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்''

—தனிப்பாடல்.

## தருக்க இயல் :

சைவசித்தாந்தத் தத்துவ ஆராய்ச்சி, காரணகாரிய அடிப்படையில் (Logical), அறிவு நெறிக்கு ( Rational ) ஏற்ப, அமைந்து திகழ்வது. பலவகை ஐய வினாக்களுக்கும் நல முற விடையளிப்பது. துணிபொருள், ஏது, காட்டு, இணைத்தல், முடித்தல் (பிரதிஞ்ஞை-ஏது-திருட்டாந்தம்-உபநயம் - நிகமனம்) என்னும் ஐவகை யுறுப்புகள் அமையச் சான்றுகள் காட்டி, மெய்ப்பிக்கப்பட்ட கொள்கையே சித்தாந்தம் எனப்படும். அம்முறைமைக்கு ஏற்பத் தருக்க நெறிமுறைகள் பிறழாது ஆராய்ந்து காட்டி விளக்கிச் செல்வது. இதற்குப் பின்வரும் சிவஞானபோதப் பேருரைப் பகுதி, சிறந்த இனிய எடுத்துக்காட்டாகும்.

## சிவஞானபோதப் பேருரை :

''முதல்வன் ஐந்தொழில் செய்தல் தன் பொருட்டோ! பிறர் பொருட்டோ? வீணோ? தன்பொருட்டெனின், வரம்பிலின்பமுடைய முதல்வனுக்கு இச்செய்கையான் வரக்கடவதோர் பயனில்லை. உயிர்களின் பொருட்டெனின், உயிர்களும் அவனும் அபேதமோ? பேதமோ? பேதாபேதமோ? பொன்னும் பணியும்போல் அபேதமாயின், அது தன் பொருட்டேயாம். இருளும் ஒளியும்போற் பேதமாயின், அவ்வுயிர்கள் பொருட்டு ஐந்தொழில் செய்தற்கு ஒருவாற்றானும் இயைபில்லை. சொல்லும் பொருளும்போற் பேதாபேதமெனின், அபேதமும் பேதமுமாமென்றல், சமணர்கூறும் அநேகாந்த வாதமாம். சொல்லும் பொருளும் வேறேயாயினும் சொல்வந்தெழலும் பொருள் தோன்றுதல் பற்றி அபேதமென்பார் மதத்தை ஒருவாற்றான் உடம்பட்டுப் பேதாபேதமென்னும் துணையேயன்றி, ஒரு பொருட்கு இரண்டு தன்மைகோடல் பொருந்தாமையின், அது போலியேயாகும். இங்ஙனமாகலின் பிறர் பொருட்டு என்பது பொருந்தாது''.

''இனி இவ்வாறன்றி வீணெனின், பித்தர் செய்யுந் தொழிலோடொக்கும். பித்தரேயன்றி அறிவான் முதிர்ந்த அரசர் முதலியோரும், வேட்டையாடுதல், சூதாடுதல், உயிர்த்தல், இமைத்தல், ஆவித்தல், தும்முதல், முதலிய வீண்தொழில்கள் செய்யக் காண்டலின், முதல்வனும் அவ்வாறு வறிதே செய்தல் அமையுமெனின், வேட்டையாடுதல், புலி முதலிய விலங்குகள் மிக்கு நாடு நலியாமைப் பொருட்டாதல், தமக்கு மடிமை வாராமை முதலிய வற்றின் பொருட்டாதல், உணவின் பொருட்டாதல், யாதானுமொரு பயன் குறித்தன்றிச் செய்யாமையானும்; சூதாடுதல் வஞ்சனையாற் பகைவரை வெல்லுவதற்கு உபாயமறிதற் பொருட்டாதல், பணையம் பேசிப் பொருளீட்டற் பொருட்டாதல், யாதானுமொரு பயன் கருதியன்றிச் செய்யாமையானும், உயிர்த்தல் உயிர்நிலையின் பொருட்டாகலானும், இமைத்தல் விழியைப் பாதுகாத்தற் பொருட்டாகலானும், ஆவித்தல் தும்முதல் முதலாயின தம் குறிப்பினன்றிக் காரணத்தான் நிகழ்தலானும், இளஞ்சிறார் செய்யுஞ் சிறுதேருருட்டல் சிற்றில்இழைத்தல் முதலிய விளையாடற்றொழில், போர்முகத்தில் தேர் நடாத்துதல் அட்டிற்றொழில் வன்மை முதலியன சோபான முறையிற் பயிலுதற் பொருட்டு இரு முதுகுரவர் முதலியோராற் செலுத்தப்பட்டு நிகழ்தலின், அவை அப்பெரும் பயனுடையவாய், அவ்விளமைப் பருவமாத்திரையின் மகிழ்ச்சி மீதூர்தலாகிய அற்பபயனும் உடையவாகலானும், அவை யெல்லாம் வீண்தொழிலன்மையின், வீண்தொழிலெல்லாம் பித்தர் முதலியோர் செய்யுந் தொழிலேயாம்.

இங்ஙனமாகலின், ஐந்தொழில் செய்வோன் முதல்வனென்றல் இலக்கண வழுவாமென்று ஆசங்கை நிகழ்ந்த வழி, அதனை நீக்கி, இறைவன்உயிர்களின் வேறாயினுங்கலப்பினால் அவையேயாம் இயைபுடைமையின், உயிர்களின் பொருட்டே, கருணையால் இறைவன் ஐந்தொழில் செய்வன் என்க!''

எனவரும் சிவஞான போதப் பேருரைப் பகுதியால், சைவசித்தாந்தம் தருக்கநெறி முறை பிறழாது ஆராய்ந்து செல்லும் தன்மையினை, இனிது உணரலாம்.

## அறிவியல் :

இனி, சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கை வெறும் நம்பிக்கையைமட்டும் தழுவிக் குருட்டியற் போக்கில் அமைந்துள்ளதன்று. அஃது இக்கால அறிவியல் ஆய்வுநெறிகளுக்கு இயைய, அமைந்து விளங்குவது. சிவஞான போதத்தின் இரண்டாஞ் சூத்திரப் பேருரையின்கண், விரிவாக விளக்கப்படும் கருத்துககள் அனைத்தும், இந்நாளைய அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பெரிதும் போற்றத்தக்கனவாகத் திகழ்கின்றன. நிலமுதல் நாதம் ஈறாகிய 36 தத்துவங்களைப் பற்றிய சைவசித்தாந்த ஆராய்ச்சிக் கருத்துக்கள், வெறும் உன்னங்கள் அல்லாமல், காரணகாரியத் தொடர்புடன் அறிவியல் நெறிக்கு ஏற்ப அமைந்துள்ளன (3) என்று அறிஞர்கள் பெரிதும் வியந்து புகழ்ந்துள்ளனர்.

1. உள்ளது அழியாது, இல்லது தோன்றாது.
2. செய்வோனை இன்றிச் செய்வினை இல்லை.
3. சடத்தில் சித்தும், சித்திற் சடமும் தோன்றா.
4. செய்பொருள் வேறு, செயப்படுபொருள் வேறு, இரண்டும் ஒன்றாக மாட்டா.
5. சூனியத்திலிருந்து ஒன்றும் தோன்ற இயலாது.
6. சுட்டியுணரப்பெறும் பொருள்கள் அனைத்தும் அழியும்.
7. நித்தப்பொருள் சுட்டியுணரப்படாது.
8. சடப்பொருள்கள் உருவம் மாறும் தன்மையன.
9. உருவம் மாறுதலால், ஒருபொருளும் அழிவதில்லை.
10. நுண்வடிவில் உள்ளதாய், பருவடிவில் இல்லாத ஒன்றே தோன்றும்.
11. காரணப் பொருளின் தன்மையே; காரியத்தில் உள்ளதாகும்.
12. தனிப்பொருள் கூட்டுப் பொருள் ஆகாது.
13. பொருள்களின் ஆற்றல் அழிவதில்லை.
14. உற்பத்தியாதற்கு முன்னும் காரியம் உள்ளது.
15. மாறுபட்ட இரண்டு தன்மைகள், ஒரு பொருட்கு இயற்கையன்று.
16. அவயவப் பகுப்புடைமை காரியப் பாட்டிற்கு ஏதுவாகும்.
17. அருவமும் உருவமும் தம்முள் மாறுகோள் அன்று.
18. பலவாய் ஏகதேசமாய் அநித்தமாய் உள்ளது காலம்.
19. தூலமாம் உருவினுக்குச் சூக்குமம் முதல்.
20. சடமுமாய்ப் பலவுமாய் உரைக்கப்படுவன எல்லாம் தோனறி நின்று அழியும்.
21. ஒலிக்கும் ஒளிக்கும் உருவம் உண்டு.
22. இயற்கைத்தன்மை என்றும் மாறாது.
23. இயற்கையின் விதிகள் எங்கும் என்றும் ஒரே வகையாக இயங்கும்.
24. பருப்பொருளாக இருப்பன நுண்பொருளாக மாறும்.
25. பருப்பொருளிலும் நுண்பொருளுக்கு ஆற்றல் மிகுதி
26. எண்ணங்களுக்கு ஆற்றலும் பயனும் உண்டு.
27. எண்ணங்களுக்கு ஏற்பப்பயன்நிகழும்.
28. இடம் எல்லையற்றது.
29. காலம் முடிவில்லாதது
30. மனம் என்பது ஒரு சடப்பொருளே.
31. ஒருபொருளின்தோற்றத்திற்கு முதல்-துணை-நிமித்தம் என மூன்று காரணங்கள் உண்டு.
32. காணப்படாத அருவப் பொருளுக்கும் உருவம் உண்டு.

---

(3) "The unique position of Saiva Siddhanta in the history of thought is the fact that it expounds by careful reflection the systematic account of the progess of cosmic evolution which attempts to comprehend the universe as a sum total of 36 categories. This exposition is no mere metaphysical speculation but is purely a logical account on scientific prniciples".

—Theos Bernard

என்பன போன்ற, எத்தனையோ பல அறிவியல் உண்மைகளைச் சைவசித்தாந்தம் தகவுற விளக்கிச் செல்கின்றது.

சைவசித்தாந்தம் கூறும ''சார்ந்ததன் வண்ணமாம் தன்மை'' பற்றிப் பேராசிரியர் என்றி டிரம்மாண்டு (Henry Drummond), 'ஆன்மிக உலகில் இயற்கையின்சட்டம்' (Natural Law in the Spiritual World) என்னும் தம்முடைய நூலில் விளக்கியுள்ளார். இங்ஙனமே,

''ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பால்
ஐயனே யென்றுன் அருள்வழி இருப்பேன்;
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
நாதனே உனைப் பிரிவுறா அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காயமா யத்தைக் கழித்தருள செய்யாய்;
சேட்டைத் தேவர்தந் தேவர் பிரானே
திருப்பெருந்துறை மேவிய சிவனே''

எனத் திருவாசகத்தில் மணிவாசகர் பாடுவதற்கேற்ப, மக்களில் தலைவர்கள் போலத் தேவர்களிலும் தலைவர்கள் உள்ளனர் என்றும், அவர்கள் இறையருள் ஆற்றலால் உலகங்களை முத்தொழிற்படுத்துவர் என்றும், சர் ஆலிவர் லாட்ஜ் என்னும் பேரறிஞர், ''மனிதனும் பேருலகமும்'' (Man and the Universe) என்னும் நூலில் விளக்குகின்றார்.

''எருவிடும் வாசற் கிருவிரல் மேலே
கருவிடும் வாசற் கிருவிரல் கீழே
உருவிடும் சோதியை உள்கவல் லார்க்குக்
கருவிடும் சோதி கலந்துநின் றானே''

என்று, சைவ சித்தாந்தப் பெருஞ் சான்றோராகிய திருமூலர் முதலிய அருளாளர்கள் கூறுவதுபோலவே, வில்லியம் ஜேம்ஸ் (William James) என்னும் அமெரிக்க நாட்டுத் தத்துவ உளநூற் பேரறிஞர், கதிரொளிமுடிச்சு (Solar Pluxes), மூல அடிமுளையை இயக்கிப் பயன்படுத்தும் முறைபற்றி விவரிக்கின்றார். எட்மண்ட் கர்னி, மயர்ஸ், பாட்மோர், எட்வர்ட்கேயர்ட் முதலிய அறிவியற் பேரறிஞர்கள், பாவனையின் பயன்களையும், உருவவழிபாட்டின் இன்றியமையாமையையும் பெரிதும் வலியுறுத்தி உள்ளனர். சார்லஸ் ஜான்ஸ்டன், தியோஃபைல் பாஸ்கல் முதலிய எத்தனையோ பல அறிஞர்கள், முற்பிறவி பிற்பிறவிகள் உண்டு என்பதைக் கண்டறிந்து மெய்ப்பிக்கின்றனர்.

உலகம் முழுவதும் நடராச வடிவத்தின் நலனை வியந்து, இந்நாளில் எல்லாநாட்டினரும் புகழ்ந்து போற்றுகின்றனர். இங்ஙனமே பெண்கூறும் ஆண்கூறுமாக ஒருசேரப் பிரிவின்றி இயைந்து நிற்கும் அம்மையப்பர் (அர்த்தநாரீசுவரர்) பற்றிய தத்துவநுட்பமும், அனைவராலும் ஏற்றுப் போற்றப்படுகின்றது. நமது சோமாஸ்கந்த வடிவம், தந்தை-மைந்தன்-தூய ஆவி என்னும் கிறித்துவ சமயத் திரித்துவக் கொள்கைக்கு (Trinity) ஏற்றதாகத் திகழ்கின்றது. ஆலமர்செல்வர் ஆகிய தட்சிணா மூர்த்தியின் திருவுருவம், பிரம்ம ஞான சபையினரால் (Theosophists) ஏற்றுத் தழுவிக் கொள்ளப்பட்டுள்ளது. இன்னோரனைய செய்திகள் பலவும், நம்முடைய சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையானது, அறிவியல் நெறியோடு முரண்படாமல், இணைந்து பிணைந்து இயைந்து செல்லும் இயல்பினைத் தெளிவுறுத்துவனவாகும்.(4).

## உலகளாவிய உயர்நெறி;

நம்முடைய தமிழ்நெறி விளக்கமாகிய சைவசித்தாந்தக் கொள்கையானது, குறுகிய நோக்கும் போக்கும் கொண்டதாகாமல், விரிந்து பரந்த பெருநோக்கு உடையதாய், உலகளாவிய சமயம் (Universal Religion) ஆகும். ''ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென ஆலவாயில் உறையும் எம் ஆதியே'' எனத் திருஞானசம்பந்தரும், ''ஆதிபகவன் முதற்றே உலகு'' எனத் திருவள்ளுவரும், ''உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு'' என நக்கீரரும், ''உலகெல்லாம் உணர்ந்து ஓதற் கரியவன்'', ''மன்றுளார் அடியார் அவர் வான் புகழ் நின்றதெங்கும் நிலவி உலகெலாம்'' எனச் சேக்கிழார் பெருமானும், பிறரும் அருளிச் செய்திருத்தல், அவர்களின் விரிந்து பரந்த உலகப் பெருநோக்கினை வெளிப்படுத்தும். சைவசித்தாந்த சமயமானது, எந்த ஒரு சமயத்தையும் இகழ்ந்து ஒதுக்காமல், எத்தகைய பிணக்கும் பூசலும் இன்றி, எல்லாச் சமயங்களையும் ஏற்ற பெற்றி தழுவிப் போற்றிக் கொள்ளும்.

''ஓது சமயங்கள், பொருள் உணரும் நூல்கள்,
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும்;
இவற்றுள்
யாதுசமயம்? பொருள் நூல் யாது? இங் கென்னில்,
இதுஆகும் அதுஅல்லது என்னும் பிணக்க
தின்றி,
நீதியினால் இவை எல்லாம் ஓர் இடத்தே காண
நின்றதுயா தொருசமயம் அதுசமயம்;
பொருள்நூல்;
ஆதலினால் இவைஎல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கியிடும்; அவையிரண்டும் அரனடிக்கீழ்
அடங்கும்''
(சுபக்கம் 265)

எனவரும் சிவஞான சித்தியார் (9.13) செய்யுளால், இவ்வுண்மை செவ்விதில் தெளியப்படும்.

சைவசித்தாந்த சமயமானது, எந்தஒரு சமயத்தினையும் இகழாமல், ஏற்றபெற்றி சோபான முறையில் எல்லாவற்றையும் தழுவிப் போற்றி நிற்கும் தன்மையினை, ''முத்தியை முற்ற வைத்தார், முறைமுறை நெறிகள் வைத்

(4) "The recent developments of western philosophy and physical science go every inch to prove the truth and value of all the fundamental doctrines that are peculiar only to the Saiva Siddhanta and not to any other religion or philosophy, ancient or modern".

—Maraimalai Adigal

தார்'' எனவரும் திருநாவுக்கரசர் திருமொழி யாலும் உணரலாம். மற்றும் நம் சுந்தரமூர்த்தி சுவாமிகள், ''அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்'' என்று அருளிச் செய்ததும்; அதன் நுண்பொருட் கருத்தினை ஆசிரியர் சேக்கிழார் பெருமான் ,''மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டிற்கு அப்பால், முதல்வனார் அடிச்சார்ந்த முறைமையோரும், நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும் நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும், சேவேந்து வெல்கொடியான் அடிச்சார்ந்தோரும், செப்பிய அப்பாலும அடிச்சார்ந்தார் தாமே'' என்று விளக்கியிருப்பதும், இங்கு நாம் கருதியுணர்ந்து இன்புறற் பாலனவாகும்.

''ஒன்றது பேரூர் வழிஆறு அதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே'
—திருமூலர்.

''வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம்பொருளே; நின்விளையாட் டல்லால்
மாறுபடும் கருத்தில்லை; முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல், வயங்கிற்று அம்மா!'
—தாயுமானவர்.

## நடைமுறைக்கு இயைந்தது;

உலகிற் பல தத்துவக் கொள்கைகள் மக்கட் சமுதாய வாழ்வின் நடைமுறைக்கு ஏற்ப அமையாமல் இருப்பதுண்டு. சமயங்கள் பெரும்பாலும் இம்மை வாழ்வியலைத் தழுவாமல், மறுமைப் பயனியலையே எதிர்நோக்கி மருள் நோக்கு உடையனவாக (Unwordly & Other Wordly; Pessimistic) அமைந்துள்ளன என அறிஞர்கள் பலர் குறைகூறுவதுண்டு. சைவசித்தாந்தம் அத்தகைய குறையுடையதன்று. ''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம், வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை'' எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரம், இங்கு நாம் எண்ணி எண்ணி மகிழ்ந்து பெருமிதம் கொள்ளுவதற்குரிய சிறப்புடையதாகும். ஆதலின் சைவசித்தாந்தம் எனும் நமது தமிழ்நாட்டுத் தமிழ்நெறிப் பண்பாட்டுக் கொள்கையானது, இம்மை வாழ்க்கை நெறக்குப் பெரிதும் இயைந்து நிற்பதொன்றேயாகும். நமது முன்னைத் தமிழ்ப் பெருஞ்சான்றோர்களின் பண்பாட்டு வாழ்க்கை நெறி, சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையாக முகிழ்த்து அரும்பி மலர்ந்து மணம்கமழ்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்து விளங்குகின்றது,

## உலகியலொடு தழுவியது:

சைவசித்தாந்தப் பெரும் சான்றோராகிய அருள்நந்திசிவம், சமய தத்துவக் கொள்கைகள் மக்களின் நடைமுறை வாழ்வில் பிரிவற ஒன்றிச் செயற்படுத்தப் பெறுதல் வேண்டும் என்னும் கோட்பாடு உடையவர். சமயம் வேறு, வாழ்க்கை வேறு என்று இல்லாமல், ''சமயமே வாழ்க்கை, வாழ்க்கையே சமயம்'' என்னும் நிலையில் அமைதல் வேண்டும் என்பது அவர்தம் அருள்உள்ளம்! ஆதலின் சமய வாழ்வில் தலைப்பட விரும்பும் தக்கோர் அனைவரும் பின்வரும் பதினாறு இயல்புகளை இயல்பாக உடையவராதல் வேண்டும் என்று குறிப்பிட்டு அருளுகின்றார்.

1. உயர்ந்தவரோடு பொருந்த நடத்தல்
2. யாரிடத்தும் அன்பாகப் பழகுதல்.
3. எளியாரிடத்தும், சிற்றுயிர்கள் மாட்டும் இரக்கம் கொள்ளுதல்.
4. உலக இயற்கை அறிந்து அதற்குஏற்ப நடந்து கொள்ளும் திறம்
5. யாவர் இடத்தும் இன்முகம் காட்டி, இன்சொற் கூறி நலம்புரியும் தன்மை
6. எல்லோரையும் அன்பினால் இனிய தொடர்புடையவர்களாகச் செய்து கொள்ளும் உயரிய பண்பு.
7. நல்ல பண்புகள் பலவும் அமைந்து விளங்குதல்.
8. ஐம்பொறியடக்கல், நல்லன கடைப்பிடித்தொழுகுதல்.
9. தக்கோர்க்குத் தக்கபடி இயன்றன கொடுத்து உதவிபுரியும் இயல்பு.
10. அறிவும் அகவையும் அநுபவமும் முதலியவற்றால் மூத்தவர்களிடம் பணிவு தோன்ற ஒழுகுதல்.
11. எவர்மாட்டும் செருக்கின்றி நயமாகக் கலந்து பழகி இனிது அளவளாவுதல்.
12. பிறன்மனை விழையாமை, பிறன் பொருள் வெஃகாமை முதலிய நற்பண்புகளைப் பெற்றுத் திகழும பற்றற்ற தூய உணர்வு.
13. உண்மை கடைப்பிடித்து, வாழ்தல்.
14. மறந்தும் தீநெறிப்படராது அறநெறியே போற்றி அடங்கி வாழ்தல்.
15. தக்கதுஇது தகாததுஇது என்று,பகுத்தறிந்து வாழவல்ல திறமுடைமை.
16. சான்றோர்களையும், சான்றோர்களின் கொள்கைகளையும் போற்றித் தழுவி, மன்னுயிர்நலங் கருதிப்பணியாற்றுதல்.

இவைகளும், இவைகளைப் போன்ற பிற பண்பொழுக்க நலங்களும் எல்லாம், நம் தமிழ் நாகரிகப் பண்பாடுகளேயாம் என்பது, சொல்லாமலே பெறப்படும். இத்தகைய தமிழ் நாகரிகப் பண்பாடுகளின் பயனும் சாரமுமே, சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கையாக உருப்பெற்று வடிவெடுத்து அமைந்தன எனலாம். பின்வரும் பாடலில் இவைகள் சுட்டப்பெற்றிருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம்
அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனால்
இரங்குவான் பணி அறங்கள்!''.

—சித்தியார் 2:23

## பரந்த நோக்கமுடையது :

சமயங்கள் முற்போக்குணர்வுக்குத் தடை செய்வன என்றும், சீர்திருத்தச் செயல்களை எதிர்ப்பன என்றும், மக்கள் வாழ்வியலைப் பல வகைக் கட்டுப்பாடுகளால் முடக்கி விடுவன என்றும், ஒருசிலர் குறைகூறுவதுண்டு. சைவ சித்தாந்தம் அத்தகைய குறைபாடுகளை உடையதன்று.

''தொன்மையவாம் எனும் எவையும்
நன்றாகா, இன்று
தோன்றுவன எனும் எவையும் தீதாகா''

என உமாபதிசிவம், தமது சிவப்பிரகாசம் எனும் நூலில் முழங்கியிருத்தல், சைவ சித்தாந்த சமயம் முற்போக்குணர்வுக்குத் தடை செய்வதோ, சீர்திருத்தச் செயல்களை எதிர்ப்பதோ அன்று என்பதனைத் தெளிவுறுத்தும்.

''எந்நிலையில் நின்றாலும் எக்கோலம்
கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை
பொருள்''

எனச் சேக்கிழார் பெருமான், பெரியபுராணத்தில் அருளிச் செய்திருத்தல் ஒன்றே, சைவசித்தாந்தம் எத்தகைய விரிவான சிறந்த நல்ல பெருநோக்குடைய சமயம் என்பதற்குச் சான்று பகரும்.

''சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்!
கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்?
பாத்திரம் சிவம் என்று பணிதிரேல்,
மாத்தி ரைக்குள் அருளும் மாற்பேறரே''

—அப்பர்)

''யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே''

—திருமூலர்

என்பன போன்று வரும் அருளுரைகள், சைவ சித்தாந்தம் எத்தகைய இனிய எளிய நன்னெறி என்பதனை நன்கினிது புலப்படுத்தும். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'-'எவ்வுயிரும் நீங்காது உறையும் இறைசிவம் என்று எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு'' - ''அன்பே சிவம்'' என்பன போலவரும் திருமொழிகள் பலவும், இங்குநாம் சிந்தித்து மகிழத்தக்கன. (5)

## எல்லோருக்கும் ஏற்றது:

''சைவசித்தாந்தம் எல்லாச் சமயங்களையும் ஏற்றபெற்றி இசைந்து ஏற்பது: எதனையும் இகழ்ந்து ஒதுக்காமல், இனிது அணைத்துத் தன்னுட் பொதிந்து கொள்வது; உலகம் முழுவதற்கும் ஏற்புடைய மனித குல சமயமாகத் திகழ்வது: வேறு பிற எந்தச் சமயத்தின் வளர்ச்சியையும், அஃது எதிர்க்கக் கருதுவதில்லை. ஏன் எனில், பிற எல்லாச் சமயங்களையும் தன்னோடு அணைத்துத் தழுவிப் போற்றிக் கொள்வதில் அதற்கு இடர்ப்பாடு ஏதுமில்லை. ஒவ்வொருவருடைய உள்ளத்திற்கும் நிறைவு அளிக்கத்தக்கவகையில், அது சால்புமிக்கு விளங்குகின்றது. பல்வேறு மனித இயல்பிற்கும் ஒழுக்கத்திற்கும் ஏற்புடையதாகச் சைவ சித்தாந்தம் தன்னை ஆக்கிக்கொள்ளவல்லதாக உள்ளது.''

''நுண்பொருள் தத்துவ அறிஞர்களுக்குரிய ஆன்மிக அருவக் கூறும், கவிதையுணர்வும் கற்பனைத் திறனும் மிக்கவர்களுக்குரிய நடைமுறைப் பருவடிவக் கூறும், அமைதியை நாடும் தனிமை விரும்பிகளுக்குரிய சாந்திநலம் மிக்க சிந்தனைக் கூறும், ஒருசேர வாய்ந்ததாகத் தலைசிறந்து விளங்குகின்றது'' எனப் பொது வகையில் இந்துமதம் பற்றிச் சர். மானியர் வில்லியம்ஸ் என்னும் பேரறிஞர் கூறுவது, நம்முடைய சைவசித்தாந்தத்திற்கும் சாலப் பொருந்தும் எனலாம்.(6)

---

(5) ''A characteristic of Saiva Siddhanta is its receptivity and all-comprehensiveness. It claims to be the one religion of humanity, of human nature, of the entire world. It cares not to oppose the progress of any other system. For it has no difficulty in including all other religions within its all-embracling arms and ever-widening fold.

And in real truth, Saiva Siddhanta has something to offer which is suited to all minds. Its very strength lies in its infinite adaptablity to the infinite diversities of human character and human tendencies. It has highly spiritual and abstract side suited to the metaphysical philosophy, its practical and concrete side suited to the man of poetic feeling and imagination, its quiescent and contemplative side suited to the man of peace and lover of seclusion''.

—Monier Williams

**முடிவுரை:**

இத்தகைய பலபெருஞ் சிறப்புகளை உடைய நம்முடைய சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையானது, ஆயுந்தோறும் அறிஞர்களுக்கு ஆராப் பெருவிருந்தாக அமைந்து விளங்குகின்றது. ''ஆர் அறிவார் இந்த அகலமும் நீளமும்'' எனத் திருமூலர் பாடுவதுபோல, அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழியின் அகலமும் நீளமும், ஆராய்ந்து இன்புற விழைவோர் அனைவரும், சைவத் திருமுறைகளையும், சைவசித்தாந்த சாத்திரங்களையும் புறக்கணித்து ஒதுக்காமல், விரும்பிக் கற்று மகிழும் கடப்பாடு உடையவராவர். இம்மை வாழ்வில் இதனின் மிக்க இன்பப் பேறு பிறிது ஒன்றில்லை எனத் துணிந்து கூறலாம். ஜான் மில்டன் என்னும் ஆங்கிலப் பெருங் கவிஞர் பாடுவதுபோல,

''எத்தகை இன்ப ஊற்றாய்
இறையருள் நூல்கள் உள்ள!
அத்தகை யவற்றை அந்தோ,
அறிவிலார் கடினம் என்பர்!
வித்தகக் கண்ணன் ஊதும்
வேய்ங்குழல் இசைபோல் இன்பம்
மிக்கொளிர்ந்து, அறிஞர்க்கு ஆரா
விருந்தென மிளிரும் நன்றே'' (7)

—ந. ரா. முருகவேள்.

என்று நாமும் நமது சைவசித்தாந்தம் பற்றிப் பாடி மகிழலாம். கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானியாகிய தேல்சு என்பார், தாம் ஒரு விலங்காக அல்லாமல் மனிதனாகவும், பெண்ணாக அல்லாமல் ஆணாகவும், காடனாக அல்லாமல் கிரேக்கனாகவும் பிறந்ததற்குப் பெருமிதம் கொண்டு மகிழ்கின்றார். அதுபோல நாமும் ''நரர்பயில் தேயம் தன்னில், நான்மறை பயிலா நாட்டில் விரவுதல் ஒழிந்து'' தமிழராகவும், சைவராகவும், சைவசித்தாந்தச் செந்நெறியாளராகவும் பிறக்கப் பெற்றமை குறித்துப் பெருமிதம் கொண்டு மகிழலாம்.

மனிதனாய், ஆணாய்க், கிரேக்கனாய் பிறந்த
மாட்சிமைக்கு அறிஞர்தாம் ஒருவர்,
நனிமிக மகிழ்ந்தார்; நலம்மிகு தமிழன்,
நற்சைவன், சைவசித்தாந்தி,
எனஇவண் பிறந்த இனியநற் பேற்றை,
எண்ணி, நாம் இறையருள் வழுத்தித்,
துனியறு சைவத் செந்தமிழ் வளர்க்கும்
தொண்டுகள் புரிந்துநன் றுய்வாம் (8)

—ந. ரா முருகவேள்.

---

(7) "How Charming is divine philosophy! Not harsh and crabbed as dull foods suppose! But musical as is Appollo's lute, And a perpetual feast of nectar'd sweets, Where no crude surfeit reigns"

—John Milton, Comus.

(8) "The three blessings for which I am grateful to Fortune are, first that I was born a human being and not one of the brutes, second that I was born a man and not a woman, third that I was born a Greek and not a barbarian."

—Thales, in Diogenes Laerte's 'Thales'.

---


# சைவசித்தாந்தம்

அறிவிற் கியைந்தது1; காரண காரிய மாம்தருக்க
நெறியினுக் கேற்றது2; உலகளாய்3 ஓங்கும்4 நிலையினது;
நறியவிஞ் ஞான நலத்தது5; செய்கை6 நயம்7மிக்கது;
செறிதரும் முற்போக்குச்8 செந்தமிழ்9 நற்10சைவ சித்தாந்தமே!

— ந. ரா. முருகவேள்

1. Rational
2. Logical
3. Universal
4. Perennial
5. Scientific
6. Practical
7. Comprehensive
8. Progressive
9. Liberal & Natural
10. Gratifying all.


---




ஆரணியில் நடைபெற்ற கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் திரு ஏ.சி. சண்முகம் அவர்கள், சத்துணவுத் திட்ட உயர்மட்டக்குழு உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வி ஜெயலலிதா அவர்களிடம் வெள்ளி வாள் ஒன்று வழங்கினார். அந்த வெள்ளி வாளினை மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் கோயிலில் வைத்தற் பொருட்டு, செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் அறநிலையத்துறை ஆணையர் திரு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ். அவர்களிடம் வழங்குதல். (5.4.84).



இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர் களிடம், 466 கிராம் எடையும் ரூ. 3,000 மதிப்பும் உடைய வெள்ளி வேல் வழங் கப்பட்டது. இதனைத் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக் கோயிலுக்கு வழங்க, அறநிலைய அமைச்சர் அவர்கள், அறநிலைய ஆணையர் திரு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ். அவர்களிடம் வழங்குதல் (19.4.84).



தமிழ்நாடு அரசு அலுவலர் கழகத்தினர் (சி. & டி. பிரிவு), சென்னையில் நடைபெற்ற அலுவலர் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கிய தங்கவேல் மற்றும் வெள்ளிவாள் - கேடயம் ஆகியவற்றைத் திருச்செந்தூர், திருவேற்காடு ஆலயங்களில் வைப்பதற்காகச் செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், தலைமைச் செயலகத்தில் அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு கு. ஆளுடையபிள்ளை ஐ.ஏ.எஸ். அவர்களிடம் 29 3.84 அன்று வழங்கினார்கள்.



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.